விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 22 வெள்ளிக்கிழமை (05.04.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 107

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

### சுன்னாகம் நிலத்தடி நீர் மாசு வழக்கு

# 500 குடும்பங்களுக்கு

# 2 கோடி ரூபாய் இழப்பீடு



## உயர் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

(கொழும்பு)

சுன்னாகம் நிலத்தடி நீர் மாசடைவதற்கு காரணமாக அமைந்த நொதேர்ண் பவர் நிறுவனம், பாதிக்கப்பட்ட 500 குடும்பங்களுக்கு 2 கோடி ரூபாய் இழப்பீட்டை வழங்குமாறு உயர் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை தீர்ப்பளித்தது. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா 40 ஆயிரம் ரூபாயுக்கு குறையாத நட்டஈட்டுத் தொகையை செலுத்த வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

(23ஆம் பக்கம் பார்க்க)

### பொறுப்புக் கூறலுக்கு
## அரசு இதுவரை என்ன செய்துள்ளது
### கூட்டமைப்பு கேள்வி

(கொழும்பு)

உள்நாட்டு பொறிமுறையின் கீழ் பொறுப்புக்கூறலை நிறைவேற்ற அரசாங்கம் இதுவரை என்ன செய்துள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத் 23

## தமிழரை கண்டு அஞ்சவேண்டாம்
### உதய கம்மன்பில

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள் பேரவை குரைக்கும் நாயே தவிர கடிக்கும் நாயல்ல.

எனவே, சர்வதேச நீதிமன்றத்தை அமையுங்கள் என வலியுறுத்துவதை கண்டு அரசாங்கம் அஞ்சி விட வேண்டாம் 23

## ஐ.நா பிரதிநிதியுடன் மகிந்த முக்கிய பேச்சு



(கொழும்பு

எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் வதிவிடபிரதிநிதி ஹனா சிங்கரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குறித்த சந்திப்பு நேற்று வியாழக்கிழமை 24

## ஜனாதிபதி மைத்திரி - மகிந்த பேச்சுவார்த்தை தோல்வி

### தீர்மானம் எடுக்காமல் கலந்துரையாடல் முடிவு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று நடத்தப்பட்ட கலந்துரையாடல் எவ்வித தீர்மானமும் எடுக்கப் 23



## 11 இளைஞர்கள் கடத்தல் விவகாரம்

### கடற்படை தளபதியிடம் 8 மணி நேர விசாரணை

(கொழும்பு)

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவிடம் குற்றப்புலனாய்வு திணைக்களம் நேற்று 8 மணி நேரம் விசாரணை நடத்தியுள்ளது. கடந்த 2009ஆம் ஆண்டு 11 23

### தமிழ் மக்களின் காணியை
## அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும்
### தினேஷ் குணவர்தன

(கொழும்பு)

யுத்தத்தின் பின்னர் வடக்கில் பத்து ஆண்டுகளாக இராணுவ முகாம்களுக்குள் சிக்கியுள்ள ஆலயங்களில் அம்மக்களுக்கு வழிபட இடமளிக்க வேண்டும் 02

## தமிழ் மக்களின் ஆதரவுடன் விரைவில் ஆட்சி மாற்றம்

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் முழுமையான ஆதரவுடன் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்படும் என எதிர்க்கட்சி தலைவர் மகந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வன்னி மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தினருக்கும் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வியாழக்கிழமை பாராளு 23

### அன்பு வாசகர்களே...



கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுக்கு புருசோத்தமன் எழுதும் கடிதம் இன்றைய வலம்புரியில்...
வாசிக்கத் தவறாதீர்கள்...!

### பிரபாகரனின் பேச்சை கேட்டிருந்தால்
## முஸ்லிம் மக்களுக்கு இந்த நிலை வந்திருக்காது



(கொழும்பு)

பிரபாகரனின் பேச்சைக் கேட்டு செயற்பட்டிருந்தால் முஸ்லிம்கள் இன்றும் மன்னாரில் வாழ்ந்திருப்பார்கள். அப்போது வில் 23

## வரவு-செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு இன்று

(கொழும்பு)

இலங்கை ஜனநாயகச் சோசலிசக்குடியரசின் 73ஆவது வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு இன்று காலை 9.00 மணிக்கு பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

சபாநாயகர் கருஜெயசூரிய தலைமையில் கூடவுள்ள பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்ட அமைச்சர் பாட்டாளி சம்பிக்க ரணவக்கவின் நகர மற்றும் 23

## எச்சரிக்கை
### இன்று தொடக்கம் சூரியன் உச்சம்

(கொழும்பு)

இன்று முதல் எதிர்வரும் 15ஆம் திகதி வரை சூரியன் இலங்கைக்கு நேரடியாக உச்சங் கொடுக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு 23

### மண்டைதீவு மனிதப்புதைகுழி தொடர்பாக
## காணாமல் போனோர் அலுவலகத்தில் சிறீதரன் நேற்று சாட்சியம் பதிவு

(கொழும்பு)

மண்டைதீவில் அமைந்துள்ளதாக கருதப்படும் மனிதப்புதைகுழிகள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நேற்று காணாமல் போனோருக்கான அலுவலகத்தில் [illegible] சாட்சியம் பதிவு செய்தார் 23

### க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறு
## வடக்குக் கிழக்கில் யாழ்.வலயம் முதலிடம்

(கொழும்பு)

2018ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சைப் பெறுபேற்றின் பகுப்பாய்வுகளின் அடிப்படையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள கல்வி வலயங்களில் யாழ்ப்பாணக் கல்வி வலயம் முதன் நிலையில் உள்ளது. அகில இலங்கை ரீதியில் யாழ்ப்பாணக் கல்வி 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம். K.K.S றோட், சுன்னாகம்
(இரு இடத்திலும்)

**A/L 2021**
**கலை, வர்த்தகப்பிரிவு**
யாழ் மாவட்டத்தின் பிரபலம் பெற்ற ஆசிரியர் குழுவினரால்

**பிரிவு 2 நாளை ஆரம்பம்**
**06.04.2019 சனிக்கிழமை**

| | |
|---|---|
| பொருளியல் | - R.தர்ஷன், S.மகேந்திரன் |
| கணக்கீடு | - B.முகுந்தன் |
| வணிகக்கல்வி | - S.பிரதீபன் |
| I.C.T | - T.சுதர்ஷன் |
| தமிழ் | - N.சத்தியவேந்தன் |
| இந்துநாகரிகம் | - P.ஜோதீஸ்வரன், A.மேனன் |
| அளவையியல் | - S.சயந்தன், N.ஜெயசுரேஸ் |
| புவியியல் | - P.S.குமரன் |
| வரலாறு | - K.சுதன் |
| அரசியல் | - S.கோகுலன் |
| ஊடகக்கல்வி | - K.ஜதீரன் |
| விவசாய விஞ்ஞானம் | - S.சஞ்ஜீவன் |
| நாடக- அரங்கியல் | - T.ஜெயதகன் |
| இந்து சமயம் | - A.மேனன் |
| கிறிஸ்தவம் | - J.வசந்தன், A.யுபின்சன் |
| ஆங்கிலம் | - K.நிஷாந்தன் |
| சங்கீதம் | - S.குமுதினி |
| மனைப்பொருளியல் | - K.றஜிதா |

உங்கள் அனுமதிகளை யாழ்.நகர், சுன்னாகம் இருஇடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
**தொடர்பு: 0773763511**



## வேலைவாய்ப்பு

O/L பரீட்சையில் சித்தியடையவில்லையா? கவலையை விடுத்து இன்றே எமது நிறுவனத்துடன் இணைந்து கொள்ளுங்கள். முகாமைத்துவத்துறையில் சாதனை படைக்க அரியதோர் சந்தர்ப்பம். யாழ்ப்பாணம், வவுனியா கிளைக்கு 40க்கும் மேற்பட்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- நிர்வாக உதவியாளர்
- முகாமையாளர்
- உதவிமுகாமையாளர்
- வரவேற்பாளர்.

நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பினை மேற்கொள்ள முடியும்.
அனுபவம் தேவையில்லை. வயதெல்லை 18 - 30.
**தொடர்பு: 076 666 8385**
(8367)



## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகர், நல்லூர், கச்சேரி, திருநெல்வேலி போன்ற பிரதேசங்களில் வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு:
**076 438 9429**
(8364)


# தமிழ் இதழியல் மாநாடு யாழில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

4ஆவது பன்னாட்டு தமிழ் இதழியல் மாநாடு யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. மக்கள் இதழியல் அமைப்பின் ஏற்பாட்டில் இரு நாள்களாக அமர்வு இடம்பெறவுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழக ஊடகத்துறை மற்றும் தொடர்பாடல் பிரிவு தலைவர் பேராசிரியர் கோபாலன் ரவீந்திரன் தலைமையில் இடம்பெறும் ஆரம்ப நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் மதிப்புறு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இன்று காலை 8.30 மணிக்கு பதிவுகளுடன் நிகழ்வு ஆரம்பமாகும். காலை 9.10 மணிக்கு தமிழ்நாடு பாரம்பரிய நடனத்துடன் மங்களவிளக்கேற்றல் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து ஆசியுரைகளை, சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு.திருமுருகன் வழங்குவார்.

தலைமையுரை காலை 10.15 மணிக்கு இடம்பெறும். அதனை சென்னைப் பல்கலைக்கழக ஊடகத்துறை மற்றும் தொடர்பாடல் பிரிவு தலைவர் பேராசிரியர் கோபாலன் ரவீந்திரன் நிகழ்த்துவார். (ம-9)


## விற்பனைக்கு

- கல்வனைசு இரும்பு முட்டு (Acro Props)
- இரும்பு சாரம் (Scaffolding)
- "U" கப்
- கல்வனைசு பைப் (Pipe)

**தொடர்பு: 076 317 2383**
(கு-5966)



WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(கு-5952)



## பெண் வேலை ஆட்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பெண் வேலை ஆட்கள் உடன் தேவை.வயது 18 தொடக்கம் 30 வரை வேலை நேரம் :-காலை 7.30 தொடக்கம் மாலை 5.30 வரை. தொடர்பு:
**076 118 4010**
(8359)



## தேவை

அச்சகமொன்றில் பணிபுரிவதற்கு கணினியில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை. **0767046669,**
தொடர்பு: **0710325969**


## 16ம் நாள் சபிண்டீகரண கிரியை அழைப்பு

கடந்த 23.03.2019 சனிக்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**அமரர் தையல்நாயகி செண்பகவரதசேனாதிராசா**



அவர்களின் சபிண்டீகரண கிரியை நிகழ்வு நாளை மறுதினம் (07.04.2019) ஞாயிற்றுக்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில் (இல.18, குமாரசாமி வீதி, கந்தர்மடம்) இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதரவும்.

54, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். - மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை
(கு-5984)


## ஏல விற்பனை

**யா/யாழ். மத்திய கல்லூரியின் பழைய கட்டிடப்பொருள்**

யா/யாழ் மத்திய கல்லூரியின் கட்டடத் திருத்தத்தின் போது பழைய கட்டடத்திலிருந்து அகற்றப்பட்ட கதவுகள், யன்னல்கள், அயன் கிறில், மின்விசிறி போன்ற பொருட்கள் 18.04.2019 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் யா/யாழ் மத்திய கல்லூரி வளாகத்தில் ஏல விற்பனை செய்யப்படவுள்ளது.மேலதிக விபரங்களை பாடசாலை நேரத்தில் பாடசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம்.
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**
(கு-5983)



## சிங்களம்

அடிப்படையிலிருந்து அனைத்து வயதினருக்கும் ஏற்ற பாடநெறி
**சனி, ஞாயிறு மாலை 4.00 மணி**
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன.
**06.04.2019 சனிக்கிழமை முதல்**
**British College of Higher Studies**
Sirambiyady Lane, Jaffna.
021 222 4550/ 076 138 0202
(கு-5985)


## அரசு...

என எதிர்க்கட்சி உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதேபோல் தமிழ் மக்களின் காணிகளை உடனடியாக விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், மொரஹாகந்த நீர்த்தேக்கத்தின் மூலமாக வடக்குக்கு நீரை கொண்டுசென்றால் வடக்கு மக்களின் நீண்டகால நீர் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-3)

## புத்தூர் ஸ்ரீசோமாஸ் கந்த கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் - 2019

| | |
|---|---|
| காலம் | - 21.04.2019 ஞாயிற்றுக்கிழமை |
| நேரம் | - காலை 10.00 மணி |
| இடம் | - குமாரசாமி மண்டபம், சோமாஸ் கந்த கல்லூரி |

**நிகழ்ச்சிகள்**

01. ஆவரங்கால் சிவன் கோவிலடியில் இருந்து பழைய மாணவர்களின் நடைபவனி காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.
02. புதுவருட பொங்கல் விழா.
03. பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்.
04. காலை 10 மணிக்கு வருடாந்த பொதுக்கூட்டம்.
05. மதிய போசனம்.

பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதுவரை ஆயுட்கால அங்கத்துவம் பெறாதவர்கள் ரூபாய் 500/= செலுத்தி அங்கத்தவராகுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

Dr.சி.கே.சிவபாலசிங்கம்
செயலாளர்.
(8353)

## தவத்திரு வே.முருகேசு சுவாமி அவர்களின் ஞாபகார்த்தமாக இடம்பெறும் வருடாந்த கும்பாபிஷேக தினம்



**06.04.2019**
**சனிக்கிழமை காலை எட்டு மணியளவில் சந்நிதி வேலவனின் சங்காபிஷேக நிகழ்வுடன் கூடிய சண்முக அர்ச்சனையும் சுவாமி வீதி வலம் எழுந்தருள் நிகழ்வும் இடம்பெறும்.**

அடியவர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(8355)

செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.
சுவாமி அவர்களின் அடியவர்கள் சார்பில்
**ஆ.அருணாசலம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

“நந்திக்கொடி நிமிர்த்தி நயமுடன் நாம் உரைப்போம்; தமிழர்கள் நாம் இந்துக்கள்”

# இந்து மதத்திற்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்து

# மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயம் முன் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

**இந்து மதத்திற்கு எதிரான தொடர் வன்முறைகளைக் கண்டித்து அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை மருதனார்மடம் ஸ்ரீசுந்தரேச ஆஞ்சநேயர் ஆலய முன்றலில் நடைபெறும்.**

“நந்திக் கொடி நிமிர்த்தி நயமுடன் நாம் உரைப்போம் தமிழர்கள் நாம் இந்துக்கள்” எனும் தொனியில் இடம்பெறும் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் இலங்கையில் அண்மைக் காலமாக இந்து சமயத்திற்கும் இந்துக்களுக்கும் எதிராக இடம்பெறும் மத வன்முறைகள் நன்கு திட்டமிட்ட பாரிய மதமாற்ற நடவடிக்கைகள் ஐயாயிரம் ஆண்டுகள் பழைமையான திருக்கேதீச்சர ஆலயத்தின் வளைவு மீதான வன்முறைகள் மன்னார் நானாட்டான் காளியம்மன் சிலையுடைப்பு வன்முறைகளைக் கண்டித்து அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ள வருமாறு இந்து சமய அமைப்புகளின் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. (இ-10)

## நாட்டிற்கு விரோதமாக செயற்படும்

# மங்களவை உடன் பதவி நீக்குமாறு மைத்திரியிடம் மகிந்த அணி கோரிக்கை

(கொழும்பு)

நிதியமைச்சரை பதவி நீக்கம் செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு, மகாவலி மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம் பெற்றது.

இந்த குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்து வெளியிடும் போதே எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.




அண்மையில் ஜெனிவாவிற்கு சென்ற இலங்கை குழுவினரை நிதியமைச்சர் மங்கள சமரவீர காரசாரமாக விமர்சித்திருந்தார். இதன் மூலம் அவர் நாட்டிற்கு விரோதமாக செயற்பட்டு வருவதாக வீரவன்ச சுட்டிக்காட்டினார்.

எனவே நாட்டிற்கு விரோதமாக செயற்பட்டு வரும் நிதியமைச்சர் மங்கள சமரவீரவை அந்தப் பதவியிலிருந்து நீக்குமாறும் விமல் வீரவன்ச ஜனாதிபதியிடம் கோரியுள்ளார். (இ-7)

# அலரிமாளிகையில் துப்பாக்கிச் சூடு!

## STF அதிகாரி உயிரிழப்பு

(கொழும்பு)

பொலிஸ் விசேட அதிரடிப் படை உத்தியோகத்தர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார். அலரி மாளிகையில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார். தன்னுடைய உத்தியோக பூர்வ துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு அவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந் நிலையில் இது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# அலரிமாளிகைக்குள் அமெரிக்க நிறுவனம்

## வீரவன்ச விடாப்பிடி சாகலவுக்கு நெருக்கடி

(கொழும்பு)

அலரி மாளிகையில் புதிதாகச் செயற்படும் அமெரிக்க நிறுவனமான மிலேனியம் சவால் நிதியத்தினால் இலங்கைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார். இது குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், பிரதமர் ரணில் அண்மையில் அமைச்சரவை பத்திரம் ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

அதில் இலங்கையில் காணி அளவீட்டுக்காக 150 அமெரிக்க டொலர்கள் அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு செலவிடப்பட்டுள்ளது.

இலங்கையில் காணி அளவீட்டு நடவடிக்கையை எந்த நிறுவனத்திற்கு வழங்குவது என்று தீர்மானிப்பதற்காக உப குழுவில் நான்கு அமெரிக்கர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது வெள்ளையர்களின் நாடா? இது பலருக்குத் தெரியாது, இது அலரிமாளிகைக்குள் முன்னெடுக்கப்படுகின்றது. இதனை சாகல ரத்நாயக்க அறிவார் என்றும் விமல் வீரவன்ச சுட்டிக்காட்டினார்.

இதன் போது கருத்து வெளியிட்ட அமைச்சர் சாகல ரத்நாயக்க, விமல் வீரவன்ச அதனை நிரூபிக்கவில்லை என்றால் உடனே பதவி விலக வேண்டும் என்று கூறினார்.

இதேவேளை, இதற்கு பதில் வழங்கும் விதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் அலரி மாளிகையில் இருந்து கடிதம் ஒன்றை நான் பெற்றுள்ளேன். 2019 பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்டுள்ளது. ஆதாரம் என்னிடம் உள்ளது, சாகல ரத்நாயக்க உடன் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## 20 மாவட்டங்களில் அதிக வெப்பம்!

(கொழும்பு)

நாட்டில் வெப்பநிலை அதிகரித்து வருவதால், 20 மாவட்டங்களில் அதிகரித்த வெப்ப நிலை நிலவக்கூடுமென, வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

புத்தளம், குருநாகல், கொழும்பு, களுத்துறை, கம்பஹா, காலி, மாத்தறை, அம்பாந் தோட்டை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவுமொனராகலை ஆகிய மாவட்டங்களில் அதிக வெப்ப நிலை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், யாழ்ப்பாணம், கிளிநொச்சி,திருகோணமலை, அநுராதபுரம், மாத்தளை, மட்டக்களப்பு,அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் வெப்பநிலை உயர்வாகவே காணப்படுவதாக, வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

அதிக வெப்பநிலை நிலவுவதையிட்டு, பல்வேறு பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாட்டை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அலுக்கோசு பதவிக்கு பட்டதாரியொருவர் விண்ணப்பித்திருப்பது துன்பமான சம்பவம்

(கொழும்பு)

அலுக்கோசு பதவிக்கான நேர் காணலில் பட்டதாரி ஒருவர் பங்குபற்றியுள்ளமையானது, இலங்கையில் இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டதற்கு பின்னர் இடம் பெற்றுள்ள துன்பகரமான சம்பவமாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார். எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், எமது அரசின் காலத்தில் 2012ஆம் ஆண்டுக்குப் பின்னர் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுப்பதை ஒரு கொள்கையாக அமுல்படுத்தியிருந்தோம். ஆனால், அம்முறைமை இன்று சின்னாபின்னமாகியுள்ளது. 70ஆயிரத்திற்கும் அதிகமான பட்டதாரிகள் வேலை வாய்ப்பில்லாது உள்ளனர். வரவு- செலவுத்திட்டத்தில் இது குறித்து எவ்வித கவனத்தையும் அரசு செலுத்தியிருக்கவில்லை.

வரவு- செலவுத் திட்டத்தில் பிரதானமாக பேசப்பட்டதானது, உலகில் உயர்தர பல்கலைக்கழகங்களில் 14 பேருக்கு கல்வி கற்பதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்படுமென கூறப்பட்டமை தொடர்பிலும், 1000 பட்டதாரிகளுக்கு தொழில் பயிற்சி அளிக்கப்படுமென கூறப்பட்டமை தொடர்பில் மாத்திரமேயாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவருள்மிகு குருநாத சுவாமி கோயில்

தெல்லிப்பழை
திருப்பணிச்சபை

### விசேட பொதுக்கூட்டம்

காலம் : 06.04.2019 சனிக்கிழமை
நேரம் : மாலை 4.00 மணி
இடம் : கோயில் மண்டபம்

மேற்படி ஆலய திருப்பணிச்சபையின் விசேட பொதுக்கூட்டத்தில் ஆலயத்தில் நடைபெற வேண்டிய திருப்பணிகள், குடமுழுக்கு, திருப்பணிச் சபை புனரமைப்பு போன்ற விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் உபயகாரர்கள், குருநாதனடியார்கள், அன்பர்கள், அபிமானிகள் அனைவரும் சமுகந்தந்து குருநாத சுவாமியின் பேரருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

தலைவர் (8351) செயலாளர்








# கேள்வி அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி (வடக்கு மாகாணம்)

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான இப்போது தகவுடையோரும் தகைமைபெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

3. கேள்வியாளர்கள் நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.

4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV இலும் மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 0212285932/0212225719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.

6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 05.04.2019 ம் திகதி முதல் 17.04.2019 ம் திகதி வரை மு.ப 8.30 மணி தொடக்கம் பி.ப 16.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா 250/= கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7. கேள்விகள் 18.04.2019 ம் திகதியன்று பிற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய கேள்விச்சபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைகளுக்குமான கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million | Contract Period | Fund | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| 01 | NP/K/RDHS/B/ PSSP/2019/01 | Renavation for MOIC Quarters at DH Akkarayankulam | 0.297 | 1month | PSSP | 3000.00 | 04/08/2019 |
| 02 | NP/K/RDHS/B/ PSSP/2019/02 | Improvement of work at DH Akkarayankulam | 0.507 | 1month | PSSP | 5000.00 | 04/08/2019 |
| 03 | NP/K/RDHS/B/ PSSP/2019/03 | Construction of waste segregation store at DH Akkarayankulam | 0.4 | 1 month | PSSP | 4000.00 | 04/08/2019 |
| 04 | NP/K/RDHS/B/ PSSP/2019/04 | Improvement of Patient screen and Racks at DH Tharmapuram | 0.327 | 1 month | PSSP | 3500.00 | 04/08/2019 |
| 05 | NP/K/RDHS/B/ PSSP/2019/05 | Improvement work for EYE ward DGH Kilinochchi | 0.213 | 1 month | NGO | 2100.00 | 04/08/2019 |
| 06 | NP/K/RDHS/B/ PSSP/2019/06 | Conctraction of Ambulance Park at DH Akkarayankulam | 0.386 | 1 month | PSSP | 3800.00 | 04/08/2019 |
| 07 | NP/K/RDHS/B/ PSSP/2019/07 | Improvement for Covered way at DH Akkarayankulam | 0.194 | 1 month | PSSP | 2000.00 | 04/08/2019 |
| 08 | NP/K/RDHS/B/ PSSP/2019/08 | Construction of Driver Quarters at DGH Akkarayankulam | 2.4 | 3 months | PSSP | 24000.00 | 04/08/2019 |
| 09 | NP/K/RDHS/B/ PSDG/2019/01 | Improvement of Clinics (VP) at DGH Kilinochchi | 0.78 | 2 months | PSDG | 7800.00 | 04/08/2019 |
| 10 | NP/K/RDHS/B/ PSDG/2019/02 | Improvement of Rest Room for Medical Officers at DGH Kilinochchi | 0.754 | 2 months | PSDG | 7500.00 | 04/08/2019 |
| 11 | NP/K/RDHS/B/ PSDG/2019/03 | Improvement of Administrative office at DGH Kilinochchi | 0.0015 | 1 month | PSDG | - | 04/08/2019 |

Dr சி.குமரவேள்
தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
கிளிநொச்சி.

(C-5985)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லி ஏமாற்றம் ஹைதராபாத் வெற்றி



டில்லி அணிக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் பேர்ஸ்டோவ் விளாச ஹைதராபாத் அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியாவில் 12ஆவது ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர் நடக்கிறது. டில்லி பெரோஷா கோட்லா மைதானத்தில் நடந்த லீக் போட்டியில் ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையிலான டில்லி அணி, புவனேஷ்வரின் ஹைதராபாத் அணியை எதிர்கொண்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணியின் தலைவர் புவனேஷ்வர் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**நபி அசத்தல்**

டில்லி அணிக்கு பிரித்வி ஷா, ஷிகர் தவான் ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. புவனேஷ்வரின் முதல் ஓவரில் பிரித்வி இரண்டு பவுண்டரி அடித்தார். மீண்டும் வந்த புவனேஷ்வர் தனது இரண்டாவது பந்தில் பிரித்வி ஷாவை (11) போல்டாக்கினார். ஹைதராபாத் பந்துவீச்சாளர்கள் கட்டுக்கோப்பாக பந்து வீசினர். சித்தார்த் பந்தில் அணித் தலைவர் ஸ்ரேயாஸ் இப்போட்டியின் முதல் சிக்சர் அடித்தார். மொஹமட் நபியின் 'சுழலில்' தவான் (12) ஆட்டமிழந்தார். சிக்சருக்கு ஆசைப்பட்ட ரிஷாப் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சந்தீப் சர்மா பந்துவீச்சில் டிவாட்யா (5) சரணடைந்தார்.

**ஸ்ரேயாஸ் ஆறுதல்**

இங்ராம் (5) அதிர்ச்சி கொடுத்தார். பொறுப்புடன் விளையாடிய அணித் தலைவர் ஸ்ரேயாஸ் 43 ஓட்டங்களில் ரஷிட் பந்தில் ஆட்டமிழந்தார். புவனேஷ்வர் 'வேகத்தில்' கிறிஸ் மோரிஸ் (17) சிக்கினார். சித்தார்த் 'வேகத்தில்' ரபாடா (3) ஆட்டமிழந்தார். கடைசி கட்டத்தில் அக்சர் படேல் இரண்டு சிக்சர் விளாசினார்.

20 ஓவர்களில் டில்லி அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்கள் எடுத்தது. அக்சர் (23), இஷாந்த் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஹைதராபாத் சார்பில் அதிகபட்சமாக புவனேஷ்வர், நபி, சித்தார்த் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

**பேர்ஸ்டோவ் விளாசல்**

எளிய இலக்கை விரட்டிய ஹைதராபாத் அணிக்கு வோர்னர், பேர்ஸ்டோவ் 'சுப்பர்' ஆரம்பம் கொடுத்தது. லமிச்சானேவின் மூன்றாவது ஓவரில் பேர்ஸ்டோவ் அடுத்தடுத்து ஒரு சிக்சர், பவுண்டரி அடித்தார். தொடர்ந்து மிரட்டிய இவர் மோரிஸ் பந்து வீச்சில் மூன்று பவுண்டரி அடிக்க, அணி 5 ஓவரில் 48 ஓட்டங்களை எட்டியது. முதல் விக்கெட்டுக்காக 64 ஓட்டங்கள் சேர்த்தபோது பேர்ஸ்டோவ் (48) ஆட்டமிழந்தார். ரபாடா பந்தில் வோர்னர் (10) ஆட்டமிழந்தார். மணிஷ் பாண்டே (10) ஜொலிக்கவில்லை. அக்சர் 'சுழலில்' விஜய் ஷங்கர் (16) சிக்கினார். தீபக் ஹூடா 10 ஓட்டங்களில் திரும்பினார். இருப்பினும், ரபாடா பந்துவீச்சில் நபி தொடர்ந்து ஒரு பவுண்டரி, சிக்சர் அடித்து வெற்றியை உறுதி செய்தார்.

ஹைதராபாத் 18.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. நபி (17), யூசுப் பதான் (9) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு
1958
04
16

இறப்பு
2019
04
02





(சி-5992)

# அமரர் நாகலிங்கம் மோகன்

**(அம்பாள்குளம் முருகன் ஆலய முன்னாள் தலைவர், கிளிநொச்சி பொதுச் சந்தை நீண்டகால வர்த்தகர்)**

ஓமந்தையை பிறப்பிடமாகவும் திருநகர் தெற்கை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட அமரர் நாகலிங்கம் மோகன் (பபா) அவர்கள் 02.04.2019 (செவ்வாய்க்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-யக்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்றவர்களான செபஸ்ரியான்-மரியமதலேனா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெசிந்தா மேரியின் அன்பு கணவரும், காலஞ் சென்றவர்களான சந்திரன், வீரசிங்கம் (கார் கார சந்திரன்) மற்றும் சியானோனா, பேபி சரோஜா ஆகியோரின் அன்பு சகோதரனும்,

மனோகரன் ( ராஜா லண்டன்), சசிகலா (இந்தியா), டயஸ் கோபிநாத், தீபா மைதிலி, தனுஷா,அனுஷா, கஜனி (கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவி) (திருநகர் ) ஆகியோரின் பாசமிகு தந்தையும், டிலானி (லண்டன்), குணசேகரன் (இந்தியா), தேவி (திருநகர்), சரவணன் (இந்தியா), சுவிதரன் (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், றொசானா, றோகித், தியானா (லண்டன்), கனிகா, யானுகா (இந்தியா), பிரவின், ஸ்டீபன், ( கனகபுரம் மகா வித்தியாலயம்) காவியா, பூர்விகா (கிளி/ இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 05.04.2019 வெள்ளிக்கிழமை பி. ப 02.00 மணிக்கு திருநகரில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனத்திற்காக திருநகர் இந்து பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்.

**இல.1012, திருநகர் தெற்கு, திருநகர்.**

**தகவல்: மருமகன்**
**இராமசாமி கிருஸ்ணகுமார்-077 578 6109**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

கைதடி வீரகத்திப் பிள்ளை யார் கோயில் முதலாய கோவில் களில் வீரகத்திப் பிள்ளையார் மஹோற் சவம் நாளை மறுதி னம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11மணியளவில்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிர ண்டுநாட்கள்திருவிழா நடைபெறும். இம்மஹோற்சவத்தில்18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் தேர்த்திருவிழாவும் மறுநாள் சித்திராப் பூரணையன்று 10.30 மணியளவில் தீர்த்தத்திரு விழாவும் நடைபெறவுள்ளன.(5)



வரணி கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையின் நூறாவது ஆண்டு பாடசாலைத் தினப் பொங்கல் விழா கடந்த திங்கட்கிழமை வித்தியாலய முன்றலில் அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் பழைய மாணவர் கள் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் நாளை மறுதி னம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி சரஸ்வதி மண்ட பத்தில் நடைபெறவுள்ளது. மாண வர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பணிப்பாளர் கேட் டுக் கொண்டுள்ளார். (5)

## விபத்துக்குள்ளாக்கிய ஆட்டோ தப்பிச் சென்றுள்ளது

(தாவடி)

கொக்குவில் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் ஆட்டோ விபத்தில் விபத்தை ஏற்படுத்திய ஆட்டோ தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாகத் தெரிவித்ததாவது யாழ்.காங்கேசன்துறை வீதியின் கொக்குவில் சந்தியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் இடம்பெற்ற விபத்திலிருந்தே குறித்த ஆட்டோ தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸாருக்குத் தக வல் வழங்கப்பட்டதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டுள்ளனர். (5-10-272)

## நிழல் மரக்கன்றுகள் விசமிகளால் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி தச்சன் தோப்புப் பகுதிகளில் நடுகை செய்யப்பட்ட நிழல் மரக் கன்றுகளை கடந்த 2 ஆம் திகதி இனம்தெரியாத விசமிகளால் பிடுங்கி எறியப்பட்டுள்ளன. தச்சன் தோப்புப் பகுதியில் இயங்கும் தனியார் சமூக சேவைகள் நிறுவனம் ஒன்றினால் மர நடுகை வாரத்தை முன்னிட்டு நடுகை செய்யப் பட்ட நிழல் மரக்கன்றுகளே இவ்வாறு பிடுங்கியெறி யப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெறப்பட்டு சாகவச்சேரிப் பிரதேச சபையினல் நீர் பாய்ச்சப்படும் குறித்த மரக்கன்றுகளை தனியார் சமூக சேவை நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் நடுகை செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.(5-10)

## தொழில் தேடும் இளைஞர்கள் யுவதிகளை பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டச் செயல கத்தின் ஏற்பாட்டில் கரவெட்டி பிர தேச செயலகமும் மாவட்ட தொழில் நிலையமும் இணைந்து ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் தொழில் வாய்ப்பற்றிருக்கும் இளைஞர்.யுவ திகளை பதிவு செய்யும் நடவடிக் கைகள் எதிர்வரும் 08.04.2019 அன்று காலை 8.30 மணிமுதல் மாலை 3 மணிவரை அவர்களுக் குரிய கிராம அலுவலர் அலுவல கத்தில் இடம்பெறவுள்ளது.

பதிவு செய்யும் தொழிலற்ற இளைஞர்.யுவதிகளுக்கான,

1. அரச, தனியார் துறைகளில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தல்.
2. தொழிற் பயிற்சிக்காக வாய் ப்புக்களை பெற்றுக்கொடுத்தல்.
3. சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
4. பரீட்சைகளுக்கான வழிகாட் டல் செயலமர்வுகளை நடத்துதல்.
5. உயர்கல்வி வாய்ப்புக் களை பெற்றுக்கொடுத்தல்.
6. தொழில் வழிகாட்டல் ஆலோ சனைகள் வழங்குதல்.
7. தொழில் வெற்றிடங்கள் தொடர்பான தகவல் வழங்குதல்.
8. உளவியல் ஆய்வினூடாக உங்கள் தனித்திறமைகளை வெளிக்கொண்டு வருதல்.

போன்ற சேவைகள் தொடர்ச் சியாக வழங்கப்படவுள்ளன. எனவே தொழில் வாய்ப்பற்றிருக்கும் அனை த்து இளைஞர்.யுவதிகளும் இவ் வாய்ப்பினை தவறவிடாது பயன்ப டுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கிறோம் என யாழ்.மாவட்ட செய லக தொழில் நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு 021 221 9359 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள வும். (5-60)

## க.பொ.த (சா/தர) பரீட்சைப் பெறுபேறுகள்-2018

**யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்**

ற.கஹம்சிகா-7ஏபிசி, கு.பிருந்தா-2ஏ3பி3சிஎஸ், ப.கிருஸ்ணவேணி-2ஏ3பி2சி2எஸ், வி.சதுர்சனா-2ஏபி5சிஎஸ், த.ரேவதி- 2ஏபி3சி2எஸ், ப.லினோதன்-2ஏ6சி, ந.கிருத்திகா-ஏபி4சி3எஸ், ஜெ.கேதாராணி- ஏ6சி2எஸ், ஆ.பார்த்தீபன்-பி5சி3எஸ், க.கஜானனி-பி5சி3எஸ், இ.லிதியா-பி4சி4எஸ், நி.கௌசி - பி4சி3எஸ், த.டிமல்றொக்சன் - பி4சி2எஸ், ஈ.சயங்கன் - 5சி4எஸ், வி.நர்சிகன் - 6சி2எஸ்.

**யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**

சி.துலாஞ்சலி-9ஏ, கு.அபிசனா - 8ஏசி, கு.வினுயா- 7ஏ2பி, ய.அபிசாம் - 7ஏபிசி, பே.மதுசிகா - 7ஏபிசி, சி.டிலக்ஸ்ஸனா - 7ஏபிஎஸ், த.நிருசா-6ஏ2பிசி, உ.கௌதிகன் - 6ஏ2பிசி.

**யா/மல்லாகம் மகா வித்தியாலயம்**

கு.பவித்திரன்- 7ஏபிசி, அ.தனுசன் - 6ஏ2பிசி, பா.சயந்தன் -5ஏ2பி2சி, ர.சரண்-4ஏ2பிசி2எஸ், அ.டிலக்சனா - 4ஏபி4சி, அ.மதுசாளினி-3ஏ2பி4சி, தே.அபிமெலினா-3ஏ3பி3சி, யோ.டினோயா- 2ஏ3பி2சி2எஸ், த.டிலானி- 2ஏ2பி2சி3எஸ், றொ.ஜெனனி-ஏபி4சி3எஸ், த.டல்சிகா - ஏ2பி3சி3எஸ், அ.ஆயிஷா - ஏ3பி2சி3எஸ், ம.கனுஸ்ரா - ஏ3சி5எஸ், நெ.அபிசா - ஏ3சி5எஸ், ம.மதுராஸ் - ஏபி4சி2எஸ், வே.டயன்சன்-ஏபி3சி3எஸ், வ.சாங்கவி-ஏ2பிசி3எஸ், வி.துசாந்-பி3சி4எஸ், வி.நிசாந் - பி4சி3எஸ், தா.கார்த்திகா- 5சி3எஸ், அ.நிதுர்சா- 4சி4எஸ், த.பிரபாலினி - பி3சி3எஸ், நா.நிக்சன் - பி2சி4எஸ், ம.நிலானீ - பி2சி4எஸ், அ.ஜென்சீவன் - 5சி2எஸ், ஞா.வானுஜன் - 3சி4எஸ், ஜெ.கஜீபன் - 4சி2எஸ், ச.பிரதாப்பு - 3சி3எஸ், இ.கிருஷ்ரிகா - 3சி3எஸ்.

**யா/புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயம்**

ர.சியாமி-2ஏ2பி4சி, சி.கெஸ்மியா-2ஏ2பி2சி2எஸ், ச.றோகினி - 2ஏ2பி2சி2எஸ், அ.அனிற்றா - 2ஏ5சி2எஸ், க.சதுர்ஷனா - ஏ4சி2எஸ், ர.தவறூபன் - 4பி2சி3எஸ், அ.யன்சிக்கா-பி3சி3எஸ், சி.மகிழ்சன்- 5சி2எஸ், தி.சனுஸ்ரன் - 4சி3எஸ், கி.மாயவன் - 3சி5எஸ், தி.தனுஸ்ரன் - 4சி3எஸ், கு.பவித்திரா - 4சி3எஸ்.

## 79வது ஆண்டு தினத்தை முன்னிட்டு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 79 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு சைக்கிள் ஓட்டப் போட்டிகள், மரதன் ஓட்டப்போட்டி, சிறுவர்களுக்கான வீதியோட்டம், முதியோர் களுக்கான ஓட்டப்போட்டிகள் என்பன எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 6 மணியளவில் நடைபெறவுள்ளன. போட்டியில் கலந்து கொள்வோர் உரிய நேரத்திற்கு வருகை தருமாறு நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (5)

## இராசி பலன்

கிரகநிலை சந்திராஷ்டமம் அர்த்தம்

| | | | |
|---|---|---|---|
| சூரி, சந் | | செவ் | ராகு |
| சுக், புத | | | |
| | | | |
| சனி, குரு, கேது | | | |

**05.04.2019**

பங்குனி 22 வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு

அமாவாசை பிற்பகல் 2.05 மணிவரை

உத்திரட்டாதி காலை 6.11 மணிவரை

சுபநேரம் 6.07 - 7.39 மணிவரை

இராகுகாலம் 10.39-12.09 மணிவரை

அமாவாசை விரதம்

வளவன்

**மேடம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம், சயனக் குறைவான நாள்.

**இடபம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், காரிய அனுகூலமுண்டு, உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்:** எடுத்த காரியத்தில் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், போசன சுகமுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ரோக பயமுண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**சிம்மம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உடல் நலனில் உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், கௌரவக் குறைவான நாள்.

**கன்னி:** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்:** வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வீண் விவாதங்களைத் [illegible]

**தனுசு:** சுபகாரியங்களில் ஆர்வம் காண்டுவீர்கள், வழிபாட்டில் அக்கறை கூடும், மனதில் இனம் புரியாத கற்பனைகளை வளர்த்துக்கொள்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மகரம்:** உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்:** வாக்கு மேன்மையுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், காரிய அனுகூலமுண்டு.

**மீனம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு, கௌரவமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களத்தில் வாக்குமூலம் தமிழரை மிரட்டிக் கையொப்பம்

## யுத்தத்திற்குப் பின்னரும் தொடரும் அவலம் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸார் சிங்களத்தில் எழுதிய வாக்குமூலத்தில் தம்மை மிரட்டி கையொப்பம் வாங்கியதாகவும் குறித்த வீதியை மூடாது விட்டால் கைது செய்யப்படுவீர்கள் என அச்சுறுத்தியதாகவும் தெரிவித்து நேற்று முன்தினம் 3 ஆம் திகதி யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

பொது மக்களின் பாவனைக்காக 2015 ஆம் ஆண்டு தனது காணியின் ஒரு பகுதியை சட்ட ரீதியான முறையில் உப பிரிகையிடல் செய்து பொதுமக்களுக்கு வீதிப் பாவனைக்கு வழங்கிய காணி உரிமையாளர் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோரே தம்மை பொலிஸார் மிரட்டிக் கையொப்பம் வாங்கியதாகவும் கைது செய்வோம் என அச்சுறுத்தியதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கையில்,

கொழும்புத்துறை மூன்றாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள வீதி ஒன்று தனியார் சிலரது கோரிக்கையின் அடிப்படையில் யாழ். மாநகரசபையினால் மூடுமாறு உத்தரவிடப்பட்டுள்ள நிலையில் குறித்த காணிப் பிரச்சினை தொடர்பில் எதிராளிகளால் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்காக வாக்குமூலம் பெற வருமாறு கோரியதை அடுத்து தாம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டதாகவும் அங்கு தமது கருத்துக்களைக் சிங்களத்தில் எழுதிவிட்டு ஒப்பமிடுமாறு தாம் அச்சுறுத்தப்பட்டு கையொப்பம் பெறப்பட்டதாக தெரிவித்தனர்.

கொழும்புத்துறை 3 ஆம் குறுக்குத் தெருவில் பாடசாலை மாணவர்கள்,கடற்றொழிலாளர்கள் என சுமார் 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்களால் சுமார் நான்கு வருடங்களாக பயன்படுத்தப்பட்டு வந்த வீதியின் தெற்குப் பக்கத்தை சிலரது முறைப்பாட்டின் பிரகாரம் காரணம் எதுவும் குறிப்பிடாமல் மூட உத்தரவிடுமாறு கோரி யாழ்.மாநகர சபைக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையால் கடந்த 07.03.2019 அன்று அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் யாழ்.மாநகரசபையினால் குறித்த வீதியின் வடக்கு பகுதியை மூடுமாறு கடந்த 19. 03.2019 அன்று காணி உரிமையாளருக்கு கடிதம்மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் யாழ்.மாநகர சபையின் ஆணையாளரால் வீதியை மூடுமாறு உத்தரவிடப்பட்ட குறித்த எழுத்து மூல உத்தரவு அனுப்பப்படுவதற்கு முன்பாக சிலரால் வீதியை மூடி கொங்கிறீற் தூண்கள் இடப்பட்டுள்ளன. எனினும் அதனை பொதுமக்கள் அகற்றி வீதியை பயன்படுத்திய நிலையில் தொடர்ச்சியாக மூன்று தடவைகள் வீதி அடைக்கப்பட்ட தாகவும் அதன் பின்பே வீதியை மூடும் உத்தரவு அனுப்பப்பட்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

குறித்த வீதியானது, கொழும்புத்துறையில் 2015 ஆம் ஆண்டு தனியார் காணி உரிமையாளர்கள் சிலரின் ஒப்புதலுடன் குறித்த காணி ஒன்றினை வீதி அமைக்க காணி உரிமையாளர் ஒருவர் இடம் வழங்கியதன் அடிப்படையில் தொடர்பற்றிருந்த நிலையிலிருந்த இரு வீதிகள் காணி உப பிரிவிடல் ஊடாக காணி உரிமையாளரின் சம்மதத்துடன் 2015 - 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொதுமக்களின் பாவனைக்காக நகர அபிவிருத்தி சபையால் (கோவை இலக்கம் **J/DC/PPC/ JMC/422/2015**) யாழ்ப்பாணம் மாநகரசபையின் அனுமதியுடன் (வரைபட இலக்கம் 2789/1) இணைக்கப்பட்டு ஒரு வீதியாக்கப்பட்டது.

அதன் பின்னர் உப பிரிவிடுகை செய்யப்பட்ட ஒழுங்கை வரை யாழ்ப்பாணம் மாநகர சபையினால் தாரிடப்பட்டு வீதியின் ஒரு பகுதி தார் வீதியாகவும் மற்றைய பகுதி மணல் வீதியாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இந் நிலையிலேயே யாழ் மாநகர ஆணையாளரால் 19.03. 2019 அன்று திகதியிடப்பட்டு 2789/1 இலக்க நில அளவை வரைபடத்திற்கு வழங்கப்பட்ட உப பிரிவிடல் அனுமதியை இரத்துச் செய்வதாகவும் வடக்குப் பக்க ஒழுங்கையானது மூடப்பட வேண்டுமென கடிதம் மூலம் உத்தரவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும்.

தொடர்ந்து 10 நாட்கள் இடம் பெறும் நிகழ்வில் 14 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 15 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 16 ஆம் திகதி திரு வீதி உலாவும் இடம்பெறவுள்ளன. (5-10)

## சக்கர நாற்காலி தேவைப்படுவோர் விண்ணப்பிக்கவும்

சக்கர நாற்காலிகள் தேவைப்படுவோர் கோண்டாவில் சிவ பூமிப் பாடசாலையில் அல்லது ஆனைக்கோட்டை கூழாவடி அபயம் இலவச சேவை நிலையத்திலோ தங்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியுமென சிவ பூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலம்பெயர் நாடுகளில் வாழும் யாழ்.தமிழ் கொடையாளர்கள் தங்களால் இயன்ற உதவிகளை வழங்க முன்வந்துள்ளனர்.

இந்நிலையில் பேராசிரியர் விபுலானந்தனின் மகள் நங்கை விபுலானந்தனால் ஒரு தொகுதி சக்கர நாற்காலிகள் அனுப்பப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (5-10-272)


**குருவே துணை**



**வாழ்க வையகம்** **வாழ்க வளமுடன்**

**பாடசாலை விடுமுறைக் காலத்தை ஒட்டி மாணவர்களுக்கு விஷேடமாக ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் சலுகை அடிப்படையில் வழங்கப்பட இருக்கிறது.**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை இப் பாடசாலை விடுமுறைக் காலத்தை ஆசிரியர்களும் மாணவர்களும் பயனுள்ள வகையில் களிப்பதற்கு வேதாத்திரி மகரிஷி அருளிய மனவளக்கலை யோகாப் பயிற்சிகளை தங்களது நேரத்திற்கு ஏற்ப வழங்க ஏற்பாடு செய்துள்ளது. பெற்றோர்களே தங்களது பிள்ளைச் செல்வங்களை பல்வேறு சிக்கல்களிலிருந்து முன்கூட்டியே காத்துக்கொள்வதற்கும்கல்வி,ஒழுக்கம்,அறிவுக்கூர்மை, சுறுசுறுப்பு போன்றவற்றை மாணவரிடையே பெருகச் செய்வதற்கும் ஏற்றதொரு நல்வழியை தாம்தான் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். எனவே பெற்றோர்களே தாமதிக்காமல் உங்கள் செல்வங்களை அழைத்து வாருங்கள்.

திங்கள் முதல் வெள்ளி வரை பகல் வேளைகளிலும் பயிற்சிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- ✱ எளிய முறை உடற்பயிற்சிகள்
- ✱ எளியமுறை தியானப்பயிற்சிகள்
- ✱ காயகல்பப் பயிற்சி
- ✱ அகத்தாய்வுப் பயிற்சிகள்

Batch 01:
**காலம்: 06.04.2019 சனிக்கிழமை தொடக்கம் 12.04.2019 வெள்ளிக்கிழமை வரை**
**நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை**

Batch 02:
**காலம்: 08.04.2019 திங்கள் தொடக்கம் 12.04.2019 வெள்ளிக்கிழமை வரை**
**நேரம்: காலை 09.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை**
**நேரம்: காலை 07.00 மணி தொடக்கம் 09.00 மணிவரை**

**பயிற்சிகளை வழங்குபவர்கள்:- மனவளக்கலை பேராசிரியர் உழவன் முத்துவேல்**
**துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்**

**அகத்தாய்வு 1 ஆம் நிலை 06.04.2019 சனி மற்றும் 07.04.2019 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.**

**எனவே இவ் விடுமுறைக்காலத்தை பயனுள்ள வகையில் களித்து நன்மைகள் பெற்றிட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
**இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்,**
**தொ.இல:- 021 222 2772**

(C-5981)



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 46<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: PostMaster<br>எதிர்பார்ப்பு: அரசதொழில் மட்டும் உள்நாடு<br>தொ.இ: B/9511 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: அரசதனியார் சொந்த தொழில், உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: G/9531 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்:மகம் 2<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:பட்டதாரி, Engineer<br>எதிர்பார்ப்பு: அரசதனியார் தொழில், உள்நாடு<br>தொ.இ: B/9512 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை 1<br>கி.பா: 42<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:B.Sc,M.Sc, Phd,Senior Lecturer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரச உத்தியோகம், உள்நாடு<br>தொ.இ: G/9532 |
| பிறப்பு: 1986கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்:ஆயிலியம் 2<br>தகைமை/தொழில்:O/L, Australia<br>எதிர்பார்ப்பு:Australiaமட்டும்<br>தொ.இ: B/9514 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>கி.பா: 16 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:Business Management, Accounting & Finance Reading, America<br>எதிர்பார்ப்பு: Accountant, Engineer, வெளிநாடுமட்டும்(America,Australia)<br>தொ.இ: G/9533 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 65 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L,வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: அரசதனியார் தொழில், தொழிலற்றவர்களும் ஏற்கப்படும்.<br>தொ.இ: B/9515 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:பூராடம் 2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:B.Sc,ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:B.Sc,BBAபட்டதாரி,அரசதொழில<br>தொ.இ: G/9534 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்திட்டங்களை அமைத்துத்தரக்கோரி தேவிபுரம் அ பகுதி மக்கள் போராட்டம்

## பிரதேச செயலாளரிடம் மகஜரும் கையளிப்பு

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட தேவிபுரம் அ பகுதி மக்கள் தங்கள் வாழ்விட உரிமைகளைக் கோரி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்னால் கவனயீர்ப்பு நடவடிக்கை ஒன்றினை முன்னெடுத்துள்ளார்கள்.

தமக்கான வீட்டுத் திட்டங்களை விரைவில் அமைத்துத் தரவேண்டும் எனக் கோரிய இப்போராட்டம் நேற்றைய தினம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்பாக நடைபெற்றது.

இதன்போது வயோதிபர்கள், குழந்தைகள், ஊனமுற்றோர் என பல தரப்பினரும் அங்கு கூடியதோடு, பிரதேச செயலாளரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் மக்கள் கையளித்தனர்.

இவர்கள் தற்போது குடியிருக்கும் காணி ஒரு தனி நபருக்குச் சொந்தமானது எனவும் அதனால் இவர்களுக்கு அதே இடத்தில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடியாது எனவும் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

அத்துடன், குறித்த காணிகளை விடுவித்து வேறு இடத்தில் காணிகள் இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார். (7-281)





தரம் 6 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனைச் சேவைப் பிரிவு (மகிழகம்) தொடர்பான அறிமுகம், சுய பாதுகாப்பு, கதைகளினூடாக உள மேம்பாடு என்பவை தொடர்பான செயலமர்வு நேற்று முன்தினம் பகுதித் தலைவர் க.சுவாமிநாதன் தலைமையில் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

# 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டும் யானைவேலி அமைக்கப்படவில்லை

புதுக்குடியிருப்புப் பிரதேச் செயலாளர் பிரிவில் யானை வேலி அமைக்கவென வனஜீவராசிகள் அமைச்சால் 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டும் இதுவரை வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்மடுக் குளம் தொடக்கம் இடக்காட்டுக் குளம் வரையிலான 16 கிலோ மீற்றர் வரையான பகுதியே இவ்வாறு யானைவேலி அமைக்கப் படவில்லை எனக் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும் தமது வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக தென்னைச் செய்கையை அதிகளவில் ஆரம்பிக்க திட்டமிட்டும் யானை வேலி அமைக்கப்படாமையால் தென்னங்கன்றுகளை வழங்க முடியாது என தென்னை சபை மறுத்து விட்டதாகக் கவலை வெளியிட்டனர். எனவே தமது எதிர்கால வாழ்க்கையைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் ம.பிரதீபனைத் தொடர்பு கொண்டு கேட்ட போது 2018 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி 2019 இல் கிடைக்கப் பெற்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த சமூக அமைப்புக்கள் இரண்டினை கமநல சேவைத் திணைக்களம் தெரிவு செய்து அனுப்பியுள்ளதாகவும் விரைவில் திட்டம் நடைபெறும் என தெரிவித்தார்.

தென்னங்கன்றுகள் வழங்குவது தொடர்பில் வட மாகாண தெங்குச் செய்கை முகாமையாளரைக் கேட்டபோது யானை வேலி அமைக்கப்பட்டதும் தென்னங் கன்றுகளை வழங்கத் தயாராக உள்ளதாகத் தெரிவித்தார். (இ-10)

# மனிதாபிமான ரீதியில் நீர் வழங்கத் தயார்

## வலி.கிழக்கு தவிசாளர்

காரைநகர் மக்களுக்கான குடிநீரை வழங்க மனிதாபிமான முறையில் வலி.கிழக்குப் பிரதேச சபை தயாராகவுள்ளதாக தவிசாளர் தி.நிரோஸ் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக வலி. கிழக்குப் பிரதேச சபையின் பகுதிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இருப்பினும் காரைநகர் மக்களின் குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு 3 நிபந்தனைகளின் அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்ட நீர் விநியோகத்திற்கு சபை தயாராகவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நிபந்தனைகளாவன, காரைப் பிரதேச சபையினால் வலி.கிழக்குப் பிரதேச சபையிடமிருந்து பெறும் குடிநீரை அப்பகுதி மக்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும். பிரதேச சபை வாகனமும் அதன் ஊழியர்களும் மட்டும் உள்வர அனுமதிக்கப்படுவர் ஆகிய நிபந்தனைகளின் அடிப்படையில் அடுத்த சபை அமர்வு இடம் பெறும் வரை தன்னால் குடி நீரை வழங்க முடியுமென அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (5-10)

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# வர்த்தக நிலையங்களிலுள்ள உணவுகளில் தரம் பரிசோதிக்கப்படுவது இல்லை

## பல தரப்பினர் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்களில் விற்கப்படுகின்ற உணவுகளில் தரம் பரிசோதிக்கப்படுவதில்லை என பல்வேறு தரப்புக்களும் சுட்டிக்காட்டியுள்ளன.

யுத்தத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீள்குடியேறி பத்து வருடங்கள் கடந்த நிலையில் குறித்த காலப்பகுதியில் உணவு விற்பனை நிலையங்கள், உணவு கையாளும் நிலையங்கள் அதிகளவில் அமைந்துள்ளன.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்ற உணவுகளின் தரம் குறிப்பிட்ட சில காலங்களாக பரிசோதிக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

இதனால் மேற்படி வர்த்தக நிலையங்கள், உணவு கையாளும் நிலையங்களில் கலப்படமான உணவுப்பொருட்கள் மற்றும் பழுதடைந்த காலாவதியான பொருட்கள் மிகச் சூட்சுமமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, இரவு நேர விடுதிகளில் பழுதடைந்த உணவுகளை விற்பனை செய்தல், பொதுச்சந்தைப்பகுதிகளில் மாலை நேர கடல் உணவு வியாபார நடவடிக்கைகளில் பழுதடைந்த உணவு விற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகள் தொடர்பாக பல்வேறு தரப்புக்களும் சுட்டிகாட்டியுள்ளதுடன், இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு இதுவரை எந்தவிதமான நடவடிக்கைளும் எடுக்கப்படவில்லை என்றும் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். (7-315)

# ஊர்காவற்றுறைப் பவுசரும் காரைநகருக்கு வழங்கப்பட்டது



ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட தண்ணீர் பவுசர் தனது கன்னிச் சேவையை ஆற்றாமலேயே காரைநகர் பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.அரச அதிபரின் உத்தரவுக்கமைய இலங்கை அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்ட தண்ணீர் பவுசரே இவ்வாறு மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வரட்சியான கால நிலையினால் தீவுப் பகுதிகளே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் குடிநீர் அதிகம் தேவையுள்ள பிரதேசங்களாக நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய பிரதேசங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இந் நிலையில் ஊர்காவற்றுறை மக்களுக்கென குடிநீரை வழங்குவதற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட குறித்த வாகனம் ஊர்காவற்றுறை பகுதி மக்களுக்கு சேவை ஆற்றாமலே அரச அதிபரினால் காரைநகருக்கு வழங்குமாறு உத்தரவிடப்பட்டது.

ஊர்காவற்றுறை மக்களுக்கு குடிநீர்த்தேவை அதிகமாக இருக்கும் சூழ்நிலையில் காரைநகர் பகுதியில் 7 இற்கு மேற்பட்ட தண்ணீர் பவுசர்கள் காணப்பட்ட போதும் ஏன் மேலதிக தண்ணீர் பவுசர் வழங்கப்பட்டது எனப் பொது மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

காரைநகரில் உள்ள அபிவிருத்திச் சபை, பிரதேச சபை, எவறைட் தனியார் நிறுவனம், தோப்புக்காடு கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியன அப்பகுதி மக்களுக்கென நீர் விநியோகத்தில் ஈடுபட்டுள்ளன.

எனவே காரைநகரில் ஏற்பட்டுள்ள பிரச்சினை நீர் பவுசர் போதாமையல்ல, நீர் விநியோகத்துக்கான நீரைப் பெறுவதிலே இடப்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. குறித்த விடயம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தவிசாளரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, தந்தவர்களே திருப்பி எடுக்கின்றார்கள். இருக்கும் வளத்தைப் பயன்படுத்தி மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க நாம் தயாராக உள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் காரைத் தவிசாளரிடம் கேட்ட போது, சபைக்கு பவுசர் போதாமையால் கேட்டுப் பெற்றுக் கொண்டதாகவும் வழங்கப்பட்ட பவுசர் மூலம் இலவச நீர் விநியோகத்தை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்தார். (5-10)

# விவசாய நடவடிக்கைகளுக்கு வனவளத் திணைக்களத்தினர் இடையூறு

## மக்கள் விசனம்

(மன்னார்)

கிளிநொச்சி பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட ஜெயபுரம் பகுதி மக்களின் விவசாய காணிகளை துப்புரவு செய்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள வனவள திணைக்களமானது தொடர்ச்சியாக இடையூறு விளைவிப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி ஜெயபுரம் மக்கள் 1983 ஆம் ஆண்டு குறித்த பகுதியில் குடியேற்றப்பட்ட போது அவர்களுடைய வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்காக அரச காணிகள் வயல் நிலங்களாக வழங்கப்பட்டது. சில காலங்கள் காணிகளை துப்புரவு செய்து பயிர்ச் செய்கைகளை மேற்கொண்ட போதும் யுத்தம் காரணமாக 300 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இந்தியா நோக்கி இடம்பெயர்ந்த காரணத்தினால் தொடர்ச்சியாக பாரியளவிலான அக்காணியில் பயிர்ச்செய்கை செய்ய முடியாத நிலையில் குறித்த காணிகள் பராமரிப்பு இன்றி விடப்பட்டன. அதேநேரத்தில் 2008, 2009 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது மீண்டும் அப்பகுதியில் இருந்த அனைத்து மக்களும் இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாமில் தஞ்சமடைந்தனர்.

அதன்பின்னர் 2010 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்ற நிலையில் மீண்டும் குறித்த மக்கள் ஜெயபுரம் பகுதியில் மீள்குடியேற்றப்பட்டனர்.

அதன் பின்னர் விவசாய நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட காணிகளை துப்புரவு செய்வதற்கு முற்பட்ட போது குறித்த காணி அமைந்த பகுதிகளில் கண்ணி வெடிகள் காணப்படுவதனால் குறித்த காணிகளை வழங்க முடியாது என இராணுவம் தெரிவித்ததை அடுத்து மக்கள் அக்காணிகளை துப்புரவு செய்யும் பணிகளை நிறுத்தியிருந்தனர்.

அதன் பின்னர் கண்ணி வெடிகள் அனைத்தும் அப்புறப்படுத்தப்பட்டு காணிகள் அனைத்தும் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டன. (7-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இராணுவத்தினருக்கு எதிராக இனவாதிகள் பொய்ப் பிரசாரம்

## நிமால் சிறிபால டி சில்வா சீற்றம்

(கொழும்பு)

**இராணுவத்திற்கு எதிராக இனவாதிகள் பொய்ப்பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாக முன்னாள் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா குற்றம் சாட்டியுள்ளார்.**

பாதுகாப்பு, மகாவலி மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இந்தக் குழு நிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் மேற்கண்டவாறு குற்றம்சுமத்தினார்.

இராணுவத்தினர் தொடர்பாக புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் இனவாதிகள் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களின் பொய்ப் பிரசாரத்தை தோற்கடிக்க கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

பொலிஸ் சேவைக்கு தமிழ் மூலமான உறுப்பினர்களை உள்வாங்குவது நாட்டின் தேசிய மற்றும் மத நல்லிணக்கத்துக்கு பெரும் சக்தியாக அமையும் எனவும் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (இ-7)

### தொழில் தேடுவோர், தொழில் வாய்ப்பற்றோரை பதிவு செய்தல்

யாழ்.மாவட்ட செயலக தொழில் நிலையமும் பருத்தித்துறை பிரதேச செயலகமும் இணைந்து தொழில் நாடும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு, தொழிற் பயிற்சி, கைத்தொழில் பயிற்சி, சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஒவ்வொரு கிராம அலுவலகங்களிலும் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பதிவுகள் இடம்பெறவிருப்பதனால் பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட தொழில் தேடும் இளைஞர்,யுவதிகளை தத்தமது கிராம அலுவலர் அலுவலகங்களில் தங்களது பதிவுகளை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி கேட்டுக் கொண்டுள்ளார். (5)

# பின் கதவால் பாராளுமன்றத்துக்குள் நுழைந்த ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்துக்குள் நேற்று முன்தினம் பின் கதவால் நுழைய வேண்டிய நிலை ஏற்பட்டது.

கொழும்பில் நேற்று முன்தினம் பல்கலைக்கழக மாணவர்கள் நாடாளுமன்றத்தை நோக்கி பேரணி நடத்தினர்.

இதன்னால், நாடாளுமன்றச் சுற்றுவட்ட வீதி பொலிஸாரால் மூடப்பட்டது.



இதனால், நாடாளுமன்றத்துக்குச் செல்லும் ஜனாதிபதியின் வாகன அணியின் பாதை மாற்றப்பட்டது.

நாடாளுமன்ற முன் வாயில் வழியாகச் செல்ல முடியாததால் பின்வாசல் வழியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்துக்குச் சென்றார். (இ-7)


# நன்றி நவிலல்



பிறப்பு 12 04 1938

இறப்பு 06 03 2019

## வைத்திய கலாநிதி நடராஜா சிவராஜா

(முன்னாள் தலைவர்– சமுதாய மருத்துவத்துறை, மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம், முன்னாள் ஆலோசகர்– உலக சுகாதார நிறுவனம், தலைவர்– வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் ததலைவர்– புற்றுநோயாளர் காப்பகம் (வடக்கு– கிழக்கு), ஸ்தாபகர்– முன்நோக்கு அறக்கொடை நிதியம்)

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து கடந்த 06.03.2019 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் வைத்திய கலாநிதி ந.சிவராஜா அவர்களின் இறுதிக் கிரியைகளில் பங்குகொண்டும், மலரஞ்சலிகளைச் செலுத்தியும் இரங்கல் செய்திகளை அனுப்பியும் பல்வேறு வகைகளில் வலி மிகுந்த துயருறும் அந்த வேளையில் எமக்கு ஆறுதல் அளித்த உங்கள் அனைவருக்கும் அவர் தம் குடும்பத்தினராகிய நாங்கள் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*"காலத்தால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது"*

47/3, ஆடியபாதம் வீதி.
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


# ஜனாதிபதியை தீர்மானிப்பதில் இராஜதந்திர முடிவுகளை தமிழர்கள் எடுக்க வேண்டும்

## அங்கஜன் எம்.பி.அறிவுரை

(கொழும்பு)

ஜனாதிபதியை தீர்மானிப்பதில் தமிழ்பேசும் மக்களே இராஜதந்திர முடிவுகளை உள்ளார்ந்தமாக எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள தயா சிறிஜெயசேகரவால் மக்களின் சக்தியாகவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை கிராமங்களில் இருந்து மீள் எழுச்சியுறச் செய்வதாகவும் மேலும் மக்களின் தேவைகள், அபிலாசைகளை இனம் கண்டு அவற்றை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் வலுவாக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மீண்டும் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்குவதன் மூலம் முழுமை அடையும் என்ற நம்பிக்கை தமிழர்களிடம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் வடக்கு-கிழக்கில் கட்சி மறுசீரமைப்பு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திர தமிழர் ஒன்றியத்தின் மூலமாக மாவட்ட ரீதியாக மக்களின் தேவைகள், அபிலாசைகள் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் ஆராயப்பட்டு வருவதாகவும் ஜூலை, அல்லது ஓகஸ்ட் மாதத்தில் தேசிய மாநாடு ஒன்றை ஜனாதிபதி தலைமையில் நடத்தத் திட்டம் உள்ளதாகவும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது இன,மத,மொழிகளுக்கு அப்பாற்பட்ட ஒரே ஒரு தேசிய கட்சி எனவும் ஸ்ரீலங்கா சுதந்திர தமிழர் ஒன்றியம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை வரலாற்றில் முதன்மையானது எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர தமிழர் ஒன்றியம், தேசிய கட்சி ஊடாக சிறுபான்மையினரை ஒன்றிணைத்து, அவர்களின் அபிலாசைகளுக்கும் முக்கியத்துவம் அளித்து செயற்படுவது, வரலாற்றுப்பதிவாகும் எனவும் சுட்டிக் காட்டியிருந்தார். ஜெனிவாவில் தமிழர் விடயத்தில் இவ் அரசு கபடத்தனத்தை காட்டி விட்டதாக புலம்பும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர், மக்கள் நலன் இன்றிய இவ் வரவு- செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதன் மூலம் அதற்கு பதிலடி கொடுக்க தயாரா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். மாறாக முழுமையான ஆதரவையே வழங்கவுள்ளனர். மக்களின் இறைமைகளை தொடர்ந்தும் அடகுவைத்து தமது நலன்களை முன்னிறுத்தி செயற்பட்டு வருவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார். ஜனநாயகம், உரிமை குறித்து வசைபாடும் இவர்களால் மாகாண சபையின் தேர்தலைக் கூட நடத்த முடியாதுள்ளது. எனவே இவர்களால் எவ்வாறு மக்களின் உரிமைகளுக்காகவும் ஜனநாயகத்திற்கும் குரல் கொடுக்க முடியும். எனவே உணர்ச்சி அரசியல் வேண்டாம், நாட்டை பிளவுபடுத்துகின்ற அரசியல் வேண்டாம், எதிர்கால எமது சந்ததியினரின் வறுமையையும் கல்வியையும் பொருளாதாரத்தையும் அபிவிருத்தி செய்யும் உணர்வுபூர்வமான நோக்கை கொண்டதாக அரசியலை முன்னெடுக்க வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வீடமைப்பு அதிகார சபையால் நிரந்தர வீடுகளை வழங்குவதற்கான மதிப்பீடு

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 822 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நிரந்தர வீடுகளை வழங்குவதற்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வருட இறுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக பெருமளவான மக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் இவ்வாறு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான பல்வேறு தேவைப்பாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

அந்த அடிப்படையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் 822 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான வீடுகளை வழங்குவதற்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு தற்போது மதிப்பீடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதேச செயலகத் தகவல்கள் மூலம் அறியமுடிகின்றது. (7-315)




# போக்குவரத்து வசதிகள் இன்மையால் பொதுமக்கள், மாணவர்கள் பெரும் சிரமம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாலைப்பாணி பகுதியில் போக்குவரத்து வசதிகள் இன்மையால் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மிகவும் பின்தங்கிய பகுதிகளில் ஒன்றாகக் காணப்படும் பாலைப்பாணி கிராமத்திற்கான போக்குவரத்து வசதிகள் இன்மையால் இங்குள்ள பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக இப்பகுதியில் உள்ள பாடசாலை ஆரம்பப் பாடசாலையாகக் காணப்படுவதுடன் போதிய ஆசிரியர் வளம் இன்றியும் நீண்டகாலமாக இயங்கி வருகின்றது.

இதன் குறைகளை நிவர்த்தி செய்து தருமாறு இப்பகுதி மக்கள் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருகின்றபோது இதுவரை எந்தத் தேவைகளும் நிவர்த்தி செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இதனால் இங்குள்ள ஆரம்பக்கல்வி மாணவர்கள் கூட 10 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள வன்னிவிளாங்குளம் பாடசாலை, மாங்குளம் மகா வித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு செல்லவேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் பாலைப்பாணி கிராமத்திலிருந்து மாங்குளம், வெள்ளாங்குளம், மூன்றுமுறிப்பு சந்தி வரைக்குமான சுமார் எட்டுக் கிலோமீற்றர் தூரம் எந்தப் போக்குவரத்துவசதிகளும் இன்றி காணப்படுவதுடன், வீதியின் இருமருங்கும் பாரிய காடுகள் வளர்ந்து காணப்படுவதனால் பகல் வேளைகளில் கூட போக்குவரத்தில் அச்சநிலையை எதிர்கொள்வதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனைவிட மருத்துவ வசதியின்மை, போக்குவரத்து வசதியின்மை போன்ற வசதிக்குறைபாடுகள் காரணமாக அன்றாடம் பெரும் சிரமங்களை இப்பகுதி மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே இங்குள்ள வசதிக்குறைபாடுகளால் அதிகளவான சிறுவர்கள் கல்வியை இடைநிறுத்தி கூலிவேலைகளை செய்கின்ற நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே தமது நிலையினைக் கருத்தில் கொண்டு தமது கிராமத்திற்கான பிரதான வீதியினை புனரமைத்து தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (7-315)

# மன்னாரில் இடம்பெற்ற சித்திரை உறுதிமொழி நிகழ்வு



(மன்னார்)

ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்ட போதையிலிருந்து விடுதலைப் பெற்ற நாட்டிற்காக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து உறுதி மொழியளிக்கும் "சித்திரை மாத உறுதி மொழி" நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை காலை மன்னாரிலும் இடம் பெற்றுள்ளது. மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் காலை சர்வமத பிரார்த்தனைகளைத் தொடர்ந்து குறித்த உறுதி மொழி நிகழ்வு இடம் பெற்றது. மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் தலைமையில் குறித்த உறுதி மொழி நிகழ்வு இடம் பெற்றது. (7-285)

# புகையிரதக்கடவை அமைக்கப்படாமையால் எந்நேரமும் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

(கண்டாவளை)

கிளிநொச்சி நகரத்தின் கனகபுரம் வீதிக்கு அடுத்தபடியாக அதிக மக்கள் பயன்படுத்துகின்ற இரணைமடுச்சந்தி பாரதிபுரம் பகுதிக்கான புகையிரதக் கடவை அமைக்கப்படாதமையால் எந்நேரமும் விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலை காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் புகையிரத வீதியினை குறுக்கறுத்துச்செல்கின்ற போக்குவரத்துப் பாதைகளுக்கு பாதுகாப்புக் கடவைகள் அமைக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக, திருமுறிகண்டி தொடக்கம் முகமாலை வரைக்குமாக பகுதிகளில் புகையிரத வீதிகளை குறுக்கறுத்துச்செல்கின்ற சுமார் இருபத்து ஐந்திற்கும் மேற்பட்ட வீதிகள் பாதுகாப்பற்ற வீதிகளாகவே காணப்படுகின்றன.

இதுவரை பத்தொன்பதிற்கும் மேற்பட்ட வீதிகள் உள்ளன. இந்நிலையில் கிளிநொச்சி நகரத்தின் டிப்போச்சந்தி கனகபுரம் பிரதான வீதிக்கு அடுத்த நிலையில் அதிகளவு மக்கள் பயன்படுத்துகின்ற வீதிகளில் ஒன்றாக இரணைமடுச்சந்தி பாரதிபுரம் வீதி காணப்படுகின்றது.

இவ்வீதியூடாக மலையாளபுரம்,கிருஸ்ணபுரம், அறிவியல் நகர், பாரதிபுரம், செல்வாநகர் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த பெருமளவான மக்கள் பாடசாலை, மாணவர்கள் தினமும் பயணிக்கின்றனர்.

குறித்த வீதியின் புகையிரத வீதிக்கடவை அமைக்கப்படாமையினால் தினமும் விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ள மேற்படி கிராம மக்கள் புகையிரத பாதுகாப்பு கடவையினை அமைத்துத்தருமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர். (7-315)

# காட்டு யானை உயிரிழப்பு! உடம்பிலிருந்து சன்னம் மீட்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கரிப்பட்ட முறிப்பு கற்கிடங்கு அம்மன் ஆலயத்துக்கு அருகில் உயிரிழந்த நிலையில் யானை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் மக்களுக்கு பெரும் அச்சுறுத்தல் விடுத்து வந்த காட்டு யானை ஒன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

யானையின் கால் பகுதியில் காயமடைந்த நிலையில் நடமாட முடியாது குறித்த பகுதியில் கடந்த சில நாட்களாக குறித்த யானை நடமாடியதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.



யானை இறந்ததை தொடர்ந்து தகவல் வழங்கப்பட்ட நிலையில் குறித்த இடத்துக்கு வருகை தந்த வனஜீவராசிகள் திணைக்கள வைத்தியர்கள் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டனர். இதன்போது காலில் கட்டுத்துவக்கு சன்னம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.(7-281)





தர்மக்கேணி இந்து மயானம் புனரமைப்பு பணிகளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் பார்வையிட்டார். பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 5 மில்லியன் ரூபாய் செலவில் பளை தர்மக்கேணி இந்து மயானம் புனரமைக்கப்பட்டுள்ளது. சபையின் தவிசாளரிடம் குறித்த பகுதி மக்கள் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் இப் பணி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், உப தவிசாளர், உறுப்பினர்கள் எனப் பலரும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 91 பயனாளிகளுக்கு மலசலகூடங்கள் வழங்கல்

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 91 பயனாளிகளுக்கு தலா எழுபதாயிரம் ரூபா பெறுமதியான மலசலகூடங்கள் மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் மீள்குடியேறி இதுவரை மலசலகூட வசதிகளைப் பெற்றுக்கொள்ளாத குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பல்வேறு திட்டங்கள் ஊடாக மலசலகூடவசதிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-315)

# புருசோத்தமன் எழுதும்

# கம்பவாரிதிக்கு ஓர் அன்பு மடல்




முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன மிகுந்த துணிச்சல் உடையவர் என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஜனாதிபதித் தேர்தலில் என்னோடு போட்டியிட இருக்கின்ற அந்த வீரன் யார் என்பதை அறிய நான் விரும்புகின்றேன் என்று மகிந்த ராஜபக்ஷ கூற, அவர் அருகில் நின்ற வீரர் தான் ஜனாதிபதி மைத்திரி.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தால் என் உயிர் பறிக்கப்பட்டு நிலத்தில் புதைக்கப்பட்டிருப்பேன் என்று கூறியவர் ஜனாதிபதி மைத்திரி.

அப்படிப்பட்ட ஒருவர் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்கிறார் என்றால் அதற்கு மூலகாரணம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசால் அவர் பட்ட துன்பமும் ஆபத்தும் என்பதை நாம் எளிதாக மறுத்துவிட முடியாது.

இதற்கு மேலாக, தமிழரசுக் கட்சியை தன்னோடு வைத்துக் கொண்டு அவர்களின் ஆதரவு தமக்கு இருக்கின்ற துணிவில் ரணில் விக்கிரமசிங்க அரசு தன்னை அவமானப்படுத்தவும் தனக்கு ஆபத்தை ஏற்படுத்தவும் தயாராகிவிட்டபோது இனியும் தான் பேசாமல் இருக்கக்கூடாது என்று ஜனாதிபதி மைத்திரி முடிவெடுத்தார்.

அந்த முடிவுதான் மகிந்தவை பிரதமராக்குகின்ற அவரின் அறிவிப்பு. மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்குகின்ற செயலை தமிழ்மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது உறுதி.

ஆனாலும் மகிந்தவை எதிர்த்து நின்ற ஒருவர், ஊழல்வாதிகள் என்றும் என் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடியவர்கள் என்றும் சொன்ன ஜனாதிபதி மைத்திரி அவற்றையெல்லாம் மறந்து மகிந்தவைப் பிரதமராக்க நினைத்தார் எனில் இவரைவிட அவர் பரவாயில்லை என்ற கட்டத்தில் மட்டுமே அந்தச் செயல் சாத்தியமாக முடியும் என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர்.

இது தவிர மகிந்தவைப் பிரதமராக்கிய ஜனாதிபதியின் செயல் அரங்கேறுவதில் அவலப்பட்ட போது பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற அறிவிப்பை ஜனாதிபதி விடுக்கின்றார். இங்குதான் தமிழரசுக் கட்சி நீதிமன்ற வாசல் ஏறுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தைக் கலைப்புச் செய்தமை அரசியலமைப்புக்கு முரணான செயல் என்ற அடிப்படையில் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஜனாதிபதி சட்டத்தரணி கனகநாயகம் கனகாஸ்வரன் ஆகியோர் கொண்ட சட்ட வல்லுநர் குழு உயர்நீதிமன்றத்தை நாடி வாதம் புரிந்தது. வாதப் பிரதிவாதங்களை ஆராய்ந்த உயர்நீதிமன்றம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை அரசியலமைப்புக்கு முரணானதெனக் கூறி, பாராளுமன்றக் கலைப்புச் செல்லுபடியற்றது எனத் தீர்ப்பு வழங்கியது. தமிழ்ச் சட்ட வல்லுநர்களின் சாதனை எனப் புகழாரம் சூட்டப்பட்டது இவ்விடத்தில் தான்.

தாங்கள் (கம்பவாரிதி) பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தமிழ் மக்களின் தலைமைக்குரியவர் என்று கூறியிருந்தீர்கள்.

இராமபிரான் வாலியை மறைந்திருந்து தாக்கிய அவசரத் தன்மை தங்களிடமும் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

இதை நாம் கூறுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனை நாங்கள் எதிர்க்கின்றோம் என்று யாரும் நினைத்துவிடக்கூடாது. எம்.ஏ. சுமந்திரனின் சட்டவல்லமையை நாம் எந்த இடத்திலும் குறைத்து மதிப்பிடவில்லை.

சட்டத்துறையில் வல்லுநர் என்று போற்றக்கூடிய எம்.ஏ. சுமந்திரன், கனகநாயகம் கனகஈஸ்வரன் போன்ற இன்னும் பல தமிழ்ச் சட்டவல்லுநர்கள் நம் இனத்தைப் பெருமைப் படுத்துவார்கள். இதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது.

மாறாக நம் கேள்வியெல்லாம் உயர்நீதிமன்றில் ஏன் பாராளுமன்றக் கலைப்பை இரத்துச் செய்ததனால் தமிழ் இனத்திற்கு ஏற்படக்கூடிய நன்மை என்ன? என்பதுதான்.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்தினால் இது தமக்குப் பாதகமாக அமையும் என்ற நினைப்பு தமிழரசுக் கட்சியிடம் இருந்தது.

தவிர, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஓய்வூதியத்தைப் பெறுவதாக இருந்தால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் ஆகக் குறைந்தது நான்கு வருடங்களாவது பூர்த்தி செய்திருக்கவேண்டும். அவ்வாறு நான்கு வருடங்கள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்காமல் அப்படி யாரேனும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தால் அவர்களுக்கு நன்மை. மற்றும்படி தமிழ் மக்களுக்கான நன்மை என்ன என்று கேட்டால் எதுவுமில்லை என்பதே பதில்.

நாட்டின் அரசியலமைப்பைப் பாதுகாத்திருக்கின்றோம் என்றால் அது அர்த்தமற்றதும் பொருத்தமற்றதுமான பதிலாக இருக்கும்.(திங்கள் வளரும்)



07.12.2018 இல் உகரத்தில் கம்பவாரிதி எழுதிய சிறுமைச் சாதனைகள் என்ற கட்டுரையில் இடம்பெற்ற கற்பனைச் சித்திரம். (மூலம்-உகரம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மகேந்திரன்; காலம் கொடுத்த குறிஞ்சி மலர்



தமிழ்த் திரையுலகில் வசனகர்த்தாவாக அறிமுகமாகி, இயக்குநராக பிரகாசித்த மகேந்திரன் (1939 - 2019) தனது இறுதிக் காலத்தில் நடிகராகவும் அத்துறைக்குப் பங்களித்து வந்தவர். கதை, வசனம், இயக்கம், நடிப்பு என்று எல்லா நிலைகளிலும் அவரது பங்களிப்புகள் உண்டு என்றாலும் இயக்குநராக அவர் தொட்ட எல்லைகள் தமிழ்த் திரையுலகின் சாதனைகள்.

இந்தியாவில் ஐம்பதுகளிலேயே திரைப்படத் துறையில் புதிய அலை இயக்கம் தொடங்கிவிட்டது என்றாலும் எழுபதுகளின் இறுதியில்தான் அது தமிழ்த் திரையுலகில் தனது தடங்களை அழுத்தமாக பதித்தது. அப்போது, தமிழ்த் திரைப்படங்களின் உள்ளடக்கத்தையும் போக்கையும் மாற்றிய முகங்களில் ஒருவர் மகேந்திரன்.

மகேந்திரன் ஒரு தீவிர வாசகர் என்பதால், இலக்கியங்களிலிருந்து திரைப்படங்களுக்கு ஒரு மடைமாற்றத்தை ஏற்படுத்தினார். புதுமைப்பித்தனின் 'சிற்றன்னை'யையும் உமா சந்திரன், 'சிவசங்கரி ஆகியோரின் நாவல்களையும் தனது திரைப்படங்களுக்கான கருக்களாகக் கையாண்டார்.

இலக்கியங்களுக்கு அப்படியே திரை வடிவம் கொடுக்காமல் கலை வடிவங்களின் தன்மைகளுக்கு ஏற்றவகையில் அதை மறு-உருவழக்கம் செய்தார். அதேநேரத்தில் தான் உத்வேகம் பெற்ற இலக்கியங்களையும் அவற்றைப் படைத்த எழுத்தாளர்களையும் உரிய கௌரவத்தோடு பெருந்திரளான சினிமா ரசிகர்களிடம் அறிமுகப்படுத்தினார்.

'இவர்கள் ஏன் இப்படி நடந்துகொள்கிறார்கள்?' என்ற கேள்வியும் அதைத் தொடரும் ஆழ்மன விசாரணைகளும்தான் இலக்கியத்துக்கான தொடக்கப்புள்ளி என்றால், அதைத் திரைப்படங்களுக்கும் நீட்டித்தவர் மகேந்திரன். ஊராரின் பழிதூற்றலுக்கு ஆளானாலும் தன்னைத் திருத்திக்கொள்ளத் தடுமாறும் 'உதிரிப்பூக்கள்' நாயகனும் தங்கையின் பாசத்தை வாழ்நாள் முழுக்கவும் எதிர்பார்க்கும் 'முள்ளும் மலரும்' நாயகனும் வழக்கமான சினிமாக்களின் கதாநாயகர்கள் இல்லை, இலக்கியப் படைப்புகளில் மட்டுமே சாத்தியப்படுபவர்கள்.

ஆர்ப்பாட்டங்கள் எதுவும் இல்லாத எளிமைதான் மகேந்திரனின் அழகியல். அதற்கு ஏற்ற வகையிலேயே அவருடைய படங்களில் ஒளிப்பதிவும் இசையும் நடிப்பும் அமைந்திருந்தன. வணிக சினிமாவில் புகழ்பெற்ற கலைஞர்கள் பலரும் மகேந்திரனின் திரைப்படங்களில் மட்டும் தங்களது வழக்கத்துக்கு மாறாகக் காட்சியளித்தார்கள். குடும்ப உறவுகளுக்கு இடையிலான சிடுக்குகள்தான் மகேந்திரன் இயக்கிய படங்களின் மையப்பொருளாக இருந்தன என்றாலும் அவை வழக்கமான தமிழ் சினிமாவின் மிகையுணர்ச்சி நாடகங்களாக மாறிவிடாமல் யதார்த்தத்தின் எல்லைக்குள்ளேயே நின்றன. நிதானம் கைவரப்பெற்ற காட்சிமொழி அவரது பலம். எனினும், தான் இயக்கிய படங்களின் வாயிலாக மட்டுமே அவர் நினைவுகூரப்படுகிறார். அவர் இயக்கிய படங்களுக்கும் கதையாசிரியராகவும் வசனகர்த்தாவாகவும் பங்களித்த படங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளே, ஒரு எழுத்தாளனுக்கு தமிழ் சினிமா கொடுக்கும் இடம் என்ன என்ற கேள்விக்குப் பதிலாக இருக்கின்றன. இலக்கியமும் சினிமாவும் இணையும் ஒரு அபாரமான மரபை உருவாக்கி நமக்குக் கொடுத்துச் சென்றிருக்கிறார் மகேந்திரன். அவருக்குப் பிறகும் அவரது தடத்தில் பயணங்கள் தொடர வேண்டும்.

**த ஹிந்து ஆசிரியர் தலையங்கம்**

## சிம்பாவேயில் இடாய்
## பலி எண்ணிக்கை 2



(ஹராரே)

**சிம்பாவே நாட்டை அண்மையில் தாக்கிய இடாய் புயலின் பாதிப்பால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 270 பேர் உயிரிழந்தனர்.**

கிழக்கு ஆபிரிக்க நாடான மொசாம்பிக்கின் துறைமுக நகரான பெய்ராவை கடந்த மாதம் மணிக்கு 177 கிலோ மீற்றர் வேகத்தில் 'இடாய் புயல்' தாக்கியது. இதனால் ஏராளமான வீடுகளின் மேற்கூரைகளும் சுற்றுச்சுவர்களும் இடிந்து விழுந்தன.

இடாய் புயலின் கோரத்தாண்ட

## தன் மீது குற்றம் சுமத்தி
## கட்சியிலிருந்து நீக்கிய

(ஒட்டாவா)

தன் மீது குற்றவியல் குற்றம் சாட்டிய பெண் எம்.பி.கள் ஜோடி வில்சன் மற்றும் ஜானே பில்போட் ஆகியோரை தன்னுடைய தாராளவாத கட்சியில் இருந்து ஜஸ்டின் ட்ரூடோ அதிரடியாக நீக்கினார்.

கனடாவைச் சேர்ந்த பிரபல நிறுவனமான எஸ்.என்.சி. லாவ்லின், உலகின் தலைசிறந்த பொறியியல் மற்றும் கட்டுமான நிறுவனங்களில் ஒன்றாக திகழ்கிறது. இந்நிறுவனம் லிபியாவில் சில தொழில் ஒப்பந்தங்களை பெற அந்த நாட்டின் அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ள இந்த ஊழல் வழக்கின் விசா ரணையில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலையிடுவதாக அவரது சொந்தக் கட்சியைச் சேர்ந்த 2 பெண் எம்.பிக்கள் புகார் கூறினர்.

ஜோடி வில்சன் மற்றும் ஜானே பில்போட் ஆகிய 2 எம்.பிக்களும் ஜஸ்டின் ட்ரூடோ மீது கிரிமினல் குற்றம் சுமத்திய பிறகு, தங்களது பதவியை இராஜினாமாச் செய்தனர். விரைவில் அங்கு தேர்தல் நடக்க இருக்கும் சூழலில் ஜஸ்டின் ட்ரூடோ மீதான குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் அவரது செல்வாக்கை குறைத்துள்ளது.

## சூடு பிடிக்கும் தேர்தல் களம்

## ரபேல் விமான ஊழல் குறித்த விஜயனின் நூலிற்குத் தடை

(டில்லி)

ரபேல் விமானங்களை கொள்வனவு செய்வதில் இடம் பெற்ற ஊழல்கள் குறித்த தகவல்களை உள்ளடக்கிய நூலிற்கு தமிழகத்தில் தடை விதிக்கப் பட்டுள்ளமை பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ரபேல் ரக விமானங்களை கொள்வனவு செய்வதில் ஊழல்கள் இடம்பெற்றதாக குற்றம்சாட்டி வரும் காங்கிரஸ் கட்சி இதில் பிரதமர் மோடிக்கு நெருங்கிய தொடர்புள்ளதாகவும் குற்றம்சாட்டியுள்ளது.




இந்நிலையில் நாட்டை உலுக்கும் ரபேல் ஊழல் என்ற பெயரில் எழுத்தாளர் விஜயன் நூலொன்றை எழுதியுள்ளார்.

இந்த நூலை நேற்று முன்தினம் வெளியிடுவதற்கு திட்டமிட்டிருந்த நிலையில் இந்தியாவின் தேர்தல் ஆணையம் இந்த நூலிற்கு தடை விதித்துள்ளதாக தெரிவித்த தேர்தல்கால பறக்கும் படையினர் குறிப்பிட்ட நூலை வெளியிட்ட பாரதி பதிப்பகத்திலிருந்து பறிமுதல் செய்தனர்.

இதேவேளை இவ்வாறு நூலைப் பறிமுதல் செய்வது ஜனநாயக விரோத சட்டவிரோத நடவடிக்கை என இந்துராம் கருத்து வெளியிட்டுள்ளார்.

இது கருத்துச் சுதந்திரம். பேச்சுச் சுதந்திரத்திற்கு எதிரானது எனவும் ராம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறிப்பிட்ட நூலைப் பறிமுதல் செய்ய உத்தரவிடவில்லை என தெரிவித்துள்ள தேர்தல் ஆணையம் இது குறித்து விளக்கம் கோரியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (7)

## இந்தியாவுடன் அமைதி
## அமெரிக்கா உதவ

### பாக். வலியுறுத்து

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுடன் மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க அமெரிக்கா உதவ வேண்டும் என பாகிஸ்தான் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தியாவின் புல்வாமாவில் கடந்த பெப்ரவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 45 படையினர் உயிரிழந்தனர். இதையடுத்து பாகிஸ்தான்-இந்தியாவுக்கிடையே பதற்ற நிலை அதிகரித்தது.

இந்நிலையில், அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் போம்பியோவை பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் ஷா மெக்மூத் குரேஷி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# ... கோரத்தாண்டவம் ... 270 ஆக உயர்வு!



...வத்துக்கு மொசாம்பிக் நாட்டில் சுமார் 500 பேர் பலியாகினர். தெற்காபிரிக்காவில் உள்ள சிம்பாவே நாட்டின் கிழக்கு பகுதியையும் இந்த கோரப்புயல் பதம் பார்த்தது.

புயலைத் தொடர்ந்து பெய்த கனமழையால் பல நகரங்கள் வெள்ளக்காடாக காட்சி அளிக்கின்றன. பல்வேறு பகுதிகளை இணைக்கும் முக்கிய வீதிகளை வெள்ளநீர் அடித்துச் சென்று விட்டதால் நகரங்கள் எல்லாம் தீவுக் கூட்டங்களாக காட்சி அளிக்கின்றன.

இதனால். வெள்ள நீருக்கு இடையில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு போதுமான நிவாரணப் பொருட்களை அனுப்பி வைக்க முடியாமல் அரசு திண்டாடி வருகிறது.

இந்நிலையில், இடாய் புயலால் ஏற்பட்ட மழை, வெள்ளம் சார்ந்த விபத்துகளில் இதுவரை 270 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டின் தகவல், ஒலிபரப்புத்துறை அமைச்சர் மோனிகா முட்ஸ்வாங்வா நேற்று தெரிவித்துள்ளார். (7)

# ஆப்கானிஸ்தானில் மோதல்; 25 பயங்கரவாதிகள் பலி

(காபூல்)



ஆப்கானிஸ்தானில் இராணுவத்துக்கும் தலிபான் பயங்கரவாதிகளுக்கும் இடையில் நடந்த மோதலில் 25 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய தினம் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் வடக்குப் பகுதியில் உள்ள படாக்ஷா மாகாணத்தில் 12 பயங்கரவாதிகளும் கிழக்கு பகுதியில் உள்ள குனார் மாகாணத்தில் 13 பயங்கரவாதிகளும் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டு வடக்குப் பகுதியில் தலிபான் பயங்கரவாதிகள் மற்றும் பல்வேறு சிறிய பயங்கரவாத குழுக்களின் ஆதிக்கம் அண்மைக்காலமாக மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளது.

அவ்வகையில், வடக்கு மற்றும் வடகிழக்கு ஆப்கானிஸ்தானுக்கு உட்பட்ட பல பகுதிகளில் கடந்த ஓராண்டு காலமாக நடைபெற்ற தேடுதல் வேட்டை மற்றும் மோதல்களில் இருதரப்பிலும் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே, பயங்கரவாதிகள் மீது இரக்கம் காட்டாமல் நடவடிக்கை எடுக்குமாறு அந்நாட்டின் இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு ஜனாதிபதி அஷ்ரப்கான்ி உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## பிரெக்சிற் விவகாரம்

# தெரேசா மேக்கு எதிர்ப்பு; பிரிட்டன் எம்.பி.இராஜினாமா

(லண்டன்)



பிரெக்சிற் விவகாரத்தில் பிரதமர் தெரசா மேக்கு தனது எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் பிரிட்டன் அமைச்சர் நைஜல் ஆடம்ஸ் இராஜினாமா செய்தார்.

ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து வெளியேறுவது தொடர்பான 'பிரெக்சிற்' விவகாரத்தில் பிரிட்டன் பாராளுமன்றத்தில் 4 ஆவது முறையாக வாக்கெடுப்பு நடத்த பிரதமர் தெரசா மே பரிசீலித்து வருகிறார். இது தொடர்பாக அவர் எதிர்க்கட்சி தலைவரான ஜெரேமி கார்பைனை சந்தித்து பேச திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஆனால் இதற்கு எதிராக வேல்ஸ் பகுதிக்கான அமைச்சர் நைஜல் ஆடம்ஸ் போர்க்கொடி உயர்த்தி உள்ளார். "ஜெரேமி கார்பைனை பிரதமர் தெரசா மே சந்தித்துப் பேச இருப்பது மிகப் பெரிய தவறு" என அவர் கூறினார்.

பிரதமர் தெரசா மேக்கு தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில், அவர் அமைச்சர் பதவியில் இருந்து நேற்று இராஜினாமா செய்தார். (7)

# ...திய பெண் எம்.பிக்களை ... கனடா பிரதமர் ரூடோ



இந்த நிலையில், தன் மீது கிரிமினல் குற்றம் சாட்டிய ஜோடி வில்சன் மற்றும் ஜானே பில்போட் ஆகியோரை தன்னுடைய தாராளவாத கட்சியில் இருந்து ஜஸ்டின் ட்ரூடோ அதிரடியாக நீக்கினார். இந்த நடவடிக்கை அவரை மேலும் விமர்சனத்துக்குள்ளாக்கி இருக்கிறது. ஊழல் மற்றும் கிரிமினல் குற்றங்களை வெளியே கொண்டு வந்த 2 உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்கி பிரதமர் துரோகம் இழைத்துவிட்டார் என எதிர்க்கட்சி தலைவர் ஆண்ட்ரூ ஸ்கீர் கடுமையாகச் சாடினார். (7)

# ...ப் பேச்சுக்கு ... வேண்டும்

...தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

இந்த உரையாடலின்போது ஷா மெக்மூத் குரேஷி,

இந்தியாவுடன் பதற்றத்தை தணிக்க பாகிஸ்தான் எடுத்து வரும் நடவடிக்கைகளை எடுத்துக் கூறியதுடன், பாகிஸ்தான் இராணுவத்திடம் பிடிபட்ட இந்திய விமானப்படை அதிகாரி அபிநந்தன், திரும்ப ஒப்படைக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவுடன் மீண்டும் பேச்சுவார்த்தையை தொடங்குவதற்கு அமெரிக்கா உதவ வேண்டும் என்று குரேஷி கேட்டுக்கொண்டார்.

இந்த பிராந்திய நிலவரம் குறித்தும், இருதரப்பு உறவு குறித்தும் இருவரும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டனர். இந்த பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு பாகிஸ்தான் - அமெரிக்கா நல்லுறவு, சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் பதற்றத்தை தணிக்க அமெரிக்கா எடுத்த நடவடிக்கைகள் பாராட்டுக்கு உரியவை என்றும் குரேஷி மேலும் தெரிவித்தார். (7)

# இந்தியாவின் செயற்கைக்கோள் சோதனை குறித்த நாசாவின் விமர்சனத்தை நிராகரித்த அமெரிக்கா

(வோஷிங்டன்)



இந்தியாவின் செயற்கைக் கோள் தகர்ப்பு சோதனை குறித்து நாசாவின் விமர்சனத்தை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

இந்தியா, ஏவுகணை மூலம் செயற்கைக்கோளை சுட்டு வீழ்த்தும் சோதனை நடத்தியதை அமெரிக்காவின் 'நாசா' விமர்சனம் செய்தது. இச்சோதனையால், 400 சிதைவு பாகங்கள் உருவானதாகவும் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு இதனால் ஆபத்து என்றும் கூறியது.

ஆனால், இந்த விமர்சனத்தை அமெரிக்கா நிராகரித்துள்ளது. இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை துணை செய்தித் தொடர்பாளர் ராபர்ட் பல்லடினோ கூறியதாவது,

விண்வெளி குப்பை பிரச்சினை, அமெரிக்காவுக்கு கவலைக்குரிய பிரச்சினைதான். அது பற்றிய இந்திய அரசின் விளக்கத்தையும் பார்த்தோம். இந்தியாவுடன் நட்புறவு உள்ளது. விண்வெளி பாதுகாப்பை உறுதி செய்ய இருவரும் தொடர்ந்து பணியாற்றுவோம் என அவர் தெரிவித்தார். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு இறப்பர் அபிவிருத்தி வலயம் இலங்கையில் அமைக்கிறது சீனா

## இம்மாத இறுதியில் உடன்படிக்கை

(கொழும்பு)

இலங்கையில் சிறப்பு இறப்பர் அபிவிருத்தி வலயம் ஒன்றையும் இறப்பர் கைத்தொழில் வலயம் ஒன்றையும் அமைக்க சீன அரசாங்கம் முதலீடு செய்யவுள்ளது.


சீனாவின் ஹய்னான் இறப்பர் அபிவிருத்தி வலயத்திலிருந்து வந்திருந்த சிறப்புக் குழுவினர், இது தொடர்பாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்கவுடன் நேற்று முன்தினம் பேச்சுக்களை நடத்தினர்.

சீனக் குழுவுக்கு ஹய்னான் மாகாணத்தின் வெளிவிவகார மற்றும் அனைத்துலக பொருளாதார உறவுகளுக்கான தலைவர் ஜிங்லீ ஹன் தலைமை தாங்கினார்.

இந்தப் பேச்சுக்களையடுத்து இறப்பர் வலயத்தை அமைப்பது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு இந்த மாத இறுதியில் சீனாவில் கையெழுத்திடப்படவுள்ளது.

இதில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க கலந்து கொள்ளவுள்ளார். (இ-7)

# கொழும்பு துறைமுகத்தில் ரஷ்ய போர்க்கப்பல்





(கொழும்பு)

ரஷ்ய கடற்படையின் Gorshkov என்ற போர்க்கப்பல் நல்லெண்ணப் பயணமாக நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

136 மீற்றர் நீளம் கொண்ட Admiral Gorshkov வகையைச் சேர்ந்த இந்தப் போர்க்கப்பலில் 28 அதிகாரிகளும் 208 மாலுமிகளும் உள்ளனர்.

கொழும்பில் தரித்து நிற்கும் போது, இலங்கைக் கடற்படையி னருடன் இணைந்து ரஷ்ய கடற் படையினர் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளனர்.

இந்த ரஷ்ய போர்க்கப்பல் இன்று கொழும்பு துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளது. (இ-7)

# அம்பாந்தோட்டையில் மற்றொரு எண்ணெய் ஆலை

## 14 பில்லியன் டொலர் முதலீடு—நளின்



(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் மற்றொரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் சிங்கப்பூரின் Sugih Energy International நிறுவனம் 14 பில்லியன் டொலரை முதலீடு செய்யவுள்ளதாக அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் அனைத்துலக வணிக பிரதி அமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வரவு-செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஏனைய சிங்கப்பூர் நிறுவனங்களால் முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களை விட இந்த முதலீடு மிகப்பெரியது.

முதலாவது சிங்கப்பூர் நிறுவனம் அமைக்கவுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நாளொன்றுக்கு 2 இலட்சம் பீப்பாய்களை மாத்திரம் உற்பத்தி செய்யும் ஆற்றல் கொண்டது. ஆனால் இரண்டாவது நிறுவனத்தின் ஆலை, நாளொன்றுக்கு 4 இலட்சத்து 20 ஆயிரம் பீப்பாய்களை உற்பத்தி செய்யக் கூடியது.

இரண்டாவது சிங்கப்பூர் முதலீட்டாளர் இரண்டாவது கட்டமாக பெற்றோலிய இரசாயனம் மற்றும் துணை உற்பத்திகளை மேற்கொள்ளும் வகையில் தமது முதலீட்டை 24 பில்லியன் டொலராக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கிறார்.

புதிய நிறுவனத்தின் முதலீட்டுக்காக அம்பாந்தோட்டையில் 600 ஏக்கர் நிலம் வழங்கப்படும்" என்றும் நளின் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தேரரை அமைச்சர் திட்டியதால் பரபரப்பு



(நாவலப்பிட்டிய)

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பிக்கு ஒருவரை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தகாத வார்த்தைகளால் திட்டியுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கம்பளை- நாவலப்பிட்டி, உலப்பனை வீதியின் மரியாவத்தை சந்தி வரையான வீதி புனரமைக்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச மக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தின் இடையில் பிக்கு ஒருவர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவிற்கு தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தினார்.

இதன்போது இருவருக்கும் இடையிலான கலந்துரையாடலின் போது கோபமடைந்த அமைச்சர் பிக்குவை தகாத வார்த்தையால் திட்டியுள்ளார்.

தொலைபேசி உரையாடலின் போது அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல வழங்கிய பதிலால் ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் அமைதியின்மை ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விளக்கமளித்துள்ள அமைச்சர் கிரியெல்ல,

குறித்த வீதிக்கு தாம் ஏற்கனவே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியதாகவும் ஒப்பந்தத்தைப் பொறுப்பேற்க எவரும் இருக்காததால், அதனை செய்ய முடியாமற்போனது.

எனினும் ஆர்ப்பாட்டத்தின் போது தன்னுடன் தொலைபேசியில் உரையாற்றிய நபர் தேரர் என தனக்குத் தெரியாததால், அவர் தன்னைத் திட்டியதால் தானும் பதிலுக்கு திட்டியதாக அமைச்சர் விளக்கமளித்துள்ளார். (இ-7)

# வர்த்தகக் கப்பல் சட்டத்தில் திருத்தம்

சர்வதேச சமுத்திர அமைப்பின் இணக்கப்பாட்டிற்கு அமைவாக 1971ஆம் ஆண்டு இலக்கம் 51 இன் கீழான வர்த்தக கப்பல் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ள திருத்த சட்டமூலத்தை அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் அதன் பின்னர் அனுமதிக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# காய்ச்சல்

முகம் இருக்கே அது எப்பொழுது சிவக்கும்? கோபம் வந்தால் சிவக்கும்! வெட்கம் வந்தால் சிவக்கும்! அதேமாதிரி காய்ச்சல் வந்தாலும் சிவக்கும். அதனால் ஒருவருக்கு காய்ச்சலினால் முகம் சிவந்து வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது அவரைப் பார்த்துவிட்டு வெட்கப்பட்டுக் கொண்டிருகின்றார் போல இருக்கின்றது என்று நினைத்துவிட்டு விலகிப் போய்விடக் கூடாது. என்னவென்று விசாரிக்க வேண்டும்! காய்ச்சல் என்பது என்னவென்று நினைக்கின்றீர்கள்? அது ஒரு நோய் கிடையாது!

'காய்ச்சல்' ஒரு வியாதியே அல்ல! வியாதி இருக்கு என்று தெரிவிக்கிற ஒரு அறிகுறிதான் அது! வானிலை முன்னறிவிப்பு என்று சொல்வது போல உடல்நிலை முன்னறிவிப்பு இது!

எனது உடம்பில் எப்பவும் சூடு இருந்துகொண்டே இருக்கும்! இருக்க வேண்டிய அளவுக்கு அது இருந்தால் சாதாரணம் (Normal) என்று சொல்கின்றோம்! இருக்க வேண்டிய அளவை விட அதிகமாக இருந்தால் அதைக் காய்ச்சல் என்கின்றோம்.

எமது உடம்பிலுள்ள உறுப்பு அல்லது திசு (Tissue) பாதிக்கப்பட்டுள்ளது என்பதன் ஒரு அடையாளம் தான் காய்ச்சல்! மருத்துவ ரீதியாக இதற்கு விளக்கம் என்ன தெரியுமா? இப்ப தொற்று வியாதியால் ஒரு திசு பாதிக்கப்பட்டுள்ளது என வைத்துக்கொள்ளுங்கள்! அதை உடனே உடம்பிலிருந்து வெளியேற்ற ஒரு முயற்சி நடக்கின்றது! இரத்தத்தில் வெள்ளை அணுக்கள் இருக்கின்றதல்லவா! அவையெல்லாம் சண்டை போடுகின்ற சிப்பாய்கள்! இவை பாதிக்கப்பட்ட திசுவை சுற்றிவளைத்துக்கொண்டு அதை விழுங்குவதற்கு முயற்சி எடுக்கின்றன! இந்த முயற்சியில் பல வெள்ளை அணுக்கள் இறந்து போய்விடுகின்றன! அப்படி இறக்கும் போது Pyrogens என்ற பொருளை சுரக்கின்றது! இந்தப் பொருள் உஷ்ணத்தை ஏற்படுத்துகின்றது. அதனாலே காய்ச்சல் வருகின்றது! இதுதான் மருத்துவ விளக்கம்.

உடம்பில் உஷ்ணம் அதிகரிக்கும் போது எல்லா முக்கிய உறுப்புக்களுக்கும் அபாய அறிவிப்பு செல்கின்றது! உடம்பு சூட்டைத் தணிக்க ஒரு யுத்தம் நடக்கின்றது. தோலிலுள்ள இரத்தக் குழாய் விரிவடைகின்றது. இதானாலே முகம் சிவக்கின்றது. இதயம் வேகமாக இயங்குகின்றது. ஏனென்றால் அப்பொழுது தான் இரத்த ஓட்டம் அதிகமாகவும் பாதிக்கப்பட்ட வெள்ளை அணுவை அப்புறப்படுத்தவும் முடியும்! சுகாதாரணமான அணுக் களின் உற்பத்தியை அதிகரிக்க முடியும். இந்த யுத்தம் வெற்றி பெறும் பொழுது எமக்கு வியர்வை உண்டாகின்றது. ஏதோ நாமே சண்டை போட்டது மாதிரி! வியர்வை உண்டாவதால் சூடு தணியும்.

சரி இதெல்லாம் இருக்கட்டும்! காய்ச்சல் உடம்பிற்கு நன்மையா? தீமையா? இதற்கு முடிவான பதிலை யாரும் இது வரைக்கும் சொல்லவில்லை.

காய்ச்சலினால் இரத்த ஓட்டம் அதிகரிக்கின்றது! கிருமிகளைக் கொல்வதற்கு அதிகமான வெள்ளை அணு உற்பத்தி செய்யப்படுகின்றது. இதுதான் உண்மை. 'காய்ச்சல்' தான் 'வியாதி' இல்லையே என நினைத்து அலட்சியமாக இருக்கக் கூடாது!

100 டிகிரிக்கு மேல் காய்ச்சல் இருந்தால் கவனமாக இருக்க வேண்டும். 103 டிகிரி இருந்தால் மூளை தற்காலிகமாக பாதிக்கப்படலாம். தெளிவில்லாமல் இருக்கிறது, அமைதியில்லா மல் இருக்கிறது, இவையெல்லாம் இருக்கலாம். 106 இற்கு மேல் இருந்தால் மூளை நிரந்தரமாகப் பாதிக்கப்படலாம்.

குழந்தைகளுக்கு சாதாரண தடிமன் வந்தால் கூட 105 டிகிரி காய்ச்சல் இருக்கும். அதற்காகப் பயப்பட வேண்டியதில்லை!

ஆனால் 105 டிகிரி பெரியவங்களுக்கு இருந்தால் கஷ்டமாக இருக்கும். அதுசரி காய்ச்சல் வந்தால் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? வைத்தியர்கள் என்ன சொல்கின்றார்கள் தெரியுமா? அதிகமான திரவங்களைச் சாப்பிட வேண்டும்! வியர் வையினால் ஏற்படுகின்ற இழப்பை இது சரி செய்யும்! நல்ல ஓய்வும் ஊட்டமும் தேவை! காய்ச்சல் வந்தால் பட்டினியாய் இருக்க வேண்டுமென சிலர் சொல்வார்கள். அது சரியில்லை! புரதச்சத்து இந்த சமயத்தில் அதிகமாய் தேவைப்படும். காய்ச்சிலினால் புரதச்சத்து அதிகமாக எரிக்கப்படுகின்றது. அதை ஈடு செய்ய வேண்டும். அதனால் தான் காய்ச்சல் வந்தால் பட்டினி இருக்கக் கூடாது. சாதாரண காய்ச்சலுக்கெல்லாம் பயப்படக் கூடாது. நாம் பயந்தால் காய்ச்சலுக்கு துணிச்சல் வந்துவிடும். அதனால் அது இன்னும் அதிகமாகிவிடும். சிலர் வைத்தியசாலைக்குப் போவார்கள். பணம் எவ்வளவு எனக் கேட்டதும் காய்ச்சல் ஆரம்பிக்கும்! இந்த காய்ச்சலைக் குறைப்பதற்கு இன்னும் யாரும் மருந்து கண்டுபிடிக்கவில்லை. இதேமாதிரி வேறு சில காய்ச்சலும் உண்டு. 'பரீட்சைக் காய்ச்சல்' என ஒன்று! பரீட்சை நெருங்கினால் போதும் சரியாகப் படிக்காத பிள்ளைகளுக்கு இந்தக் காய்ச்சல் வரும்!

தேர்தல் நெருங்கினால் வரும் காய்ச்சல் 'தேர்தல் காய்ச்சல்' 103 டிகிரிக்கு மேல போனால் பேச்சிலே தெளிவிருக்காது!

ஏதோ ஒரு வியாதிக்கு அறிகுறிதான் 'காய்ச்சல்' என மருத்துவம் சொல்கின்றது. அப்படியென்றால் தேர்தல் காய்ச்சல்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு இராசி பலன்கள் - 2019

## 14.04.2019 முதல் 13.04.2020 வரை



**மிதுன இராசிவாசகர்களே!**

விகாரி வருடம் பிறக்கும் பொழுது உங்கள் இராசியில் இராகுவும் சப்தம ஸ்தானத்தில் கேதுவும் இருக்கின்றார்கள். ஊர்ந்து செல்லும் பாம்பு கிரகங்கள் ஜென்ம இராசியில் சஞ்சரிக்கும் பொழுது பயணங்கள் அதிகரிக்கும். இடமாற்றம், வீடு மாற்றம், ஊர் மாற்றம் போன்றவைகள் எதிர்பாராத விதத்தில் வந்து சேரும். அதிசார குரு தனுசு இராசியில் சஞ்சரித்தபடி உங்கள் இராசியை சப்தம பார்வையாகப் பார்க்கின்றது. ஆண்டின் தொடக்கமே அமர்க்களமாக அமையப்போகின்றது.

வருடத் தொடக்க நாள் ஆயிலிய நட்சத்திரத்தில் கடக இராசியில் பிறக்கின்றது. தன ஸ்தானத்தில் தனாதிபதி சந்திரன் வலுப்பெற்றும் குருவின் பார்வையோடும் இந்த ஆண்டு பிறப்பதால் சென்ற ஆண்டில் நடைபெறாத காரியங்கள் எல்லாம் ஆண்டின் தொடக்கத்திலேயே நடைபெறப் போகின்றது. உடல் ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும். கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் துரிதமாக நடைபெறத் தொடங்கும்.

தகராறுகள் எல்லாம் தானாக விலகும். கூட்டுத்தொழிலில் கூட்டாளிகளால் ஏற்பட்ட ஏமாற்றங்கள் அகலப் புதிய பாதை புலப்படும். நெருக்கடி நிலை மாறும். நிதி நிலை தேவைப்படும் அளவிற்கு மேலாகவே உங்கள் கரங்களில் புரளும். அசையா சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் ஆதரவோடு விருப்பப்பட்ட இடத்திற்கு மாறுதல் வாங்கிக் கொண்டு செல்ல வாய்ப்புகள் உருவாகும். 7 இல் சனி இருக்கின்றாரே என்ன செய்யப்போகிறோம் என்று சிந்திக்க வேண்டாம். குருவோடு சில காலங்கள் அவர் கூடியிருப்பதால் எதிர்பார்ப்புகள் எல்லாம் நிறைவேறும். சுபச் செலவுகளாகவே வந்து கொண்டேயிருக்கும்.

சப்தமாதிபதி குரு சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். "குரு பார்க்கக் கோடி நன்மை" என்பது போல குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். திருமண முயற்சிகள் கைகூடும். சந்தோசத்தோடு கூடிய சம்பள உயர்வுகள் வந்து சேரும்.

உங்கள் இராசிநாதன் புதன் நீச்சம் பெற்றிருக்கின்றார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் நீச்சம் பெற்றிருப்பது யோகம்தான். எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். உதிரி வருமானங்கள் பெருகும். தக்க விதத்தில் தங்கம், வெள்ளி போன்றவற்றில் முதலீடு செய்வீர்கள். பங்குதாரர்கள் நல்ல முறையில் பாகப்பிரிவினைகளைச் செய்து கொண்டு தாங்களாகவே விலகிச் செல்ல முன்வருவர். இந்த நல்ல நேரத்தில் புதிய பங்குதாரர்கள் உங்களோடு வந்திணைந்து பொருளாதார நிலையை உயர்த்தப் பாடுபடுவர்.

**தனுசு குருவின் சஞ்சாரம்**

**(14.4.2019 முதல் 17.5.2019 வரையிலும் மீண்டும் 28.10.2019 முதல் 13.4.2020 வரையிலும்)**

இக்காலத்தில் குருவினுடைய பார்வை உங்கள் இராசியிலும் 3, 11 ஆகிய இடங்களிலும் பதிகின்றது. எனவே தேகநலன், செயற்றிறன், மகிழ்ச்சியான மனநிலை, கௌரவம், உடன்பிறப்புகளின் உதவி, வழக்குகள், மூத்த சகோதரர், பணியாளர்கள், தொழிலில் இலாபம், கௌரவப் பதவி, முன்னோர் சொத்து, பணப்புழக்கம் ஆகியவற்றில் எல்லாம் குருவின் பார்வை பலத்தால் நற்பலன்கள் கிடைக்கப் போகின்றது.

'ஜென்மத்தை குருதான் பார்த்தால் சிரமங்கள் அகன்று ஓடும்' என்பர். இதுவரை பட்ட துயரங்கள் இனி அகன்று ஓடும். உடல்நிலை சீராகி உற்சாகப்படுத்தும். உறவினர்களின் ஒத்துழைப்பு கூடுதலாக கிடைக்கும். அரசுவழி உத்தியோக முயற்சி கைகூடும்.

உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் முயற்சிகளில் வெற்றி கிடைக்கப் போகின்றது. உடன் பிறந்தவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். சென்ற ஆண்டு உங்களை விட்டுப் பிரிந்து சென்ற பங்குதாரர்கள் தவறை உணர்ந்து மீண்டும் உங்களோடு வந்திணைந்து செயல் புரியத் தொடங்குவர். பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். வீட்டை விரிவு செய்து கட்ட வேண்டுமென்று முயற்சித்தவர்களுக்கு அந்த முயற்சி கைகூடும். ஒருசிலர் பழைய வீட்டைப் புதுப்பிக்க நினைப்பர்.

இதுவரை நீங்கள் உங்கள் பெற்றோர்களுக்கும் உற்றார், உறவினர்களுக்கும் என்னதான் உதவி செய்தாலும் அவர்கள் உரிய விதத்தில் நன்றி காட்டவில்லையே என்று நீங்கள் நினைத்திருக்கலாம். அந்த நிலை இனி அடியோடு மாறப்போகின்றது. பெற்றோர்களின் மணிவிழா, முத்துவிழா, பவளவிழா, சதாபிஷேக விழா போன்றவற்றைக் கொண்டாட நீங்கள் முன்வருவீர்கள்.

ஆக்கபூர்வமான யோசனைகளால் தேக்க நிலை அகலும். திறமை மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பல நல்ல காரியங்களை முடித்துக்கொடுப்பர். ஒத்துவராத பணியாளர்களை ஒதுக்கிவிட்டு புதிய பணியாளர்களைச் சேர்த்துக் கொள்வீர்கள்.

குருவின் பார்வை 11 ஆம் இடத்தில் பதிவதால் வியாபாரம் சம்பந்தமாக வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் கைகூடும். தடம்மாறிச் சென்றவர்கள் தானாக வந்திணையும் நேரமிது. கடைதிறப்புவிழா, கட்டடத் திறப்புவிழா போன்றவைகள் நடைபெறும் நேரமிது.

**விருச்சிக குருவின் சஞ்சாரம்**

**(18.5.2019 முதல் 28.10.2019 வரை)**

இக்காலத்தில் குரு பகவான் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். குறிப்பாக 7.8.2019 வரை வக்கிர இயக்கத்திலும் பிறகு வக்கிர நிவர்த்தியாகி




**ஜோதிட கலாமணி சிவல்புரி சிங்காரம்**

விருச்சிகத்திற்குள்ளேயே உலா வருகின்றார். உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும். இல்லத்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புக் கைகூடும். குடும்பத்தில் நடைபெற இருக்கும் சுபகாரியத்தை முன்னிட்டு மனையை விரிவுபடுத்திக்கட்டும் முயற்சி அல்லது கட்டியுள்ள மனையைப் பழுது பார்க்கும் வாய்ப்பும் உருவாகும்.

குருவின் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் இதுவரை தொழில் அமையவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது தொழில் அமையும். படித்த படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கவில்லையே என்று நினைத்தவர்களுக்கு இப்பொழுது படிப்பிற்கேற்ற வேலை மட்டுமல்லாமல், அரசு பணிகளும் கிடைக்கலாம்.

தொழிலை விரிவு செய்ய தொகை போட முடியவில்லையே, யாராவது உதவி செய்வார்களா என்று சிந்தித்தவர்களுக்கு இப்பொழுது வங்கிகளின் ஒத்துழைப்பும் கிடைக்கும், வள்ளல்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

குருவின் பார்வை 12 ஆம் இடத்தில் பதிவதால் பயணங்கள் பலன் தருவதாக அமையும். உத்தியோகத்தில் இருந்து விடுபட்டு விருப்ப ஓய்வில் வெளிவந்து வெளியூரில் தொழில் செய்யலாமா? என்று எண்ணியவர்களுக்கு அது வெற்றிகரமாக நிறைவேறும். வீடுமாற்றம், ஊர்மாற்றம் போன்றவைகள் எதிர்பார்த்த விதம் அமையும். வியாபாரத்தில் புதிய பணியாளர்களை சேர்த்துக்கொண்டு பொருளாதார வளர்ச்சி பெருக வழி அமைத்துக் கொள்வீர்கள். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பொறுப்புகள் கிடைக்கும்.

**சனியின் சஞ்சார நிலை**

ஆண்டு முழுவதும் சனி பகவான் கண்டகச் சனியாகச் சஞ்சரிக்கின்றார். இடையில் 8.5.2019 முதல் 3.9.2019 வரை தனுசு இராசியில் வக்கிரம் பெறுகின்றார். சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனியின் பார்வை முழுமையாக உங்கள் இராசியில் பதிகின்றது. எனவே ஆரோக்கியத் தொல்லை ஓரளவு உருவாகலாம்.

குடும்பத்தினர்களிடம் குறைகளைப் பேசாமல் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. நண்பர்களிடம் ஒப்படைத்த பொறுப்பு மீண்டும் உங்களிடமே வந்து சேரும். வெளிநாட்டில் உள்ளவர்கள் வேலை கிடைக்காமல் தாய்நாடு திரும்பும் சூழ்நிலைகூட உருவாகலாம். இக்காலத்தில் சனிக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

**இராகு-கேதுக்களின் சஞ்சாரம்**

உங்கள் இராசியிலேயே இராகுவும் சப்தம ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். எனவே பெரிய மனிதர்களின் தொடர்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். தைரியமும் தன்னம்பிக்கையையும் தக்க வைத்துக்கொள்வது நல்லது. குடும்பத்துடன் உல்லாசப் பயணங்கள் செல்லும் முயற்சி கைகூடும். கேதுவின் பலத்தால் விவாகப் பேச்சுக்கள் விரைவில் முடிவடையலாம். வந்து திரும்பிய வரன்கள் கூட மீண்டும் வரலாம். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள். குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்வதால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும்.

**சனி-செவ்வாய் பார்வைக்காலம்**

**(14.4.2019 முதல் 23.6.2019 வரை)**

இக்காலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி உங்களுக்குத் தேவை. கொடுக்கல்-வாங்கல்களில் நண்பர்களை நம்பி ஏமாறும் சூழ்நிலை உண்டு. வழக்குகளில் திடீர் திருப்பங்கள் ஏற்படும். மனக்குழப்பம் அதிகரிக்கும் இந்த நேரத்தில் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. அலைச்சலைக் குறைத்துக் கொள்வதன் மூலம் பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

மிதுன இராசியில் பிறந்த பெண்களுக்கு ஆண்டின் தொடக்கத்தில் குரு பார்வை இருப்பதால் நினைத்தது நிறைவேறும். நேசிக்கும் உறவினர்கள் யோசிக்காது வந்து உதவி செய்வர். வங்கிச் சேமிப்பு உயரும். வருமானம் போதுமானதாக இருக்கும். கணவன்-மனைவி இடையே ஒற்றுமை பலப்படும். புகுந்த வீட்டிற்குப் பெருமை சேர்க்கும் நேரமிது. விருச்சிக குருவின் சஞ்சாரத்தின் போது ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்படும். இடுப்பு, முதுகு, கழுத்துப்பகுதிகளில் வலி ஏற்பட்டு அகலும். வேலை ஆட்களை மாற்றும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பும் உருவாகும்.

பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்தபடியே இலாகா மாற்றங்கள், ஊதிய உயர்வு உண்டு. சொத்துக்கள் வாங்கும் பொழுது வில்லங்கங்கள் பார்த்து வாங்குவது நல்லது.

சனியின் வக்கிர காலத்தில் உறவினர் பகை உருவாகலாம். பௌர்ணமி வழிபாடும் கிரிவலம் வருவதும் மகத்துவமான பலன் தரும்.

**வருடம் முழுவதும் வசந்த காலமாக வழியாடு**

புதன்கிழமை தோறும் மகாலட்சுமி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

எட்டுவகை லட்சுமிக்குரிய சமயமாலை படித்து வழிபடுவதன் மூலம் தனவரவு திருப்தி தரும். சந்தோசமும் வந்து சேரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யுத்தக் குற்றங்களை ஆராய சர்வதேச நீதிபதிகள் அவசியமில்லை!

## ஹக்கீம் மீது சிறீதரன் பாய்ச்சல்

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்களை ஆராய சர்வதேச நீதிபதிகள் அவசியமில்லையென அமைச்சர் ஹக்கீம் கூறியதை தமிழ் மக்கள் வன்மையாக கண்டிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழர்கள் கொல்லப்பட்டதை மறைத்து அமைச்சுப் பதவிக்காக இவ்வாறு நடந்துகொள்ள வேண்டாம் எனவும் சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கு சர்வதேச நீதிபதிகள் வரவேண்டிய அவசியம் இல்லை. இலங்கையின் நீதிமன்றம் ஒன்று போதுமானது என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அல்லாஹ்வை வணங்கும் புனித மார்க்கத்தை பின்பற்றும் ஒரு மனிதர் இங்கு பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டபோது ஒரு வார்த்தை கூட பேசாத மனிதர் ரவூப் ஹக்கீம்.



குழந்தைகள் கொல்லப்பட்ட போது, பலர் அழுதே உயிர் நீத்த போது ரசித்துக்கொண்டிருந்தவர் ஹக்கீம். யுத்தம் முடிந்த பின்னர் 2011 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்திற்கு முன்னால் இங்கு யுத்தத்தில் யாரும் கொல்லப்படவில்லை என அரசாங்கத்திற்காக பிரசாரம் செய்தார். இப்போது மீண்டும் அதே பாணியில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

எனவே இவரது கருத்துக்களை தமிழர்கள் ஆகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனவும் சிறீதரன் தெரிவித்தார். (இ-7)

# நடிகர் ரயன் உள்ளிட்ட நால்வர் டுபாயிலிருந்து நாடு கடத்தல்



(கொழும்பு)

டுபாயில் கைதுசெய்யப்பட்டுள்ள பிரபல பாதாள உலகக் குழுத் தலைவன் மாகந்துரே மதூஷுடன் கைதுசெய்யப்பட்ட பிரபல நடிகர் ரயன் வேன் ரோயனுடன் மேலும் நால்வர் டுபாயில் இருந்து நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு நாடுகடத்தப்பட்ட ஐவரும் நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த நிலையில், அவர்களைக் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் பொறுப்பேற்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உயிரைக் குடித்த கடன் அண்ணன் மீதுள்ள கோபத்தால் தம்பி கொடூரக் கொலை!

(அம்பலாங்கொடை)

அம்பலாங்கொடை பொல்வத்த பிரதேசத்தில் நேற்று கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபரொருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் 31 வயதுடைய மின்சார தொழில்நுட்பவியலாளரொருவரே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொலை செய்யப்பட்டவரின் மூத்த சகோதரர் நபரொருவருக்கு கடன் வழங்கியுள்ள நிலையில் குறித்த நபரால் இந்தக் கொலைச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# காற்றாலை மின்னுற்பத்திக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டும்!

## சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் வலியுறுத்து

(சாவகச்சேரி)

தென்மராட்சி-மறவன்புலோ கிழக்குப் பகுதியில் மக்களின் எதிர்ப்பை மீறி அமைக்கப்பட்டு வரும் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்திற்கு எதிராக சாவகச்சேரி பிரதேசசபையினர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டுமென சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சாவகச்சேரி பிரதேசசபையில் அண்மையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர்கள் இக் கோரிக்கையை உப தவிசாளர் மற்றும் செயலாளரிடத்தில் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக சபை உறுப்பினர்கள் மேலும் தெரிவிக்கையில்,

காற்றாலை மின்னுற்பத்தி நிறுவனத்தினர் மறவன்புலோ கிழக்கில் ஆரம்பத்தில் இரண்டு வீதிகளை மூடி அடைத்து தமது காற்றாலைச் செயற்பாடுகளை முன்னெடுத்தனர். தற்போது எல்லை வேலிகள் எதுவும் இல்லாத நிலையில் வீதியைக் காணியாக்க முற்படுகின்றனர். இருந்த பாதையை அடைத்து வேறு ஓர் பாதையையும் ஏற்படுத்தியுள்ளனர். வீதி எல்லை வேலிகள் அமைக்கப்பட வேண்டும். வீதியின் அகலம் 12 அடியாகக் காணப்படல் வேண்டும். மறவன்புலோ பகுதியில் காற்றாலை மின்னுற்பத்தி நிறுவனத்தால் இயற்கை வளங்கள் சூறையாடப்படுகின்றன.

இயற்கை வளங்களை அழித்து மின்சாரம் பெறுவதில் பயனில்லை. தினந்தோறும் குறித்த காற்றாலை நிறுவனத்தினரால் 30 ஆயிரம் லீற்றர் தண்ணீர் குளங்களிலிருந்து வகை தொகையின்றி எடுக்கப்படுகிறது.

மக்களின் எதிர்ப்பால் அச் செயற்பாடுகள் தற்போது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. பனை வடலிகள், கண்டல் தாவரங்கள் ஆகியனவும் வகை தொகையின்றி அழிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இயற்கை வளங்களை அழித்தும், பாதைகளை மூடியும் தன்னிச்சையாக செயற்பட்டு வரும் நிறுவனத்திற்கு எதிராக சாவகச்சேரி பிரதேசசபையினர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும். அத்துடன் காற்றாலையானது வீட்டுக் காணி எல்லையில் இருந்து 125 மீற்றருக்கு அப்பால் தான் அமைக்க முடியும். ஆனால் மறவன்புலோ பகுதியில் வீடுகளுக்கும் காற்றாலைக்கும் இடைப்பட்ட தூரம் 75 மீற்றர் ஆரைக்கும் குறைவாகவே உள்ளது. மறவன்புலோ பகுதியில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்க பொதுமக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து பிரதேசசபை, பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம், மாவட்ட செயலகம், வடக்கு ஆளுநர் செயலகம், ஜனாதிபதி செயலகம் மற்றும் சுற்றுச்சூழல் அதிகார சபை ஆகியவற்றிடம் முறையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# விவசாய ஊர்தி வாரம் இன்று சங்கானையில்

(யாழ்ப்பாணம்)

விவசாய ஊர்தி வாரத்தை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை சங்கானை சந்தைப் பகுதியில் விழிப்புணர்வு நிகழ்வு இடம் பெறவுள்ளதாக மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.அஞ்சலா தேவி தெரிவித்துள்ளார்.

விவசாய ஊக்குவிப்பு வாரத்தை முன்னிட்டு 4-10 ஆம் திகதி வரை இடம்பெறும் நிகழ்வுகளில் பயிர்ச் செய்கை தொடர்பான விழிப்பூட்டலும் நோய் சிகிச்சை முறைகள் பற்றி விரிவாக விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்படும். இந் நிகழ்வில் விவசாயத் தகவல் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் பணிப்பாளர் இ.பெரியசாமி, மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் சங்கானை பிரதேச செயலர் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

## போதைப்பொருள் கடத்தல்; இலஞ்ச ஊழல் குறித்து

# பொலிஸாரின் கௌரவத்தை பாதுகாக்க வேண்டும்



(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல், இலஞ்ச ஊழல் தொடர்பில் குற்றம்சாட்டப்படுவோர பொலிஸ் அதிகாரிகள் குறித்து தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினர் அவதானம் செலுத்தி அவர்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு பொலிஸாரின் கௌரவத்தையும் மதிப்பையும் பாதுகாக்க வேண்டுமென தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு சபாநாயகர் ஆலோசனை வழங்கினார்.

சபாநாயகர் கருஜெயசூரியவிற்கும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்றது.

இச்சந்திப்பில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் உட்பட ஆணைக்குழுவின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

அத்துடன் குறித்த சந்திப்பின் போது கடந்த காலங்களிலே பொலிஸார் மீது சுமத்தப்பட்டு வந்த குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் மக்கள் மத்தியிலே காணப்படும் பொலிஸார் தொடர்பான அதிருப்தி நிலைப்பாடுகள் குறித்தும் பொலிஸ் ஆணைக்குழுவிடம் கருத்துத் தெரிவித்த சபாநாயகர், இது தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து பொலிஸார் மீது மக்கள் மத்தியில் கௌரவத்தையும் மதிப்பையும் ஏற்படுத்த செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

213



அதேவேளை இவர்களின் உயர்ந்த கல்வித் தகைமைகளும் அறிவும் பணமும் தெற்கிலும் வெளிநாடுகளிலும் உள்ள பெரு நகரங்களில் பெற்ற நகரமயமான மனப்பாங்கும் தமிழர் சமூகத்தில் நிலவிய சாதிய முறைமையில் எவ்விதத் தாக்கத்தையுமே ஏற்படுத்தவில்லை.

உண்மையில் கல்வியினால் கிடைத்த அந்தஸ்து , செல்வம், உத்தியோகம் என்பனவும் தெற்கின் ஏனைய உயர் மட்டத்தினருடன் இவர்களுக்கிருந்த தொடர்புகளும் சாதிய முறைமையில் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதற்குப் பதிலாக தமிழ்ச் சமூகத்தில் இன்னுமோர் சாதிய முறைமையை உருவாக்கி அதை நடைமுறைப்படுத்தவே பயன்பட்டது.

இந்த வகுப்பு முறைமை ஏற்கனவே சமுதாயத்தில் உயர் நிலையிலிருந்த சாதியினரை மேலும் பலப்படுத்தி தமிழர் சமூகத்தில் அவர்கள் ஓர் ஆதிக்க சக்தியாக மாற வழி வகுத்தது.

கல்வியின் காரணமாக ஓரளவு சமூகச் சீர்திருத்தம் காணப்பட்ட போதிலும் இது சாதியை அல்லது வகுப்பை அடித்தளமாகக் கொண்டிருக்காது தனிப்பட்ட மனிதரளவிலேயே இருந்து சாதி, வகுப்பு என்பனவற்றின் கட்டுமானத்தில் காணப்பட்ட பரம்பரை மரபை எவ்வகையிலும் மாற்றவில்லை.

மேலும் இந்த உயர் மட்டத்தினர் எப்போதாவது தீபகற்பத்துக்கு வருகை தந்தபோதிலும் இந்தப் பிரதேசத்தின் பழைமைவாதிகளை இவர்களின் பிரசன்னம் பெரிதாகப் பாதிக்கவில்லை.

இவர்களது செல்வாக்குச் சில குடும்பங்களின் தனிப்பட்ட சிலரிலேயே காணப்பட்டதன்றி வெகுசன மத்தியில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

இருந்தபோதிலும் விடுமுறை காலத்திலும் கொண்டாட்ட காலத்திலும் இவர்கள் அடிக்கடி மேற்கொண்ட வருகை குடும்ப உறவுகளைப் பலப்படுத்தியது.

இவர்களுக்கும் தீபகற்பத்தில் உள்ளவர்களுக்கும் இடையே இருந்த முக்கியமான தொடர்பு இவர்கள் தமது குடும்பங்களுக்கு அனுப்பிய பணம் ஒன்றே காரணம்.

> “வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் ஆசிரியர், எழுதுவினைஞர், வர்த்தகர் என்ற தானங்களில் இருந்தவர்கள் மேலும் செல்வாக்கும் அதிகாரமும் கொண்டவர்களாகி உயர் மட்டத்தினராகிய உடையார், விதானைமார், முதலியார் என்ப வர்களை அந்தஸ்தில் முந்திக் கொண்டனர்.மேலும் அடிப்படையில் நில வுடைமையாளர் மத்தியில் உரு வான இந்தக் கல்வி பெற்ற வகு ப்பினர் கிராமத் தமிழர் மத்தியில் ஒரு புதிய உயர் மட்டமாக உருவெடுத்தனர்”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

இப்பணம் அக்குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் குடும்ப வீடுகளைச் சீரன்மக்க உதவவும் குடும்பத்தின் அங்கத்தவர்களான சகோதர, சகோதரிகளுக்கு உயர்கல்வி வாய்ப்பை அளிக்கவும் குடும்பத்தின் பெண்கள் மணமுடிப்பதற்கு சீதனம், நன்கொடை போன்றவற்றிற்கு மொத்தமாக ஒரு தொகை கொடுப்பதற்கும் பயன்பட்டது.

இதேவேளை வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் ஆசிரியர், எழுதுவினைஞர், வர்த்தகர் என்ற தானங்களில் இருந்தவர்கள் மேலும் செல்வாக்கும் அதிகாரமும் கொண்டவர்களாகி உயர் மட்டத்தினராகிய உடையார், விதானைமார், முதலியார் என்பவர்களை அந்தஸ்தில் முந்திக் கொண்டனர்.

மேலும் அடிப்படையில் நிலவுடைமையாளர் மத்தியில் உருவான இந்தக் கல்வி பெற்ற வகுப்பினர் கிராமத் தமிழர் மத்தியில் ஒரு புதிய உயர் மட்டமாக உருவெடுத்தனர். கொழும்பையும் தெற்கையும் தளமாகக் கொண்டிருந்த மேற்கத்தேயமயமாகிவிட்ட தமிழர், தமிழர் மத்தியில் மட்டுமன்றி பொதுவாக இலங்கையிலேயே மென்மேலும் செல்வாக்கும் அதிகாரமும் பெற்றபோதும் அவர்களுடைய அரசியல் அதிகார அடித்தளம் இந்த உள்ளூர் தமிழ் உயர் மட்டத்தினரில்தான் முழுக்க முழுக்கத் தங்கியிருந்தது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தும் ஏன் அதற்கு முன்னதாகக்கூட தமிழரின் பெயரில் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புக்களைக் கருத்திற் கொள்ளும் போது இந்த அரசியல் விளையாட்டில் இவ்விரு உயர் மட்டத்தினரே பிரதான பாத்திரங்களாகத் தோன்றுகின்றனர்.

குறிப்பாக இலங்கையில் தமிழரின் சார்பில் இவ்விரு உயர் மட்டத்தினரும் காட்டிய ஈடுபாட்டில் இருபதாம் நூற்றாண்டின் முதலிரு தசாப்தங்களும் குறிப்பிடுமளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இக்காலகட்டமே இந்த ஆய்வின் இறுதிப்பகுதியாக அமையும்.

மேலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து தமிழர்களதும் தமிழ்ப் பிரதேசங்களதும் சமயம், கலாசாரம், மொழி, சமூகம், பொருளாதாரம் இவற்றின் நிலைமைகள் மென்மேலும் விருத்தியும் எழுச்சியும் அடைந்து செல்வதையே புள்ளிவிபரங்கள் காட்டி நிற்கின்றன.

அடுத்துவரும் காலப் பகுதிகளிலே இந்நிலைமைகள் அனைத்திலும் அரசியல் தலையீடும் தவிர்க்க முடியாத ஓர் அம்சமாகி விடுவதையும் அவதானிக்க முடிகிறது.

எனவே சமயம், கலாசாரம், கல்வி, தொழில், பொருளாதாரம், சார்ந்த தொடர்ச்சியான அபிவிருத்திகளை ஆராய்வதைத் தவிர்த்து அரசியல் எழுச்சியும் விழிப்புணர்வும் அடுத்த அத்தியாயத்தில் ஆராயப்படும். .

தேவை ஏற்படும் போது தமிழரின் சமயம், கலாசாரம், மொழி, கல்வி, தொழில், பொருளாதாரம் பற்றிய நிலைமைகள் இவ் அத்தியாயத்தில் கலந்துரையாடப்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரியின் மகனுக்கு மே மாதம் திருமணம்





(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹாம் சிறிசேன திருமணம் செய்யவுள்ள மணமகள் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

தஹாம் சிறிசேன பிரபல வர்த்தகரான அத்துல வீரரத்னவின் மகளான நிபுணி வீரரத்னவை திருமணம் செய்து கொள்ளவுள்ளார். எதிர்வரும் மே மாதம் தஹாம் சிறிசேன திருமண பந்தத்தில் இணைந்து கொள்ளவுள்ளார்.

கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் மே மாதம் 9ஆம் திகதி பிரமாண்டமாக திருமண நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிபுணியை நீண்ட காலமாக தஹாம் காதலித்து வந்துள்ளார். இலங்கையின் பிரபல வர்த்தகராக நிபுணியின் தந்தை செயற்பட்டு வருகின்றார்.

இரத்மலானையில் அவரது தந்தைக்கு பல தொழிற்சாலைகள் உள்ளன. மைத்திரி ஜனாதிபதி ஆவதற்கு முன்னரே மணமகளின் தந்தையுடன் தொடர்பு ஒன்று காணப்பட்டுள்ளது.

உயர் கல்வியின் போதே தஹாம் மற்றும் நிபுணிக்கு இடையில் தொடர்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் தஹாம் குடும்பத்துடன் வெளிநாடு சென்ற போதும் நிபுணியும் இணைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப நிலைமாற்று நீதி முறை அவசியம்

## ஜெஹான் பெரேரா வலியுறுத்து



(கொழும்பு)

தேசிய ஒற்றுமையை முழுமையாக கட்டி யெழுப்ப வேண்டுமானால் நிலை மாற்று நீதியை நடைமுறைப்படுத்த வேண்டும் என தேசிய சமாதான பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெஹான் பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு முன்வைக்கும் பரிந்துரைகளை நிறை வேற்றுவதற்கான சூழ்நிலைகளும் உருவாக்கிக் கொடுப்பதும் அவசியமாகும்.

எனவே தேசிய ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு தேவையான அனைத்துப் பணிகளையும் முன்னெடுக்க தேசிய சமாதான பேரவை தயாராகவுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

தேசிய சமாதான பேரவையால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இளைஞர்களுக்கான போட்டி நிகழ்வின் இறுதி நிகழ்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# வைத்திய கலாநிதி சிவராஜாவின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் வைத்திய கலாநிதி நடராஜா சிவராஜாவின் 31 ஆம் நாள் நினைவு தினமான இன்று 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் மாற்றுவலுவுடைய பிள்ளைகளின் இல்லத்திலும் புதிதாக அமைக்கப்பட்ட அலுவலகத்திலும் அவரது உருவப் படத்தை வைத்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெறும். (5)

# ஜனாதிபதியின் வாசஸ்தலத்துக்கு முன் உண்ணாவிரதம் இருந்தவர் விடுவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் வாசஸ்தலத்துக்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட, அகில இலங்கை உணவக உரிமையாளர் சங்கத்தின் முன்னாள் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் வாசஸ்தலத்துக்கு முன்பாக இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ், வாழைத்தோட்ட பொலிஸாரால் அவர் கைதுசெய்யப்பட்டு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். இதன் போதே நீதவான் லங்கா ஜயரத்ன மேற்கண்டவாறு உத்தர விட்டார்.

போதைப்பொருளைப் பயன்படுத்திவிட்டு, ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் முன்பாக வீதியை மறித்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார் என்றே பொலிஸார் குற்றம் சாட்டியிருந்தனர்.


எனினும் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு திருப்பும் வழியில், பாதசாரி கடவையில் அமர்ந்திருந்தே உண்ணாவிரதப் போராட்டத்தில் அவர் ஈடுபட்டிருந்தாரென, நீதிமன்றத்தில் நிரூபணமாகியது. அதனையடுத்தே அவர் நேற்று விடுவிக்கப்பட்டார்.

இது தொடர்பில் கருத்துரைத்த அசேல சம்பத்,

"பொய்யான குற்றச்சாட்டின் கீழ், தன்னை கைது செய்தமை, மனித உரி மைகளை மீறும் செயலாகும்.

ஆகையால், வாழைத்தோட்டப் பொலிஸாருக்கு எதிராக நட்ட ஈடுகோரி வழக்குத் தாக்கல் செய்யவுள்ளேன்" எனத் தெரிவித்தார். (இ-7)

# புகைத்தலுக்கு எதிராக யாழில் விழிப்புணர்வு





ஏப்ரல் முதலாம் திகதி முட்டாள்கள் தினத்தை முன்னிட்டு புகைப்பிடிப்பவர்களுக்கு பிறந்தநாள் கொண்டாடி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இவ் விழிப்புணர்வு நிகழ்வு யாழ்.நகரில் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டது. புகைப்பிடித்தல் முகத்தை அவலட்சணமாக்கும், பாலியல் பலவீனத்தை ஏற்படுத்தும், நோய் நொடியை தோற்றுவிக்கும் ஆகிய வாசகங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்களையும் பொதுமக்களுக்கு வழங்கினர். (இ-30)

# திஸ்ஸவுக்கு எதிரான வழக்கு 24 ஆம் திகதி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர், திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை சுருக்கமாக முடிவுக்கு கொண்டுவருவதற்கு முறைப்பாட்டாளர் மற்றும் பிரதிவாதி எடுக்கும் நடவடிக்கை தொடர்பில் இம்மாதம் 24 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த மனு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விகும் களுஆரச்சி முன்னிலையில் அழைக்கப்பட்ட போது இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பிரதிவாதியான திஸ்ஸ அத்தநாயக்க சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்க இந்ததிஸ்ஸ, வழக்கை முடித்துக் கொள்வது தொடர்பில் உரியவர் இறுதி அறிவிப்பை செய்வதற்கு திகதி வழங்குமாறு நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இரு தரப்பினரிடையே நல்லிணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும், வழக்கை சுருக்கமாக முடித்துக் கொள்ள முடியும் என்றும் அரச தரப்பு பிரதி சொலிசிற்றர் ஜெனரல் நீதிமன்றில் தெரிவித்தார்.

அதனடிப்படையில் குறித்த வழக்கை இம்மாதம் 24 ஆம் திகதி அழைக்க உள்ளதாகவும், அன்றைய தினம் வழக்கை சுருக்கமாக முடிவுக்கு கொண்டு வருவது சம்பந்தமாக அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தவறான ஆவணம் ஒன்றைத் தயாரித்து, அதனை ஊடகங்களுக்கு வெளியிட்டமை தொடர்பில், திஸ்ஸ அத்தநாயக்க மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கண்ணிவெடிகளை அகற்ற அவுஸ்திரேலியா நிதியுதவி

(கொழும்பு)

வடக்கில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் முயற்சிகளுக்கு நிதியுதவி செய்யவுள்ளதாக அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

இதற்காக மனிதநேய உதவிகளின் அடிப்படையில், ஒரு மில்லியன் டொலரை வழங்குவதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இரண்டு வருட காலத்திற்குள் இந்த நிதியை விடுவிக்கவுள்ளதாக அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

வடக்கில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் முயற்சிகளுக்கு இது உதவியாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# துர்க்காபுரம் மகளிர் இல்ல 37 ஆவது ஆண்டு நிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம் (சைவ ஆன்மீக மகளிர் விடுதிச்சாலை) 37 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக கணிதப் பேராசிரியா முன்னாள் விஞ்ஞான தொழில்நுட்பப் பீடங்கள் பீடாதிபதி சி.சிறிசற்குணராஜா, யாழ்.பல்கலைக்கழக மொழியியல்- ஆங்கிலத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி. சிவராணி சிறிசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை பிரதிப் பிரதம செயலாளர் திருமதி. சரஸ்வதி மேகநாதன், கௌரவ விருந்தினராக யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை ஓய்வுநிலை அதிபர் திருமதி. வேணுகா சண்முகரட்ணம் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தொண்டா–திகா மோதலை நிறுத்துங்கள்

# தோட்டத்துக்கு யானை என்ன செய்தது?

## மகிந்தானந்த மன்றில் கேள்வி



(கொழும்பு)

தொண்டமான்- திகாம்பரம் மோதலை நிறுத்திக்கொண்டு தோட்ட மக்களுக்கு தேவையான வேலைத்திட்டங்களை இணைந்து பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும். தோட்ட மக்கள் யானைக்கே வாக்களித்தார்கள். ஆனால் அரசாங்கம் தோட்ட மக்களுக்கு செய்யும் வேலைத் திட்டம் போதுமானதாக இல்லை என மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இந்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தின் அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு மற்றும் மலையக புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தோட்ட மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் பொறுப்பு அமைச்சர் திகாம்பரத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அவருக்கு ஒதுக்கப்பட்டிருப்பது 3 பில்லியன் ரூபாவாகும். இந்த நிதியில் அந்த மக்களுக்கு தேவையான வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க முடியாது. தோட்ட மக்கள் யானைக்கே வாக்களித்தனர். ஆனால் தோட்டத்துக்கு யானை என்ன செய்திருக்கின்றது.

அத்துடன் தோட்டங்களில் கல்வி, சுகாதாரப் பிரச்சினை இன்னும் இருக்கின்றது. பாடசாலைகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறை இருந்து வருகின்றது. பெருந்தோட்ட மக்களுக்கு ஆயிரம் ரூபாய் பெற்றுக்கொடுப்பதாக தெரிவித்தீர்கள். இறுதியில் இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் வெறும் 50 ரூபாய் பெற்றுக்கொடுக்கப்பட்டிருக்கின்றது. 50 ரூபாவுக்கு வெற்றிலை ஒன்றுகூட வாங்க முடியாது. அதற்கு 55 ரூபாய் தேவை. ஆனால் தோட்ட மக்களுக்கு ஆயிரம் ரூபாய் பெற்றுக்கொடுக்க எமது அரசாங்கத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அத்துடன் இராதாகிருஷ்ணனுக்கு அமைச்சுப்பதவி வழங்கியும் இன்னும் அவருக்கான பொறுப்புக்கள் வழங்கப்படவில்லை. இவ்வாறு இருந்தால் இன்னும் எஞ்சியிருக்கும் சில காலத்திலாவது தமிழ் மக்களுக்கு அவர் எவ்வாறு சேவை செய்ய முடியும்? அத்துடன் மனோ கணேசன் திறமையான அமைச்சர். ஆனால் அவருக்கு வழங்கப்பட்டிருக்கும் அமைச்சு அவருக்கு திருப்தியில்லை.

அதனால் மலையக தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் அடுத்த தேர்தலில் எங்களுடன் இணைந்து போட்டியிட முன்வரவேண்டும். அதன்மூலம் தமிழ் மக்களுக்கு நாங்கள் அனைவரும் இணைந்து சேவை செய்யலாம். அத்துடன் தற்போது ஆறுமுகன் தொண்டமானும் அமைச்சர் திகாம்பரமும் மோதிக் கொள்வதை நிறுத்திக்கொண்டு தோட்ட மக்களுக்கு தேவையான வேலைத் திட்டங்களை இணைந்து பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்து அமைச்சர் மனோகணேசன் தெரிவிக்கையில், எனக்கும் திகாம்பரத்துக்கும் இராதாகிருஷ்ணனுக்கும் சிறந்த அமைச்சுக்களே வழங்கப்பட்டிருக்கின்றன. எமது அமைச்சுக்கள் தொடர்பாக நீங்கள் தந்திரமான அன்பையே தெரிவிக்கின்றீர்கள் என்றார். (இ-7)

# இரண்டு அமைச்சுக்கள் மீதான விவாதங்களில் பங்கேற்காது அதிகாரிகள் அலட்சியம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு, புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு, தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் நடைபெற்றது. எனினும் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணிவரை அந்த அமைச்சுக்களுக்குப் பொறுப்பான செயலாளர்கள் உள்ளிட்ட முக்கிய அரசாங்க அதிகாரிகள் பாராளுமன்றத்துக்கு சமுகமளித்திருக்கவில்லை. அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஆசனங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

இவ்விடயங்களுக்குப் பொறுப்பான முக்கியமான அரசாங்க உத்தியோகத்தர்கள் நிதி ஒதுக்கீடு விவாதத்தை பார்வையிடுவதற்காக பாராளுமன்றத்துக்கு சமுகமளித்திருக்காமையானது பெரும் ஏமாற்றத் தையளித்திருப்பதாக சுட்டிக்காட்டிய இரத்தினபுரி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே, இந்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு எதிராக சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் துரிதமாக விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டுமென்றும் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேற்படி அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அரசாங்க உத்தியோகத்தர்களின் அலட்சியமானது பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்த அப்பாவி தமிழ் மக்களுக்கு கிடைக்கவுள்ள சேவை தொடர்பில் பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஹேஷா விதானகே எம்.பி.அரசாங்க உத்தியோகத்தர்கள் மீதான தனது அதிருப்தியை வெளியிட்டார்.

தமிழ், முஸ்லிம் மக்களுடன் தொடர்புபட்ட முக்கிய இரண்டு அமைச்சுக்களின் நிதி ஒதுக்கீடு தொடர்பிலான விவாதம் நடைபெறுகின்றபோதும் அந்த அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அரசாங்க உத்தியோகத்தர்கள் சமுகமளிக்காமை பெரும் ஏமாற்றத்தையளிக்கின்றது.

அமைச்சுக்களின் செயலாளர்கள் இல்லாத நிலையில் இரண்டு அமைச் சர்கள் மட்டும் இங்கு வந்து உரையாற்றும் நிலை பாராளு மன்றத்தில் உருவாகியுள்ளது. அரசாங்கம் எதுவும் செய்யவில்லையென மக்கள் குறை கூறுவது சரிதான்.

பாராளுமன்றத்துக்குக் கூட வரமுடியாதவர்கள் எப்படி தமிழ் முஸ்லிம் மக்களின் தேவைகளை நிறைவேற்றப் போகின்றார்கள். 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான வீடொன்றை நிர்மாணிப்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய் தரகுக் கூலி கேட்பதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பாராளுமன்றத்துக்கு வருகை தராத அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் இந்தத் தரகுக் கூலியுடன் தொடர்பு இருக்குமோ என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது. இந்த வீடுகள் சிறந்த தரத்தில் நிர்மாணிக்கப்படவில்லை. இவற்றின் சுவர்கள் உடைந்து விழும் நிலையில் உள்ளன. தோட்டப்புற தமிழ் மக்களை ஒதுக்கி வைக்காமல் அவர்களையும் இந்நாட்டின் பிரஜைகளாக மதித்து அவர்களின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

உண்மையில் இந்த நாட்டிலுள்ள முஸ்லிம் மக்களுக்காக எதுவும் செய்யப்படவில்லையென்றுதான் கூறவேண்டும். ஆகக்குறைந்தது பள்ளிவாசல்களுக்குக்கூட அரசாங்கம் இதுவரை எதையும் செய்யவில்லை.

இவ்விடயத்தை பிரதமரும் கவனத்திற்கொள்ள வேண்டுமென நான் கேட்டுக் கொள்கின்றேன். இலவசமாக கிடைக்கும் பேரிச்சம்பழங்களைக் கூட நாம் சரியாக விநியோகிப்பதில்லை.

இந்நிலை தொடர்ந்தால் இந்த அரசாங்கம் முஸ்லிம் மக்களின் ஆதரவை இழக்க நேரிடும். சிங்களவர்களைப் போன்றே தமிழ், முஸ்லிம் மக்களும் நடத்தப்பட வேண்டும். அவர்களின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-7)

# செய்தித்துளிகள்

## 9 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தம்

### ரயில்வே சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ரயில் சாரதிகள், கட்டுப்பாட்டாளர்கள், நிலையப் பொறுப்பதிகாரிகள், நிர்வாக மற்றும் ரயில் கண்காணிப்பு முகாமையாளர்கள் ஆகியோர் எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

நள்ளிரவு முதல் 48 மணிநேர வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட தீர்மானிக்கப்பட்டுள்ளது என ரயில் நடவடிக்கை கண்காணிப்பு அதிகாரிகளின் தொழிற்சங்க சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பாளர் லால் ஆரியரத்ன தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட தரத்தைச் சேர்ந்தவர்களுக்கு அமைச்சரவையால் அனுமதியளிக்கப்பட்ட எம்.பீ. 1 மற்றும் 2 சம்பளம் வழங்குவது தொடர்ச்சியாக தாமதமாவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே, 48 மணிநேர அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். (இ-7)

## கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் பரிதாப மரணம்!

(கரடியனாறு)

மட்டக்களப்பு கரடியனாறு காட்டுப்பகுதிக்கு வேட்டையாடச் சென்ற நபரின் கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்தமையால் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மொறக்கொட்டாஞ்சேனை பாடசாலை முன் வீதியைச் சேர்ந்த 25 வயதுடைய கருணாகரன் என்பவரே நேற்று முன்தினம் மாலை வேட்டையாடச் சென்றுள்ளார்.

வேட்டையாடச் சென்ற காட்டுப்பகுதியில் கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்தமையால் பலத்த காயமடைந்து மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபரின் சடலம் மட்டக்களப்பு பொது வைத்தியசாலையின் பிரேத பரிசோதனை அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## கஜமுத்துக்களுடன் இருவர் கைது

(சியம்பலாண்டுவ)

சியம்பலாண்டுவ - தம்கல்ல பிரதேசத்தில் விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த இரண்டு கஜமுத்துக்களுடன் இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சியம்பலாண்டுவ - தொம்பகஹவெல பிரதேசத்தைச் சேர்ந்த 50 மற்றும் 67 வயதுடைய சந்தேக நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 90 | 120 |
| தக்காளி | 50 | 50 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 110 | 100 | 80 |
| கோவா | 50 | 60 | 50 | 80 |
| கரட் | 80 | 100 | 80 | 120 |
| பூசணி | 30 | 20 | 25 | 40 |
| புடோல் | 80 | 60 | 70 | 80 |
| வாழைக்காய் | 70 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 70 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 65 | 80 |
| பாகற்காய் | 140 | 120 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 80 | 50 | 35 | 80 |
| லீக்ஸ் | 120 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 100 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 250 | 300 |
| போஞ்சி | 120 | 130 | 110 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | — | 35 | 50 |
| கீரை - 1பிடி | 25 | 30 | 20 | 40 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 130 | 140 | 100 | 120 |
| வெங்காயப்பூ | - | — | - | - |
| முள்ளங்கி | 60 | — | 35 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 50 | 20 | 10 | 20 |
| ஈரப்பலா | - | 50 | 110 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கஞ்சமகாராஜா



வந்தனபுரி என்ற நாட்டை ஆண்டு வந்தார் மன்னன் அறிவுடைய நம்பி. இவர் ஒரு கஞ்சப் பிரபு, பிசுநாறி. காசை எவருக்கும் எளிதில் கொடுக்க மனம் இல்லாதவர். இவருடைய அன்றாடச் சொந்த வேலைகளைப் பார்ப்பதற்கு இவர் நியமித்த எந்த ஆளுக்கும் இவர் வேலைக்குத் தக்க ஊதியம் கொடுக்காததால், இவரிடம் எவரும் ஒரு ஆண்டுகாலம் கூட நிலைத்து நிற்பது இல்லை.

இதனால், இவர் தன் சொந்த வேலைக்குப் பணியாட்களை நியமிக்கும் முன்பு மூன்று கேள்விகளைக் கேட்பார். அவற்றுக்குப் பொருத்தமான விடை அளித்தவரையே வேலைக்கு அமர்த்திக் கொள்வார்.

மேலும், அவர் வேலைக்கு நியமித்தவர் தாமாகவே வேலையை விட்டுப் போனால் சம்பளம் எதுவும் கொடுக்க மாட்டார். ஆனால், மன்னன் தாமாகவே ஒருவரை வேலையை விட்டு நீக்கினால், வேலையாளுக்குச் சம்பளத்துடன் ஒரு பெரிய தொகையைக் கொடுப்பதாகச் சொல்வார். அத்துடன், அவரிடம் வேலை பார்ப்பவரைப் பிழிந்து எடுத்து விடுவார்.

இத்தகைய வேலைக் கொடுமை தாங்காமல் அவரிடம் தொடர்ந்து நீண்ட நாட்கள் வேலை செய்ய யாராலும் முடியாது. கொடுமை தாங்காமல் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்ற நிலையில் வந்த தடம் தெரியாமல் அவனவன் வேலையை விட்டுச் சென்றதுதான் வரலாறு. அவராக யாரையும் இதுவரை வேலையை விட்டு நிறுத்தியது இல்லை. பல நூறு வேலையாட்கள் வந்து, மன்னரின் சிக்கனம், சிடுமூஞ்சித்தனம் மற்றும் அவருடைய தீவிர நச்சரிப்புத் தாங்காமல் வேலையை விட்டுச் சென்றவர்கள் தான் உண்டு.

இந்த நிலையில், இவருடைய அந்தரங்கக் காரியதரிசியாக இருந்தவர் இவரையும் ஏமாற வைத்துவிட எண்ணினார். ஒரு காது கேளாதவரை இவரிடம் எப்படியாவது வேலைக்கு அமர்த்தி, அவனை இவர் வெளியேற்ற, பெரும் தொகையும் சம்பளமும் பெற்றுப் போகச் செய்யத் திட்டம் போட்டார். அதன் பலன் தான் காது கேளாத உதயா என்பவனை மன்னன் முன்பு கொண்டு வந்து நிறுத்தினார். உடனே அவர் உதயாவிடம் முதல் கேள்வியைக் கேட்டார்.

"ஒரு தடவை போனாலும் எளிதில் நாம் அதைப் பெறலாம். அது எது?" எனக் கேட்க, "அது பணம்!" எனப் பதில் சொன்னர்ன் உதயா.

"ஒருமுறை போனால் பலமுறை கிடைக்காதது எது?" என்றான் மன்னன்.

"இரவும், பகலும்!" என்றான் உதயா.

மூன்றாவது கேள்வி. "உதவி செய்த ஒருவனுக்கு உதவி பெற்றவன் எத்தனை காலம் கடன் பட்டிருக்க வேண்டும்?"

"உயிர் உள்ளவரை!" என்றான் உதயா! இவ்வாறு மூன்று கேள்விகளுக்கும் சரியான விடை சொன்னதால், உதயாவை உடனடியாக மிகுந்த திருப்தியுடன் வேலைக்கு வைத்துக் கொண்டார். எனினும், மறுநாளே மன்னனுக்கு இவனுக்கு காது கேட்காது என்ற விடயம் தெரிய வந்தது.

உடனே உதயாவை மன்னன் ஓர் ஆசனத்தில் ஆர அமர இருத்தி மிகவும் ஆர்வத்துடன் ஒருசில கேள்விகளைப் பொறுமையாகக் கேட்டு விளக்கம் பெற வேண்டும் எனத் தீர்மானித்தார். மிகவும் ஜாடை காட்டியும் வெடிக்கும் சப்தத்தில் கீழ்க்கண்ட வினாக்களை மன்னன் உதயாவிடம் கேட்டார்.

"அப்பா... இடி இடித்தாலும் எள் அளவும் கேட்காதவனாக நீ இருக்கிறாய். நீ எனக்கு ஏற்பட்ட சந்தேகத்தை நிச்சயம் நிவர்த்திக்க வேண்டும் என்ற முடிவில் தான் நான் உன்னை உட்கார வைத்துச் சில கேள்விகளைக் கேட்கிறேன். நீ பதில் சொல்!" என்றார்.

அதற்கு ஆமோதித்துத் தலை அசைத்ததுடன், "மன்னா! கேள்விகளைக் கேளுங்கள்!" என்றான்.

"நீ நேற்று என் கேள்விகளுக்கு எப்படிச் சரியான பதிலைச் சொன்னாய்?" என்று வினவினார்.

"நீங்கள் கேட்ட கேள்விகள் என் காதில் நன்றாக விழுந்ததே. உங்கள் முதல் கேள்வி. "உனக்கு என்ன வேண்டும்?' என்றீர்கள். "பணம்' என்றேன். இரண்டாவது கேள்வி, "எப்போது வேலை செய்வாய்?'' என்பதற்கு, "இரவும் பகலும்'' என்றேன். மூன்றாவது கேள்வி, "எவ்வளவு காலம் வேலை செய்வாய்?" எனக் கேட்டீர்கள். "உயிர் உள்ளவரை" என விடை அளித்தேன்," என்றான்.

இவனை வைத்து வேலை வாங்குவது மிகவும் சிரமம் என்று கருதி ஒப்பந்தப்படி பெரும் தொகையைக் கொடுத்துக் கெஞ்சிக் கூத்தாடி அவனை வழியனுப்பி வைத்தார் மன்னர்.

அதில் இருந்து அவர் யாரையும் ஏமாற்றுவது இல்லை. மன்னனுடைய அந்தரங்கக் காரியதரிசிக்கு மிகவும் சந்தோசம் ஏற்பட்டது.

## அறிந்துகொள்வோம்

- நம் உடலின் 10 ஆயிரம் செல்களை ஒரே ஒரு குண்டூசி முனையில் நிரப்பி விடலாம்!
- மூளை அனுப்பும் செய்திகள் நரம்புகள் வழியாகப் பயணிக்கும் வேகம் மணிக்கு 312 கிலோமீற்றர்.
- இந்த நொடியில் உங்கள் வாயில் 10 இலட்சத்துக்கும் அதிக பக்றீரியாக்கள் குடியிருக்கின்றன!
- கரப்பான்பூச்சிகளால் நீருக்கடியிலும் 15 நிமிடங்கள் தாக்குப் பிடித்து உயிர்வாழ முடியும்.
- 5 ஆயிரம் ஆண்டுகள் வயதான பிரமிடுகள் மட்டுமல்ல... அதே வயதான மரமும் பூமியில் உள்ளது.
- இரையைத் துரத்தும் சிறுத்தை, தரையில் கால் படாது காற்றில் இருக்கும் நிலையிலேயே, தன் திசையை மாற்றிக்கொள்ளும் திறமை படைத்தது.

## பொது அறிவு தகவல்கள்

- பருவநிலை மாற்றங்கள் காரணமாக காற்றின் வேகம் அதிகரித்துள்ளது . இதனால் பறவைகளின் பறக்கும் வேகமும் கூடியுள்ளது.
- நீலத்திமிங்கலம் போகிற போக்கிலேயே பிரமாண்ட மீன் கூட்டங்களை உறிஞ்சி விழுங்கி விடும். ஒரு நாளைக்கு சுமார் 4 தொன்!
- தெள்ளுப்பூச்சியால் (Flea) உணவில்லாமல் 100 நாட்கள் வரை வாழ முடியும்!
- பச்சோந்தியால் தன் மனநிலைக்கு ஏற்பவும் நிறத்தை மாற்றிக் கொள்ள முடியும்.
- புலியால் ஒரேமுறை 27 கிலோ தீனியை உள்ளே தள்ள முடியும்.
- பழுப்பு வௌவாலால் ஒரு மணி நேரத்தில் கொசு அளவிலுள்ள 1,200 பூச்சிகளைத் தின்ன முடியும்!
- கொறிக்கும் எலிகளும் அதிக ஊட்டச்சத்துகளைப் பெறுவதற்காக, தம் கழிவையே தின்னுவதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்தவன் இருக்க அம்பை நோவான் ஏன்
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தெரிவிக்க வேண்டியவருக்கு தெரிவிப்பதுதான் நன்மை தரும்

வடக்கு கிழக்கு ஜனாதிபதி அபிவிருத்தி செயலணி நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை ஏற்றிருந்தார்.

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர்கள், படைத்தரப்பினர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இக்கூட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் படையினர் ஆக்கிரமித்துள்ள நிலம் குறித்து கருத்துரைத்த படையினர் இன்னும் சில நூறு ஏக்கர் நிலங்கள் மட்டுமே படையினர் வசம் இருப்பதாகக் கூறினர்.

எனினும் இவ்விடத்தில் குறுக்கிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், சில நூறு ஏக்கர் நிலம் என்பது பொய்யான தகவல் என்று குற்றம் சாட்டினர்.

இருந்தும் இராணுவம் வைத்துள்ள நிலத்தின் அளவு பற்றிய சரியான புள்ளி விபரம் கூட்டமைப்பிடமும் இருந்திருக்க வில்லை என்பது வேறுவிடயம்.

எதுவாயினும் இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள நிலத்தில் ஒரு பகுதியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுவித்தவர் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதேநேரம் வடக்கு கிழக்கில் பண்டயினர் தாம் கபளீகரம் செய்து வைத்துள்ள நிலத்தின் அளவு பற்றி ஜனாதிபதிக்குப் பொய்யான தகவலை வழங்கியுள்ளனர் என்பதும் இங்கு கவனிக்கத்தக்க விடயமாகும்.

காணி அபகரிப்பில் மட்டுமன்றி காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் யுத்த காலத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆகிய விடயங்களிலும் படைத்தரப்பு பொய்யுரைப்பது தெரிந்த உண்மை.

இவ்வாறு படையினர் பொய்யுரைப்பது நீண்டு நிலைப்பதற்குக் காரணம், தமிழர் தரப்பில் சரியான தகவல்கள் கைவசம் இல்லாமையும் எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலம் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது; எத்தனை ஆயிரம் பேர் போரில் கொல்லப்பட்டனர்; காணாமல் போனவர்களின் விபரங்கள் போன்றவற்றை தென்பகுதிக்கு எடுத்துரைக்க நம் அரசியல் தரப்புகள் தவறியமையும் படையினர் பொய்யுரைப்பதற்குக் காரணமாக அமைகிறது.

எங்கள் நிலைமைகளை ஜனாதிபதிக்கும் தென்பகுதி அரசியல்வாதிகளுக்கும் எடுத்துரைப்பதுடன் சிங்களப் பத்திரிகைகள், சிங்களத் தொலைக்காட்சி சேவைகள், சிங்கள இணையத்தளங்கள் என்பவற்றினூடாக உண்மை நிலைமையை – தமிழ் மக்களின் அவலநிலைமையை, புள்ளி விபர ரீதியாக ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

இதனைச் செய்வதன்மூலம் நேர்மையான – இன ஒற்றுமையை விரும்புகின்ற சிங்கள மக்களேனும் உண்மையை அறிந்துகொள்வர்.

ஆனால் எங்கள் அரசியல்வாதிகள் எங்களுக்கு நடந்த இழப்புக்களை தேர்தல் காலங்களில் மட்டும் எங்களுக்கு எடுத்துரைப்பர்.

இந்த எடுத்துரைப்பால் ஏதேனும் நன்மை உண்டா என்ன? எதையும் தெரிவிக்க வேண்டியவருக்குத் தெரிவிப்பதுதான் நன்மை பயப்பதாக இருக்கும்.

# தமிழ் பொலிஸார் மூலமே நல்லிணக்கத்தை வலுப்படுத்த முடியும்

## பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

நாட்டின் சகல பகுதிகளிலும் தமிழ் பேசும் பொலிஸ் அதிகாரிகளை நியமிப்பதன் ஊடாகவே நல்லிணக்கத்தை வலுப்படுத்த முடியும் என மகிந்த அணி தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் மீதான குழு நிலை விவாதம் தற்போது பாராளுமன்றத்தில் இடம் பெற்று வருகின்றது.

இந்தகுழு நிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே மகிந்த ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் கடமையாற்றும் வகையில் தமிழ் பேசும் பொலிஸ் அதிகாரிகள் அதிகளவில் நியமிக்கப்பட வேண்டும் எனவும், இதுகுறித்து அரசாங்கம் முன்னெடுத்து வரும் செயற்பாடுகளை வரவேற்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நாடளாவிய ரீதியிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழியில் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளும் வகையில் தமிழ் மற்றும் சிங்கள மொழி பேசக் கூடிய அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இதன் ஊடாகவே நாட்டில் நல்லிணக்கத்தை மேலும் வலுப்படுத்த முடியும் எனவும் அவர் இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் பொலிஸில் இணைந்து கொள்ள விரும்பாவிட்டால், மலையகத்தில் தமிழ், சிங்கள மொழி பேசும் இளைஞர்கள் அதிகளவில் உள்ளார்கள்.

எனவே அவர்களை இணைத்துக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (ம-3)

## மகளிர் தின விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் இ.றோட்டறிக்கழக அனுசரணையுடன் காந்தி சனசமூக நிலையம் நடத்தும் மகளிர் தின விளையாட்டு போட்டி நிகழ்வு இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு காந்தி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் திருமதி கயானா மயூரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி விஜோஜிதா கௌசிகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-10)

## செல்லப்பா சுவாமிகளின் குருபூசை தினம் நாளை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகளின் 104 ஆவது குருபூசைத் தினம் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையுடன் நல்லூர் தேரடிக்கு முன்பாக அமைந்துள்ள நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து நாற்சிந்தனை பாடல்கள் இடம்பெற்று மு.ப 11.30 மணிக்கு விசேட பூசையும் தேரடியில் விசேட பூசையும் இடம்பெறவுள்ளதோடு மகேஸ்வர பூசையும் இடம் பெறவுள்ளது. (ம-3)

## மஸ்கெலியாவில் சாதிக்கலவரம் இளைஞன் மீது வாள்வெட்டு!

(மஸ்கெலியா)

மஸ்கெலியா குமரித் தோட்டத்தில் இடம்பெற்ற திருவிழாவின் போது வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறி குறித்த சம்பவம் சாதிக் கலவரமாக மாறியுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற குறித்த சாதிக்கலவரத்தின் போது கமல் என்ற இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருவிழாவுக்காக வெளியிடங்களில் இருந்து சென்ற கும்பல் ஒன்று கல்வீச்சுத் தாக்குதலில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த சம்பவத்தை கேள்வியுற்று அங்கு சென்ற பொலிஸாரின் வாகனம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 'இறை நாமம்' சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் மஹோற்சவத்தை முன்னிட்டு தினசரி இரவு 8 மணி தொடக்கம 9 மணிவரை ஆன்மீக சொற பொழிவுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் இன்று வெள்ளிக்கிழமை 15ஆம் திருவிழாவை முன்னிட்டு தி.பிரதீபனின் "இறைநாமம்" என்ற தலைப்பில் ஆன்மீக சொற்பொழிவு இடம்பெறும்.

இவர் யாழ்ப்பாண புகையிரத நிலையத்தின் பிரதான புகையிரத நிலைய அதிபராவார். (5)

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

மரணபயம் தலைக்கு மேல் இருக்கின்றது. எந்தக் காரணத்தாலும் அது வரும். எந்தக் கணத்திலும் வரும். மேலும் எறிந்த கல் கீழே விழாமற் போகாது. அது போல் உடம்பெடுத்த நாம் மரணமடைந்தே தீருவோம்.

அறியாமை தேயத் தேய துன்பம் தொலையும். அறிவு வளர வளர இன்பம் வளரும். இந்த நுட்பத்தை அறியாமல் பலர் பொன்னாலும் பொருளாலும் பத்தை வளர்க்க நினைக்கிறார்கள். அது நெருப்பை நெய்யினால் அவிக்க முயல்வதை நிகர்க்கும்.

விவசாயத்தில் உயிர்க்கொலையால் பாவம் நேரும் பொழுது தானியத்தை வறியார்க்குச் சிறிது அளவாயினும் வழங்குதல் வேண்டும்.


இனி " நாம்" என்பது இந்த உடம்பு அன்று. உடம்பு நாம் குடியிருக்கும் வீடு. " நாம்" என்பது ஆன்மா.

அளவற்ற நிலம் உடையவனேயானாலும் அவன் உண்பது காற்படி அரிசிதானே. பல வீடுகள் ஒருவனுக்குச் சொந்தமாக இருப்பினும் அவன் படுப்பது ஆறடி நீளமுள்ள இடத்தில் தானே! (தொடரும்)

## திறன் வகுப்பறைத் திறப்பு விழா

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி திறன் வகுப்பறை திறப்பு விழாவும் காணி கையளிப்பு நிகழ்வும் இன்று வெள்ளி முற்பகல் 10 மணியளவில் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவர், ஆசிரியர் சங்க ஐக்கிய இராச்சிய கிளை தலைவர் கு.சபாரட்ணம், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி சிவதத்திரை சிவஞானம், கௌரவ விருந்தினர்களாக பாடசாலையின் பழைய மாணவர், ஆசிரியர் சங்க ஐக்கிய இராச்சியக் கிளை நிர்வாக சபை. உறுப்பினர் திருமதி கு.ரவீந்திரன் மற்றும் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் செலவி ஜெனி கணேசன் ஆகியோர் கலந்து கொள்வர். (5-29)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### ஓய்வும் செயலும்

கேள்வி: எங்கள் வேலைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதாயுள்ளது. எங்கள் குடும்பத்துடன் இருக்கப் போதுமான அளவு நேரமில்லை. நாங்கள் என்னசெய்வது?

ஸ்ரீஸ்ரீ: உங்களுடைய குடும்பததோடு தரமான நேரத்தை செலவழிக்கிறீர்களா? உங்களுடைய குடும்பத்தினரோடு இருப்பது அரை மணி நேரமாயிருந்தாலும் கூட குடுமபததினரின் தேவைகளை உளமாறநத அனபுடன முழுமையாகக கவனிககிறாகளா? நங்கள எவவளவு நேரம் குடும்பத்தோடு செலவழிக்கிறீர்கள் என்பது பெரிதல்ல. எப்படி, எவ்வளவு மனமார நேரத்தைக் கொடுக்கிறீர்கள் என்பதுதான் முக்கியமானது.

ஓய்வு தேவை எனும் நினைப்பு உன்னை ஓய்வில்லாமல் செய்கிறது.

நீ கடினமாக உழைக்க வேண்டுமே எனும் நினைப்பு உன்னைச் சோர்வடையச் செய்கிறது.

நீ கடினமாக [illegible] எனும் நினைப்பு தன்[illegible]தருகிறது. (முற்றும்)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஜாதக தோசம் நீங்க எந்தெந்த தெய்வத்தை வணங்க வேண்டும்?

லக்கினத்தில் இருக்கும் கிரகத்தை பொறுத்து ஒருவர் எந்த தெய்வத்தை வணங்கவேண்டும் எந்த மந்திரத்தை ஜெபிக்கவேண்டும் என்று பார்ப்போம்.

**சூரியன்**

ஒருவரது ஜாதகததில லகனததோடு சூரயன இருககும படசததில அவரகள சூரியனாரை வணஙக வேண்டும் அதோடு தினமும் "ஓம் சூர்ய நாராயணரே" என்ற மந்திரத்தை ஜெபிப்பதன் பயனாக ஜாதக தோஷங்கள் விலகும்.

**சநதரன**

ஒருவரது ஜாதகத்தில், லக்னத்தோடு சந்திரன் இருக்கும் பட்சத்தில் அவர்கள் மகாலட்சுமியை வணங்க வேண்டும்.

அதோடு தினமும் "ஓம் மகாலட்சுமியே நமஹ" என்ற மந்திரத்தை ஜெபிப்பதன் பயனாக ஜாதக தோஷங்கள் விலகும்.

**சுககரன**

ஒருவரது ஜாதகத்தில் லக்னத்தோடு சுக்கிரன் இருக்கும் பட்சத்தில் அவர்கள் அம்பாளை வணங்க வேண்டும். அதோடு தினமும் "ஓம் சக்தி" என்ற மந்திரத்தை ஜெபிப்பதன் பயனாக ஜாதக தோஷங்கள் விலகும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி
## திண்மக் கழிவகற்றல் தொடர்பான அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட வட்டாரங்களில் வசிக்கும் பொது மக்கள், உக்கும் கழிவுகளைத் தனியாகவும், உக்காத பொலித்தீன் பிளாஸ்ரிக் கழிவுகளைத் தனியாகவும், கண்ணாடிக் கழிவுகளைத் தனியாகவும், ஏனைய கழிவுகளைத் தனியாகவும் தரம்பிரித்து கீழ்க்குறிப்பிடப்படும் கால ஒழுங்கில் காலை 06:30 மணிக்கு முன்னர் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேற்படி தரம் பிரிக்கப்படாத கழிவுகள் எவையும் சேகரிக்கப்படமாட்டாது. எதிர்வரும் 2019.04.08 திங்கட்கிழமை தொடக்கம் இவ் விடயம் நடைமுறைப்படுத்தப்படும்.

| வட்டார இலக்கம் | வட்டாரம் | கிராமசேவகர் பிரிவு இல | கிராமசேவகர் பிரிவு | கழிவு அகற்றப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 01 | கம்பர்மலை | J/353 | உடுப்பிட்டி வடக்கு | ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை |
| 02 | வல்வெட்டி | J/355 | வல்வெட்டி | |
| | | J/356 | வல்வெட்டி மத்தி | |
| 03 | சமரபாகு | J/357 | சமரபாகு | |
| | | J/361 | கரணவாய் வடமேற்கு | |
| 04 | நவிண்டில் | J/360 | கரணவாய் வடக்கு | |
| 05 | வதிரி | J/375 | நெல்லியடி வடக்கு | ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமை |
| | | J/379 | அல்வாய் தெற்கு | |
| 06 | அல்வாய் | J/378 | அல்வாய் | |
| | | J/380 | அல்வாய் கிழக்கு | |
| 07 | அத்தாய் | J/377 | நெல்லியடி கிழக்கு | |
| | | J/381 | அத்தாய் | |
| 08 | நெல்லியடி நகரம் | J/362 | கரணவாய் மத்தி | ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை |
| | | J/376 | நெல்லியடி | |
| 09 | இமையாணன் | J/358 | இமையாணன் | |
| 10 | இமையாணன் மேற்கு | J/359 | இமையாணன் மேற்கு | |
| 11 | உடுப்பிட்டி | J/352 | உடுப்பிட்டி | ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை |
| | | J/354 | உடுப்பிட்டி தெற்கு | |
| 12 | கல்லுவம் மண்டான் | J/349 | கரணவாய் மேற்கு | |
| 13 | கரணவாய் | J/348 | கரணவாய் தெற்கு | |
| | | J/350 | கரணவாய் | |
| 14 | உச்சில் கப்புது | J/351 | கரணவாய் கிழக்கு | ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை |
| | | J/365 | கரவெட்டி தெற்கு | |
| | | J/382 | கப்புது | |
| 15 | கரவெட்டி வடக்கு மேற்கு | J/363 | கரவெட்டி மேற்கு | |
| | | J/364 | கரவெட்டி வடக்கு | |
| 16 | கரவெட்டி | J/366 | மத்தொனி | |
| | | J/367 | கரவெட்டி மத்தி | |
| 17 | துன்னாலை | J/372 | துன்னாலை | ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை |
| | | J/373 | துன்னாலை மத்தி | |
| | | J/374 | துன்னாலை மேற்கு | |
| 18 | கட்டைவேலி | J/368 | கரவெட்டி கிழக்கு | |
| | | J/369 | கட்டைவேலி | |
| 19 | துன்னாலை தெற்கு கிழக்கு | J/370 | துன்னாலை தெற்கு | |
| | | J/371 | துன்னாலை கிழக்கு | |

**முக்கிய குறிப்பு**

1. பிரதான வீதி, நகரப் பகுதி, சந்தைகளில் மேற்கொள்ளப்படும் நாளாந்தக் கழிவகற்றல் நடவடிக்கைகள் வழமைபோன்று நடைபெறும். இப்பகுதிகளிலும் கழிவுகளைத் தரம் பிரித்து அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் வைத்து ஒத்துழைப்புவழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.
2. பொலித்தீன் பிளாஸ்ரிக் கழிவுகள், கண்ணாடிக் கழிவுகள், ஏனைய உக்காத கழிவுகள் தனித்தனியாக ஒவ்வொரு மாதத்தின் 15-ம் திகதி அனைத்து வட்டாரங்களிலும் சேகரிக்கப்படும்.

**தவிசாளர்,**
**வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதே சபை,**
**கரவெட்டி.**

# ஹோலிக்கு கிடைக்குமா முதல் வெற்றி?

இந்தியாவின் 12வது பிரிமியர் தொடர் நடக்கிறது. இதில் இன்று நடக்கும் போட்டியில் ஹோலியின் பெங்களூர், தினேஷ் கார்த்திக்கின் கொல்கத்தா அணிகள் மோதுகின்றன.

இதுவரை ஒரு முறை கூட கோப்பை வெல்லாத ஹோலி அணி, இதுவரை பங்கேற்ற நான்கு போட்டியிலும் தோற்றுள்ளது. துடுப்பாட்டம், பந்துவீச்சு என எதுவும் சரியாக அமையவில்லை.

நான்கு போட்டியில் களமிறங்கிய போதும் இன்னும் சரியான வீரர்களை கண்டறிய முடியாமல் அணித் தலைவர் ஹோலி தவிக்கிறார்.

**சகால் ஆறுதல்**

பந்துவீச்சில் சுழற்பந்து வீச்சாளர் சகால் மட்டும் ஆறுதல் தருகிறார். 4 போட்டியில் 8 விக்கெட் வீழ்த்தியுள்ளார். மற்றபடி உமேஷ் யாதவ், மொகமட் சிராஜ், கிராண்ட்ஹோம் உள்ளிட்டோர் விக்கெட் வேட்டை நடத்துவதற்குப் பதில் ரன்களை வாரி வழங்குகின்றனர். முதல் வெற்றி பெற வேண்டிய நெருக்கடியில் உள்ள ஹோலிக்கு சொந்தமண் சுகம் தருமா என இன்று தான் தெரியும்.


**மிரட்டும் கூட்டணி**

கொல்கத்தா அணி மூன்று போட்டியில் இரண்டில் வென்றது. நிதிஷ் ராணா, உத்தப்பா, பின் வரிசையில் சிக்சர் மழை பொழியும் ஆன்ட்ரே ரசல் என துடுப்பாட்டத்தில் பலம் சேர்க்க காத்திருக்கின்றனர். தினேஷ் கார்த்திக் தன் பங்கிற்கு கலக்குகிறார். பந்துவீச்சில் குல்தீப், பியுஸ் சாவ்லா கூட்டணியுடன் வேகத்தில் கைகொடுக்க பிரசித் கிருஷ்ணா, கிறிஸ் லின் மற்றும் பெர்குசன் உள்ளனர்.

# மரண அறிவித்தல்

## சண்முகம் பொன்னுத்துரை

**பிறப்பு: 09.06.1930 - இறப்பு: 02.04.2019**



மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் பொன்னுத்துரை அவர்கள் கடந்த (02.04.2019) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான தருமலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி (சீனத்தி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லையா, சின்னத்தம்பி, கந்தையா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், இரஞ்சிதமலர் (மாலா - பிரான்ஸ்), இராசேந்திரம் (மணிவண்ணன் -நோர்வே), நித்தியானந்தன் (மனோ - கொலண்ட்), சூரியகுமார் (அப்புசி - லண்டன்), சூரியகுமாரி (பபி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தமூர்த்தி (பிரான்ஸ்), பவானி (நோர்வே), வசந்தமலர் (வசந்தி - கொலண்ட்), ஜெனித்தா (லண்டன்), பார்த்தீபன் ஆகியோரின் மாமனாரும், காயத்திரி-பாபு, வினோத்ராஜ், கஜானன், கம்சாயினி, சகானா, மதுசா, மதீஸ்வன், வாசவன், திவ்வியன் ஆகியோரின் அன்புப் பாட்டனும், ஜெனிஷா, திஷான் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (07.04.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**83, மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.**

**தகவல் : குடும்பத்தினர்**
**021 221 2076,**
**0770417962**

(8367)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 இளைஞர்கள்...

இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தன்னை கைது செய்ய முயற்சிப்பதாக தெரிவித்து அட்மிரல் வசந்த கரன்னகொட மனுத் தாக்கல் செய்திருந்தார்.

அதன்படி முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவை கைது செய்வதற்கு உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது. (ம-3)

## காணாமல் போ...

நேற்று மாலை கொழும்பிலுள்ள காணாமல் போனோருக்கான அலுவலகத்தில் இந்த சாட்சியத்தை பதிவு செய்தார். காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மண்டைதீவில் அமைந்துள்ள புனித தோமையார் தேவாலயத்திற்கு எதிர்ப்புறம் அமைந்துள்ள காணியில் அமைந்துள்ள கிணறு, செம்பாட்டு தோட்டத்திலுள்ள கிணறு, கடற்படை முகாமிற்குள் உள்ள கிணற்றில் மனித எலும்புக்கூடுகள் உள்ளதாக அந்த பகுதி மக்கள் கூறுகிறார்கள்.

1990ஆம் ஆண்டு ஊர்காவற்துறையில் இருந்து முன்னேறிய இராணுவம், அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகள் உள்ளிட்ட இடைப்பட்ட பகுதி இளைஞர்களை மனித கேடயமாக நகர்த்தி, மண்டைதீவிற்கு வந்ததாகவும், அங்கு 119 இளைஞர்களை சுட்டுக் கொன்று, கிணறுகளில் போட்டு மூடியதாகவும் அந்த கிராம மக்கள் குறிப்பிடுகிறார்கள்.

அதில் கொல்லப்பட்ட 119 இளைஞர்களின் பெயர் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. விடுதலைப்புலிகளின் காலத்தில் வெளியிடப்பட்ட அந்த ஆவணமே, மண்டைதீவு படுகொலை குறித்த ஆய்வுரீதியான ஆவணமாக கருதப்படுகிறது. அந்த ஆவணத்தையும் சி.சிறீதரன் எம்.பி நேற்று கையளித்தார். (ம-3-10)

## தமிழரை கண்டு...

என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வரவு-செலவு திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சு, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், தமிழர் தரப்பின் அச்சுறுத்தலை கண்டும் அஞ்சிவிட வேண்டாம். சர்வதேச நீதிமன்றத்தை அமைக்கக் கோரும் தமிழர் தரப்பின் கோரிக்கை இறுதி வரை கனவாகவே அமையும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## எச்சரிக்கை...

கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய இன்று நண்பகல் 12.12 அளவில் திக்வெல்ல, கெகனதுர, கோடவில மற்றும் மிதிகம ஆகிய பகுதிகளுக்கு நேரடியாக சூரியன் உச்சம் கொடுக்கும் என அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-3)

## 500 குடும்பங்...

இந்த உத்தரவுகளை அமுல்படுத்தும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யுமாறு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு உயர்நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது. மேற்படி தொகையை 45 நாட்களுக்குள் கிடைக்க ஏற்பாடு செய்யுமாறும் அறிறுத்தப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான பிரியந்த ஜயவர்தன, பிரசன்ன ஜயவர்தன மற்றும் எல்.டி.பி.தெஹிதெனிய ஆகியோர் முன்னிலையில், சுன்னாகம் அனல் மின்னுற்பத்தி நிலையத்திற்கு எதிரான வழக்கு நேற்று உயர்நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சூழல் மற்றும் கண்காணிப்பு மத்திய நிலையத்தின் தலைவர் ரவீந்திர குணவர்தன காரியவசம் இந்த அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருந்தார்.

சுன்னாகம் அனல் மின்னுற்பத்தி நிலையத்திலிருந்து வெளியேறும் எண்ணெய் மற்றும் கிறீஸ் ஆகியன குறித்த பிரதேசத்திலுள்ள கிணறுகளில் கலப்பதால் நீர் மாசடைவதன் ஊடாக குறித்த பகுதியில் வாழும் மக்களின் அடிப்படை உரிமை மறுக்கப்படுவதாக தெரிவித்து கடந்த 2015 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம், மின்னுற்பத்தி செயற்பாடுகளுக்கு 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்திருந்தது.

வட மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், வட மாகாண சபை மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் உள்ளிட்ட தரப்பினர் இந்த அடிப்படை மனுவின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3-10)

## தமிழ் மக்களின்...

மன்ற எதிர்க்கட்சி அலுவலகத்தில் இடம் பெற்றது. இதன்போதே மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் முழுமையான ஆதரவுடன் மீண்டும் எனது தலைமையில் அரசாங்கம் அமைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## ஜனாதிபதி மைத்...

படாமல் முடிவடைந்துள்ளது. இன்று இடம் பெறவுள்ள வரவு -செலவுத் திட்ட இறுதி வாக்கெடுப்பு தொடர்பில், இந்தச் சந்திப்பில் எந்தமுடிவும் எடுக்கப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று பகல் பாராளுமன்றத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு இன்று காலை தனித்தனியாக கலந்துரையாடி தீர்மானம் எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## வரவு- செலவுத்...

மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் இறுதி வாக்கெடுப்பும் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவின் உள்ளக, உள்நாட்டலுல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இறுதி வாக்கெடுப்பும் இன்றைய தினம் இடம் பெறும். (ம-10)

## வடக்குக் கிழக்கி...

வலயம் 23ஆம் இடத்திலும் வடமராட்சி கல்வி வலயம் 38ஆம் இடத்திலும் தீவக வலயம் 95 ஆம் இடத்திலும் கிளிநொச்சி 96 ஆம் இடத்திலும் துணுக்காய் கல்வி வலயம் 97 ஆம் இடத்திலும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை 2017ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் கல்வி வலயம் அகில இலங்கை ரீதியில் 34 ஆம் இடத்தில் இருந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## முஸ்லிம் மக்க...

பத்து பிரச்சினையும் ஏற்பட்டிருக்காது. நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாக்க செயற்பட்டதாலே விடுதலைப் புலிகளால் விரட்டப்பட்டார்கள் என ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வரவு-செலவு திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சு மற்றும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு, உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

வில்பத்தை பாதுகாத்து சரணாலய பிரதேசத்தில் முஸ்லிம் மக்கள் குடியமர்த்தப்பட்டிருப்பதாக தெரிவித்து சமூகத்தை பிழையாக வழிநடத்த சிலர் முயற்சிக்கின்றனர். வில்பத்து சரணாலயம் அமைந்திருப்பது அநுராதபுரம் மற்றும் புத்தளம் மாவட்டத்திலாகும். ஆனால் தற்போது மக்கள் குடியமர்த்தப்பட்டிருப்பது மன்னார் மாவட்டத்துக்கு உட்பட்ட பிரதேசத்திலாகும் என்றார். (ம-3)

## அரசு இதுவரை...

த்திடம் கேள்வி எழுப்பியுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த கூட்டமைப்பினர், இறுதி யுத்தம் நிறைவடைந்து 10 ஆண்டுகளாகின்ற போதிலும் பொறுப்புக்கூறலை நிறைவேற்ற இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதாக இல்லை. பொறுப்புக் கூறலை நிறைவேற்றுவது தொடர்பாக பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து வருகின்றன.

குறித்த விடயம் தொடர்பாக இதுவரை ஒரு விசாரணையேனும் முன்னெடுக்கப்பட்டுள்ளதா? சர்வதேச நீதிபதிகளை அனுமதிக்க போவதில்லை என அரசாங்கம் கூறுகிறது. ஆனால், உள்ளூர் பொறிமுறையின் கீழும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. இதுவொரு தீவிர பிரச்சினையாகும் எனத் தெரிவித்தனர். (ம-3)

# தொடர்ந்து ஏமாற்றினால் தனிவழி செல்வோம்!

## ரணிலை எச்சரித்த சம்பந்தன்

(கொழும்பு)

நீங்கள் தொடர்ந்து எம்மை ஏமாற்றுவதை போல செயற்பட்டால் தனிவழி செல்வதை தவிர எமக்கு வேறு வழியில்லை என பிரதமர் தலைமையிலான அரச பிரதானிகளை பார்த்து மேசையில் அடித்து சொன்னார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

இரா.சம்பந்தன் இந்த எச்சரிக்கையை விடுத்தபோது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புன்முறுவலுடன் அவரை பார்த்துக் கொண்டிருந்தார். பின்னர், அவரது எச்சரிக்கையை கணக்கிலெடுக்காமல் பல்வேறு விடயங்களை பற்றி பேசினார்.

இந்த சுவாரஸ்ய சம்பவம் நேற்று நடைபெற்றது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு- பிரதமரிற்கிடையிலான கலந்துரையாடல் நேற்று பாராளுமன்ற கட்ட தொகுதியில் இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு அபிவிருத்திகள் தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டது. வடக்கு கிழக்கு அபிவிருத்திக்காக பனை நிதியம் என்ற பெயரில் 5ஆயிரம் மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 2ஆயிரத்து 500 மில்லியன் இந்த வருடமும், 2 ஆயிரத்து 500 மில்லியன் அடுத்த வருடமும் ஒதுக்கப்படவுள்ளது. மாவட்டம் தோறும் 300 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி போதாது என இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டினார். அரசியல் தீர்வும் இன்னும் வரவில்லை. அபிவிருத்தியிலும் நீங்கள் அசண்டையாக இருக்க முடியாது. போரால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிற்கு 300 மில்லியன் போதாது. ஆயிரம் மில்லியன் வரை உயர்த்த வேண்டும். அரசியல் தீர்வு முயற்சிகளிலும் அசமந்தமாக இருக்கிறீர்கள். அபிவிருத்தி விடயங்களிலும் நீங்கள் இப்படி ஏனோதானோ போக்கில் இருந்தால், நாம் எந்த முடிவையும் எடுக்க தயங்க மாட்டோம். தனிவழி செல்லவும் தயங்கோம் என்றார் கோபமாக.

சம்பந்தர் திடீரென இப்படி காரசாரமாக உரையாற்றிக் கொண்டிருக்க, அருகிலிருந்த எம்.ஏ.சுமந்திரன் அவரை சமாதானப்படுத்த முயன்றார். எனினும், இரா.சம்பந்தன் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் பேசினார்.

அவர் பேசிக்கொண்டிருந்தபோது, ரணில் விக்கிரமசிங்க எதுவும் பேசாமல் புன்முறுவலுடன் அவதானித்துக் கொண்டிருந்தார். பின்னர் ரணில் உரையாற்றியபோது, இரா.சம்பந்தனின் கோரிக்கைகளை கவனத்தில் எடுத்ததை போல காட்டிக் கொள்ளவில்லை. வடக்கு கிழக்கில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறோம் என ரணில் சொன்னார். அதை தவிர, சம்பந்தனின் கோபத்தை அவர் கவனத்தில் கொண்டதாக காண்பிக்கவில்லை. (ம-3)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்-முருகேசு அன்னக்கொடி
மண்ணில்: 15.07.1948
விண்ணில்: 16.03.2018

எங்கள் உயிர் மூச்சாக நீயிருந்து
ஏற்றமிகு வாழ்வளித்து மறைந்து
சென்றாய் எங்கிருந்த போதும்
உந்தன்ஆசி வேண்டும்
இறையடியில் சாந்தி பெற
வேண்டுகின்றோம்.

நாகர்கோவில் மேற்கு,
நாகர்கோவில்

இங்ஙனம்
குடும்பத்தினர்

(5995)

மஹஜன சம்பத
திகதி 2019/04/04
சீட்டிழுப்பு இலக்கம் 3890
ஆங்கில எழுத்து K
வெல்லப்பட்ட இலக்கங்கள் 1 5 8 7 5 9
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/04/04
சீட்டிழுப்பு இலக்கம் 533
லக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 02 27 38 72

கொவிசெத
திகதி 2019.04.04
சீட்டிழுப்பு இலக்கம் 2084
ஆங்கில எழுத்து S
வெல்லப்பட்ட இலக்கங்கள் 28 52 54 65
தேசிய லொத்தர் சபை

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1538 திகதி 04/04/2019
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 36 43 45 66
0293744
தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா பிரதிநிதி...

எதிர்க்கட்சி தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்றுள்ளது. இந்த சந்திப்பின்போது இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து ஆராயப்பட்டதாக மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

மேலும் மாகாணசபைத் தேர்தல் ஒருவருடகாலமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்பதை ஹனா சிங்கருக்கு இதன்போது மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியிருந்தார். (ம-3)

## கணனி திருத்தம்

மிகக்குறைந்த சேவைக்கட்டணத்தில்உங்களின் கணனி, மடிக்கணனி என்பவற்றை எங்களிடம் திருத்திக் கொள்ளுங்கள்.

சேவைக்கட்டணம் - 400/= முதல் (8308)

தொடர்புகளுக்கு : 077 078 8877

## கணக்கீடு

A/L 2021 புதியபிரிவு

ஆரம்பம் நாளை 2 PM (8365)

S.தவா

பிரத்தியேக வகுப்பு

பிரம்படி ஒழுங்கை கொக்குவில்

077 239 5858

## D.C.M யாழ்நகர்

(வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகாமை)

A/L 2021

கலை, வர்த்தக புதிய பிரிவுகள்

ஆரம்பம் - 06.04.2019

நேரம் : காலை - 9.00 மணியளவில்

துறைசார் ரீதியாக யாழ் நகரில் தனித்துவம் மிக்க எமது ஆசிரியர் குழாமினர்

**கலைப்பிரிவு**

தமிழ் :- முன்னணி ஆசிரியர் (வழமையான ஆசிரியர்)

இந்து நாகரிகம் - T.ஸ்ரீஸ்

புவியியல் - P.S.V.தினேஸ்

அளவையியல் - T.T.நீதன்

வரலாறு - S.S.Y.பிரதீபன்

அரசறிவியல் - பொன்.சந்துரு

நா.அரங்கியலும் - R.வினோதன்

மனைப் பொருளியல் - S.மஜீபன்

கிறிஸ்தவ நாகரிகம் - C.திலீபன்

ஊடகக் கல்வி - K.கிருஸ்னா

I.C.T - T.லவேந்திரன்

விவசாய விஞ்ஞானம், விவசாய தொழில்நுட்பம் B.பாலசுதன்

**வர்த்தக பிரிவு**

பொருளியல் - S.ஜெயக்குமார்

கணக்கீடு - S.தவா

வணிகக் கல்வி - N.S.கபில்

தொலை பேசி இல :

077 011 9434

நிர்வாகி. (8332)

## கருத்தரங்கு தொடர் -⑥

06.04.2019

9 AM - 3 PM

வரி மதிப்பீட்டாளர்

இறுதிக் கருத்தரங்கு

9 AM - 4 PM

SLAS, SLEAS,

பதிவாளர், எழுதுநர், வருமான பரிசோதகர், சமய பாட ஆசிரியர், போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

புதிய விடயங்கள், நுட்பமான முறையில்

P.கமல்தாசன் SLPS

K.தெய்வேந்திரம் SLAS

C.அமல்ராஜ் SLAS

K.கீர்த்திராஜன் MA

PN.சுதர்சன் SLEAS

A.சுபாகரன் SLEAS

நாவலர் கல்வி நிறுவனம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

077 111 6739,

076 166 1986

## C.C.A

சுன்னாகம்

A/L 2021

கலைப் பிரிவுகள்

ஆரம்பம்

06.04.2019 சனிக்கிழமை

காலை - 8.00 மணி (8329)

## வடமாகாண வருமான பரிசோதகர் (RI), நீதிமன்ற MA, சமய பாட ஆசிரியர்

பரீட்சைகளுக்கான பொது உளச்சார்பு மற்றும் மொழித்திறன் வகுப்புக்கள்

ஆரம்பம்

06.04.2019

கோலாசிற்றி

234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

0771823534 (8362)

## போட்டிப் பரீட்சை வகுப்புகள்

• நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர்

• வருமான பரிசோதகர்

பிரிவு – I சனி 10.00 – 2.00

பிரிவு – II ஞாயிறு 9.00 – 1.00

ஜெயிலர் தரம் – II

• புனர்வாழ்வு உத்தியோகத்தர்

• சிறைக்காவலர்

பிரிவு – I சனி 9.00 – 1.00

பிரிவு – II ஞாயிறு 11.00 – 3.00

• ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

பிரிவு – I சனி 9.00 – 1.00

பிரிவு – II ஞாயிறு 10.00 – 2.00

பதிவாளர், புள்ளிவிபரவியலாளர், சட்டமாணி SLAS, SLEAS. வகுப்புகளும் வழமை போன்று நடைபெறுகின்றன.

யாழ் நகரில் விரிவுரையாளர் தவசேகரின் வகுப்பு இங்கு மட்டுமே. (C-5996)

0766883394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரிவீதி கொமர்ஷல் வங்கியருகில்)

## FLC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு (C-6930)

Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781

181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1

IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

## "மாபெரும் மலிவு விற்பனை"

சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு

"மகா சில்க்ஸ்" இல் மலிவு விலையில் புடவைகள் பெற்றுக்கொள்ளலாம்



| | | |
|---|---|---|
| கல்லு சாறி | - | 1500/= |
| சிக்குவின்ஸ் சாறி | - | 1000/= |
| நெற் சல்வார் (பெரியது) | - | 1500/= |
| நெற் சல்வார் (சிறியது) | - | 1000/= |

| | | |
|---|---|---|
| புதிய சாறி வகை | - 25% | கழிவு |
| புதிய ஸ்கேட் அன் பிளவுஸ் | - 15% | கழிவு |
| புதிய சல்வார் | - 20% | கழிவு |
| புதிய சிறுவர் ஆடைகள் | - 10% | கழிவு |

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கவுஸ் ஒவ் செலெக்ஷன் இல. 22J, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். 021 222 7675

பியூட்டி சில்க்ஸ் 69,69A, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம். 021 222 7675

மகா சில்க்ஸ் 32,40 நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொ.பே :021 222 7359 (C-5982)



## கனடா மோகனின் இடியப்ப, முறுக்கு மெசின் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்



வீட்டு கையியக்க மெசின்



வர்த்தக கையியக்க மெசின்



வர்த்தக மின் (Automatic) இடியப்ப மெசின்

தொடர்புகளுக்கு : 076 796 6000 (இலங்கை), 4164336006 (ரொரன்ரோ கனடா)

www.StringhopperMachine.com

Email : mo@college.ca (7939)

## FLC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்ச் DELF A1

V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம் 0779 789 456 021 221 7781

ஆரம்பம் : 06.04.2019 சனி மதியம் 12 மணி.

ஏனைய நிறுவனங்களில் கற்றோரும் இணையலாம். (C-5930)

## நெல்லியடி

உயர்கல்லூரியில் (HNB Assurance மேல்மாடி) சகலபோட்டிப் பரீட்சைக்குமான வகுப்புக்கள் நடைபெறுகின்றது.

தொடர்புக்கு : 077 435 0958 (8359)

## விஸ்டம்

தொழில் நுட்பக் கல்லூரி

இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தொழினுட்பப் பிரிவில் ஒவ்வொரு வருடமும் தேசிய, மாவட்ட முதல் நிலைச் சாதனையாளர்களை உருவாக்கி வருகின்ற அதே ஆசிரியர்களின் வழிகாட்டலில்

06.04.2019 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு

புதிய பிரிவு ஆரம்பம்

A/L 2021

தொழில் நுட்பம்

பொறியியல் தொழினுட்பவியல்

உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்

ICT, கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம், ஊடகக்கல்வி

நடைபெறுகின்றது

வினாத்தாள் வகுப்புக்கள்

A/L 2019

தொழில் நுட்ப பிரிவு மாணவர்களுக்கு

புதிய மாணவர்களுக்கு அனுமதிகள் வழங்கப்படும்

077 248 7774 (C-5968)





## வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக் கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (8340)

## ரலண்ட் அக்கடமி

Talent Academy

விசுவமடு மல்லாகம்

தரம் 06 - 11 வரை

இரண்டாம் தவணை ஆரம்பம்

06.04.2019 (சனி)

இலவசக் கல்விச் சுற்றுலா

(1ஆம் தவணை விடுமுறை காலம்) (8052)

## Techno World

தொழில்நுட்பப் பிரிவு

A/L 2021 ஆரம்பம்

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, இலகு கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்

06.04.2019 சனிக்கிழமை காலை 8.30

077 017 5346, 077 170 3549 வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (C-5942)

## DMI

A/L - 2K21

நாளை ஆரம்பம்

கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்

DMI JAFFNA காலை 9.00 மணி

DMI CHUNNAKAM மாலை 3.00 மணி (C-5957)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS (C-5917)

UK- 550 /=Kg

கனடா-900 /=Kg

ஜேர்மனி- 700 /=Kg

நெதர்லாந்து- 700 /=Kg

0768226240

• மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

V2 TRAVELS

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org